விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalaijaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 21 செவ்வாய்க்கிழமை (07.11.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழி உத்தியோகபூர்வமாகிறது

## ஒருமித்த — பிரிக்கப்பட முடியாத நாடு என்பதனையும் கூட்டமைப்பு ஏற்றுள்ளது

### திருமலையில் இரா.சம்பந்தன் உரை



(திருகோணமலை) வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியையும் ஏனைய ஏழு மாகாணங்களில் சிங்கள மொழியை யும் உத்தியோகபூர்வ மொழியாக பயன்படுத்தப்படும் விதத்தில் அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள எதிர்க் கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உத்தேச புதிய அரசியலமைப்பில் ஒருமித்த நாடு - பிரிக்கப்படமுடியாத நாடு என்பதனை நாம் ஏற் றுள்ளோம் என தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

## நாளாந்த தேவைக்கு எரிபொருள் உண்டு

(கொழும்பு)

பாவனையாளர்களின் நாளா ந்த தேவையை பூர்த்தி செய்யக் கூடிய வகையில் எரிபொருள் விநி யோகம் இடம்பெறும் என்று பெற் றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரண 24☛

## காற்றாடிக்குள் சிக்கி குடும்பப்பெண் பலி

(யாழ்ப்பாணம்)

வெங்காயம் உலர்த்தும் காற் றாடிக்குள் சிக்குண்டு உடல் சிதை வடைந்த குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

அச்சுவேலி, புத்தூர் 24☛

## யாழ்.பல்கலை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி மாண வர்களின் நிர்வாக முடக்கல் போரா ட்டத்தையடுத்து நிறுத்தப்பட்ட கலை, விஞ்ஞானம் மற்றும் முகா மைத்துவக் கற்கைகள் 23☛

## வழுக்கி விழுந்து இருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மழை வெள்ளத்தில் வழுக்கி விழுந்ததில் இருதயம் பாதிக்கப் பட்டு இரு முதியவர்கள் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளனர்.

அனலைதீவு 5 ஆம் வட்டார த்தை சேர்ந்த முருகன் பொன்ன ம்மா (வயது 80) என்பவர் கடந்த 31 ஆம் திகதி வீட்டின் பின்பக்கம் சென்ற போது மழை வெள்ளம் இருந்த பக்கமாக சென்ற 24☛

## மகிந்தவின் குற்றச்சாட்டுக்கு உரிய நேரத்தில் பதிலளிப்பேன்

### இரா.சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு க்கு எதிராக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு உரிய நேரத் தில் தக்க பதில் வழங்குவேன் என எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன கூறியுள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பல தடவைகள் நாங் கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின தலைவர் இரா.சம்பந்தனுடன் பேசியிருந்தோம். எனினும், அவர் அதனை நிராகரித்திருந்தார்.

அன்று சம்பந்தன், 24☛

## யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பஸ் புத்தளத்தில் விபத்து 7பேர் உயிரிழப்பு; 49பேர் படுகாயம்



24☛

### கற்றல் செயற்பாடுகளை தொடருங்கள்

## மருத்துவபீட மாணவர்களுக்கு பீடாதிபதிகள் கூட்டாக அழைப்பு

(கொழும்பு)

சைட்டம் நிறுவனம் தொடர்பில் அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை யின் பிரகாரம் பல்கலைக்கழக மரு த்துவ பீடத்தின் சகல மாணவர்க ளையும் உடனடியாக தங்களின் கல்விச் செயற்பாடுகளுக்குத் திரும் புமாறு அரச மருத்துவ பீடங்களின் எட்டு மருத்துவ பீடாதிபதிகள் கூட் டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழக மரு த்துவ பீடாதிபதி பேராசிரியர் ஜெனீ பர் பெரேரா, பேராதனை பல்கலை க்கழக மருத்துவ பீடாதிபதி பேராசி ரியர் வஜிர வீரசிங்க, ருகுணு பல் கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சமன் விஜயசுந்தர, யாழ்ப்பாணப் பல்கலைக் 23☛

## யாழில் போலி நாணயத்தாள்களை அச்சிட்ட இளம் தம்பதியினர் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ். கொழும்புத்துறை நெளுக் குளம் பகுதியில் போலி நாணயத் தாள்களை அச்சிட்ட கணவன் மற் றும் மனைவி ஆகிய இருவரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி நாணயத்தாள்களை அச்சிட பயன்படுத்திய இரு அச்சு இயந்திரங்களையும், மடிக்கணினி ஒன்றினையும், வருடி (ஸ்கானர்) ஒன்றினையும் பொலிஸார் 24☛

## அரச காணிகளில் குடியிருப்போருக்கு புதிய சட்டம்!

(கொழும்பு)

அரச காணிகளில் குடியிருப்பவ ர்களுக்கு காணி உறுதிகளை வழ ங்குவதற்காக நிபந்தனைகளைத் தளர்த்தி புதிய சட்டம் கொண்டுவரப் படும் என்று காணி அபிவிருத்தி அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

அரச காணிகளுக்கான 23☛

## எரிபொருளுக்காக மக்கள் முண்டியடிப்பு பணியாளர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் அனைத்து பாகங்களிலும் பெற் றோலை பெற்றுக்கொள்ளும் நோக் கில் நகரில் உள்ள எரிபொருள் நிர ப்பும் நிலையங்களுக்கு முன்னால் நேற்று திங்கட்கிழமை காலை தொடக்கம் மக்கள் நீண்ட வரிசை யில் வாகனங்களுடன் நின்றது டன், எரிபொருள் நிரப்பும் 23☛

### சந்திரிகாவின் மூளையில் கோளாறு

## நல்லிணக்கச் செயலணி பதவியிலிருந்து விலகுமாறு கூட்டு எதிர்க்கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

வன்முறை கலாசாரத்தை பின் னணியாகக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவை நல்லிணக்கச் செயலணி யின் தலைவர் பதவியிலிருந்து விலக்க வேண்டும் என்று முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த கூட்டு எதிர்க்கட்சி வலியுறுத்தியு ள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் மூளை குண்டுத் துண்டுகளுடன் செயற்படுவதால் அவரால் நல்லிணக்க செயற்பாடு களை சரிவர செய்ய முடியாது என்று தெரிவித்த பிவித்துரு ஹெல உறுமயவின் தலை 24☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கர்ப்பிணிப் பெண் படுகொலை வழக்கு அறிக்கைகளை மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பு

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை வழக்கு தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாரால் மேற்கொள்ளப் பட்டஅனைத்து புலன் விசாரணை அறிக்கை களையும் மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு பொலி ஸாருக்கு ஊர்காவற்றுறை நீதவான் நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் பிரதேசத்தில் வீட்டில் தனித்திரு ந்த ஏழுமாத கர்ப்பிணிப்பெண் இனந்தெரியா தோரால் கொலை செய்யப்பட்டிருந்தார். இதன் போது கருவுற்றிருந்த ஏழு மாத குழந்தையும் உயிரிழந்திருந்தது.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் இருவர் ஊர்காவற்றுறை பொலி ஸாரால் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன் றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தொட ர்பான வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது.

நேற்று நடைபெற்ற வழக்கில் பாதிக்கப்ப ட்டவர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, கடந்த வழக்கு தவணைகளின் போது இச்சந்தேக நபர்கள் சம்பவம் இடம் பெற்ற காலப் பகுதியில் மருதனார்மடப் பிரதேச த்தில் நின்றதாக கூறி சிசிரிவி காணொளி ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால் அக் காணொளியானது மருதனார்மடப் பிரதே சத்தில் பெறப்பட்டதல்ல எனவும், அது ஊர்காவற்றுறை பிரதேசத்திலேயே பெறப் பட்ட காணொளி எனவும் குறிப்பிட்டார்.

மேலும் இவ்வாறு காணொளியை மன் றுக்கு சமர்ப்பித்து மன்றை சந்தேக நபர்கள் தவறாக வழி நடத்த முயற்சிப்பதாகவும் குறிப் பிட்டார். இதனை தொடர்ந்து மன்றானது குறி ப்பிடுகையில், அவ் வாறு சந்தேக நபர் கள் மன்றை தவறாக வழிநடத்த முயற்சித் தால் அதற்குரிய பலனை அவர்கள் அனுபவிப்பார்கள் என குறிப்பிட்டது.

அதனை தொட ர்ந்து குறித்த வழக்கு தொடர்பாக ஊர்கா வற்றுறை பொலிஸா ரால் மேற்கொள்ள ப்பட்ட அனைத்து புலன் விசாரணை கள் தொடர்பான அறிக்கைகளையும் அடுத்த தவணையின்போதுமன்றுக்கு சமர்ப்பிக்க வேண்டும் எனவும், இவ்வழக்கின் சந்தேக நபர்களை எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும்,

அதுவரை இவ்வழக்கை ஒத்திவைக்கவும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற நீத வான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டார்.(ம-4)

## யா/அச்சுவேலி மத்திய கல்லூரி பகிரங்க ஏல விற்பனை

எமது கல்லூரியில் பாவனைக்கு உதவாத பொருட்கள் எதிர்வரும் 21.11.2017 (செவ்வாய்) அன்று காலை 10.00க்கு பகிரங்க ஏல விற்பனை இடம்பெறும்.

(சி-311) -அதிபர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மாகாணக் கல்வி அமைச்சு-வட மாகாணம்
நல்லாசிரியர் விருது-2017
(குரு பிரதிபா பிரபா)

மேற்படி விருதினைப் பெற்றுக்கொண்ட எமது பாடசாலையின் ஆசிரியர்
**திருமதி சகுந்தலா ஜெயசீலன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(சி-307)

ஆசிரியர் கழகமும் பாடசாலைச் சமூகமும்,
யா/தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி 2017

01.வலிகாமம் கிழக்கு பிரதேச சபை மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியினைக் கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப் பிடப்பட்டுள்ள வேலைத் திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத் தேசிக்கப்பட்டுள்ளது.

02.**தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் , வடமாகாணம்** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்தி ரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதிப்புனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.

03.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04.பொதுநிதிச் சுற்றறிக்கை 04/2016(1) இற்கமைவாக வடமாகாணத்தில் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ளதும் அட்ட வணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) பெயரிடப்படாததுமான கேள்வி யாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதுமாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

05.தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிட ப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்ட ப்பட்டுள்ளது.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூா** (தொலைபேசி இல.0212058866, 0212058867 பக்ஸ் இல 0212058866 e.mail-secveps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 2017.11.20-ம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணி வரை கேள்வி ஆவண ங்களை பார்வையிடலாம்.

07.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங் கில மொழியில் **செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்** எனும் இடத்திலிருந்து 2017.11.07-ம் திகதியிலிருந்து 2017.11.20-ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்ட ணமாக ரூபா.2000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08.கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி, புத்தூர்,** எனும் முகவரிக்கு 2017.11.21 திகதி மாலை 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உட னேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலை யில் திறக்கப்படும்.

09.கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறு பத்துமூன்று -23.01.2018) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.

10.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப் பட்டவாறு அமையும்.

11.கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் எமது அலுவலக மாநாட்டு மண் டபத்தில் 2017.11.14 ஆம் திகதி பி.ப 14.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தங்களது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

| தொ. இல | வேலை விபரம் | ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டு தொகை (Rs.)Mn (Without Vat) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 01 | ஏரந்தனை வீதி திருத்தம், புத்தூர் | NP/14/41(13)/PSDG/37/2017 | 4.34 | 1 மாதம் | C8 | 44,000.00 | 20.02.2018 |
| 02 | ஐயாவத்தை வீதி திருத்தம், கோப்பாய் | NP/14/41(13)/PSDG/38/2017 | 2.78 | 1 மாதம் | C8 | 28,000.00 | 20.02.2018 |

தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்
2017.11.06

(சி-316)

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பிரதான உணவகம் II ஐ நடாத்துவதற்கான விண் ணப்ப முடிவுத்திகதி 10.11.2017ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். முன்னர் விண்ணப்பித்தவர்கள் விண்ணப் பிக்கத்தேவையில்லை.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-315) 07-11-2017

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## அறிவித்தல்

**கலை, விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட மாணவர்கள்**

மேற்படி பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் யாவும் 13.11.2017ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும். விடுதிகளில் தங்கியிருக்கும் மேற்படி பீட மாண வர்கள் 12.11.2017 அன்று காலை தொடக்கம் விடுதிகளுக்கு திரும்புமாறு கேட் டுக்கொள்ளப்படுகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தை எல்லா மாணவர்களுக்கும் உட்புகுவதற்குத் தடைவிதிக்கப்பட்ட பிரதேசமாக அறி வித்திருந்தமை 12.11.2017 (ஞாயிற்றுக்கிழமை) ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் விலக்கப்படுகிறது.

30.10.2017 மற்றும் 31.10.2017 அன்று நடைபெறவிருந்த விஞ்ஞானபீடப் பரீட்சைகள் முறையே 13.11.2017 மற்றும் 14.11.2017 ஆம் திகதிகளில் நடைபெறும். இரண்டாம் அரையாண்டிற்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் 15.11.2017 ஆம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றன.

30.10.2017 ஆம் திகதியிலிருந்து நடைபெறவிருந்த முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட நடுஅரையாண்டுப்பரீட்சைகள் 13.11.2017 ஆம் திகதியிலிருந்து நடைபெறும்.

பதிவாளர் (சி-317)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி அனந்தீஸ்வரி (ரதி) மதியூகநாதன் (ஆசிரியை)**

ஆண்டு மூன்று அகன்றிட்ட வேளையும்
இன்றென எண்ணிடும் வேளையில்
நெஞ்சம் கனக்கிறது
நினைவுகள் தைக்கிறது
ஆண்டவன் அடியில் சாந்திபெற
பிரார்த்திக்கின்றோம்.
-குடும்பத்தினர்

ரதி மஹால்
கரணவாய் கிழக்கு

பிறப்பு:-05.08.1956
இறப்பு:-10.11.2014

(சி-318)

# மூன்று கோடி இலட்சம் கடன்

## நல்லாட்சி அரசு திணறல்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் எதிர்வரும் 2018, 2019ஆம் ஆண்டுகளில் மூன்று கோடி இலட்சம் கடன்தொகையை திருப்பி செலுத்த வேண்டியுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கவலையுடன் தெரிவித்துள்ளார்.



மாத்தறை-தெனியாய பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற காணி உறுதிப்பத்திரம் வழங்கிவைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"எதிர்வரும் 2018, 2019ஆம் ஆண்டுகளில் மூன்று கோடி இலட்சம் கடன்தொகை எமக்கு திருப்பி செலுத்த வேண்டியுள்ளது. அந்த பெருந்தொகை கடனை செலுத்தினால் மாத்திரமே எமக்கு முன்னோக்கி செல்லமுடியும்.

சிலர் இந்த கடனை செலுத்துவதை பிற்போடுமாறு சொல்கிறார்கள். ஆனால் அப்படி என்னால் செய்ய முடியாது. ஏனென்றால் அது அடுத்த பரம்பரையை போய் சேரும். அதனை நான் செய்ய விரும்பவில்லை" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இனவாதத்தையோ மதவாதத்தையோ நாங்கள் என்றுமே விரும்பவில்லை

## வியாழேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

நாங்கள் இனவாதத்தினையோ அல்லது மதவாதத்தினையோ என்றும் விரும்பவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் உள்ள பெரும்பான்மையின தலைவர்கள் சிறுபான்மை இன மக்களை தங்களுக்கு சமமாக மதிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு கிழித்தெறியப்படாவிட்டால் நாடாளுமன்றத்தின் மீது குண்டுவீச வேண்டும் என அரசியல்வாதியான விமல் வீரவன்ச கூறியிருக்கின்றார்.

அரசியலமைப்பினை ஆதரிப்பவர்களுக்கு மரண தண்டனை வழங்க வேண்டும் என முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் கூறுகின்றார். அரசியல்வாதியான தினேஸ் குணவர்த்தன கூட இந்த யாப்பினை நிறுத்த வேண்டும் என தனது இனவாத கருத்துகளை தெரிவித்தார்.

நாங்கள் இனவாதத்தினை விரும்பவில்லை. மதவாதத்தினை விரும்பவில்லை. நாங்களும் இந்த நாட்டுக்குரியவர்கள். நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகள்.

இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையின தலைவர்கள் சிறுபான்மை இன மக்களை தங்களுக்கு சமமாக மதிக்க வேண்டும். நேசிக்க வேண்டும். சமத்தும் உங்களது சிந்தனைகளில் வர வேண்டும் என தெரிவித்துள்ளார். (இ-7)

# திருப்பியனுப்பப்பட்ட எண்ணெய்க் கப்பல் திருமலையில் தரிப்பு

(கொழும்பு)

இலங்கை-இந்திய எண்ணெய் நிறுவனம் (எல்.ஐ.ஓ.சி.) பொய்யான பிரசாரத்தின் ஊடாக நாட்டில் எரிபொருள் நெருக்கடியை ஏற்படுத்தி திருப்பியனுப்பப்பட்ட எண்ணெய்க் கப்பலிலுள்ள எண்ணெய்யை நாட்டில் இறக்குமதி செய்ய முயற்சிக்கின்றதா? என்ற சந்தேகம் எழுந்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பொது ஊழியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும், அச்சங்கம் விடுத்துள்ள விசேட அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் கோரியுள்ள எண்ணெய்க் கப்பல் தாமதமாவதற்குரிய காரணத்தைக் கண்டறிந்து அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அச்சங்கத்தின் செயலாளர் டீ.ஜே. ராஜகருணா தெரிவித்துள்ளார். (இ-7)

# மாத்தளையில் சோகம்! எட்டு சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

மாத்தளையில் ஆற்றில் குளித்து கொண்டிருந்த நிலையில் காணாமல் போன எட்டு பேரினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வரையில் ஆறு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக்காலை இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து சுமார் அரை கிலோமீற்றர் தொலைவில், 7 மற்றும் 12 வயதான இரு பெண் பிள்ளைகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தாத்தன்டிய பிரதேசத்தில் இருந்து வருகை தந்த 12 பேர் மாத்தளை, லக்கல - எடன்வல, தெல்கமுவ ஆற்றில் குளித்து கொண்டிருந்த போது 8 பேர் காணாமல் போயிருந்தனர்.

இந்த சம்பவம் கடந்த நான்காம் திகதி நடைபெற்றிருந்த நிலையில் குறித்த பகுதியில் காணாமல் போனவர்களை தேடும் பணிகளில் கடற்படை சுழியோடிகள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் வரையில் ஆறு பேரின் சடலங்கள் மீட்கப்பட்டிருந்த நிலையில் தற்போது எட்டு பேரினதும் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளமையானது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (இ-7)

# அரசியலமைப்பு வரைவுத் திட்டம் உருவாக்கும் பணிகள் விரைவில்

## ஜயம்பதி எம்.பி.தகவல்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பு வரைவுத் திட்டம் உருவாக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரட்ண தெரிவித்துள்ளார்.



விரைவில் புதிய அரசியல் அமைப்பு குறித்த இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

இந்த இறுதி அறிக்கையில் உத்தேச வரைவுத் திட்டம் உள்ளடக்கப்படும். உத்தேச புதிய அரசியல் அமைப்பு உருவாக்குவது தொடர்பிலான முக்கியமான ஓர் கட்டம் எட்டப்பட்டுள்ளது.

மேலும், இந்த அரசியல் அமைப்பினை வேண்டாம் எனக் கோரும் தரப்பினர் தோல்வியடைந்த அரசாங்கத்தில் முக்கிய பதவிகளை வகித்தவர்கள் எனவும், அவர்கள் எதனைக் கொண்டு வந்தாலும் எதிர்ப்பார்கள் எனவும் ஜயம்பதி விக்ரமரட்ண சிங்கள ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

### பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தலைமையில்

# சைட்டம் குறித்து யோசனைகளை முன்வைக்க ஜனாதிபதியால் புதிய கண்காணிப்புக் குழு

(கொழும்பு)

மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) தொடர்பில் யோசனைகளை முன்வைக்க புதிய கண்காணிப்பு குழுவொன்று ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளது.



ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள 9 அங்கத்தவர்களை உள்ளடக்கிய இக்குழுவுக்கு பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தலைமை தாங்கவுள்ளார்.

சைட்டம் தொடர்பில் முன்னர் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்தவும், புதிய யோசனைகள் இருப்பின் அது பற்றி ஆராயவும் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சட்டவிரோத பணப்பரிமாற்ற புகார் ஷலில உள்பட நால்வருக்கு பிணை

(கொழும்பு)

விற்றேரா ஹாஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ஷலில முனசிங்க உள்ளிட்ட நால்வர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தாய்வான் வங்கி ஒன்றில் இருந்து சட்டவிரோதமாக 1.1 மில்லியன் டொலர் நிதி இலங்கையிலுள்ள வங்கி ஒன்றிற்கு பரிமாற்றப்பட்ட விடயம் தொடர்பில், ஷலில முனசிங்க உள்ளிட்ட நால்வர் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.



இந்நிலையில் நேற்று இவர்கள் கோட்டை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட வேளை பிணையில் செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிண்ணம் வெல்லுமா நியூசிலாந்து?

## இந்தியாவுடன் இயற்கை எழில் கொஞ்சும் கேரளாவில் 3வது மோதல்



இந்திய - நியூசிலாந்து அணிகள் மோதும் 3ஆவது 'ரி20' போட்டி திருவனந்தபுரத்தில் இன்று நடக்கிறது. இப் போட்டியிலும் நியூசிலாந்து அசத்தும் பட்சத்தில் கிண்ணத்தை கைப்பற்றி இந்தியாவுக்கு அதிர்ச்சி கொடுக்கலாம்.

இந்தியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி, 3 போட்டிகள் கொண்ட சர்வதேச 'ரி20' தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வென்ற இந்தியா, இரண்டாவது சவாலில் வீழ்ந்தது. தொடர் 1-1 என சமநிலையில் உள்ளது. தொடரின் வெற்றியாளரை தீர்மானிக்கும் 3ஆவதும் இறுதியுமான போட்டி, இயற்கை எழில் சூழ்ந்த கடவுளின் சொந்த பூமி என போற்றப்படும் கேரளாவில் இன்று நடக்கிறது. இதற்காக திருவனந்தபுரத்தில் உள்ள கிரீன்பீல்ட் சர்வதேச மைதானம் புதுப் பொலிவுடன் தயாராக உள்ளது.

**ரோகித் எழுச்சி**

முதல் போட்டியில் அசத்திய இந்தியாவின் ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி, 2ஆவது போட்டியில் ஏமாற்றியது. இவர்கள் இன்று எழுச்சி கண்டால், சிறப்பான ஆரம்பம் கிடைக்கும். இளம் வீரர் ஸ்ரேயாஸ் ஐயர், ஆறுதல் தருகிறார். அரைச்சதம் கடந்த அணித் தலைவர் ஹோலி, மீண்டும் கைகொடுக்கலாம். 'சகலதுறை வீரர்' ஹர்திக் பாண்ட்யா (0, 1), தொடர்ந்து சொதப்புவது பின்னடைவு. முன்னாள் அணித தலைவர் தோனியை, துடுப்பாட்ட வரிசையில் 4 ஆவது இடத்தில் களமிறக்கிப் பார்க்கலாம். இளம் வேகப பந்து வீச்சாளர் மொஹமட் சிராஜுக்கு பதிலாக, கூடுதலாக ஒரு துடுப்பாட்ட வீரருக்கு வாய்ப்பு வழங்கபபடும என எதிர்பார்ககப்படுகிறது.

வேகப்பந்துவீச்சில் புவனேஷ்வர் குமார், பும்ரா நம்பிக்கை அளிக்கின்றனர். இவர்கள், கடைசி கட்ட ஓவர்களில் ஓட்டம் வழங்காமல் கட்டுக்கோப்பாக பந்துவீசுவது கூடுதல் பலம். கடந்த இரணடு போட்டியிலும் ஏமாறறிய ஹர்திக் பாண்ட்யா, எழுச்சி கண்டால் நல்லது. 'சுழலில்' சஹால், அக்சர்படேல கூட்டணி ஆறுதல் தருகிறது.

**முன்ரோ நம்பிக்கை**

2ஆவது போட்டியில் சதம் கடந்த கொலின் முன்ரோ, நியூசிலாந்து அணிக்கு பலம் தருகிறார். இவருக்கு, மார்டின் கப்டில் ஒத்துழைப்பு தந்தால் மீண்டும் நல்ல ஓட்டஎண்ணிக்கையை பெறலாம். அணித் தலைவர் வில்லியம்ஸன், எழுச்சி காண வேண்டும். நடுத்தரவரிசையில் ரொம் புரூஸ், ரொம் லெதம், கிராண்ட்ஹோம், நிக்கோல்ஸ் உள்ளனர்.

வேகப்பந்துவீச்சில் டிரண்ட் போல்ட், கைகொடுக்கிறார். இவருக்கு அடம் மில்ன், ரிம் சௌதி உள்ளிட்டோர் ஒத்துழைப்பு தந்தால், விக்கெட் வேட்டை நடத்தலாம். பந்தை சுழற்ற சான்ட்னர், இஷ் சோதி உள்ளனர்.

**50வது மைதானம்**

திருவனந்தபுரத்தில் உள்ள கிரீன்பீல்ட் சர்வதேச மைதானத்தில் முதல் முறையாக 'ரி20' போட்டி நடக்கவுள்ளது. இதன்மூலம் இந்தியாவில் சர்வதேச கிரிக்கெட் போட்டி நடத்தும் 50 ஆவது மைதானம் என்ற பெருமை பெறுகிறது. ரூ. 390 கோடி செலவில் உருவாக்கப்பட்ட இம் மைதானம், கடந்த 2015ம் ஆண்டு முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இங்கு, 'ஃபிபா', ஐ.சி.சி., விதிமுறைகளுக்கு உட்பட்டு, முறையே கால் பந்து, கிரிக்கெட் போட்டிகளை நடத்தக்கூடிய உலகத் தரம் வாய்ந்த வசதிகள் உள்ளன. தவிர, டேபிள் டென்னிஸ், பட்மின்டன், கூடைப்பந்து, டென்னிஸ் போன்ற உள்ளரங்கு போட்டிகளையும் நடத்தலாம். மொதம் 55 ஆயிரம் பேர் அமர்ந்து போட்டியை காணலாம்.

**29**

திருவனந்தபுரத்தில், சுமார் 29 ஆண்டுகளுக்கு பின், சர்வதேச கிரிக்கெட் போட்டி நடக்கவுள்ளது. கடைசியாக, 1988ல் இந்திய-மே.தீவுகள் அணிகள் மோதிய ஒருநாள் போட்டி, கேரளா பல்கலை., மைதானத்தில் நடந்தது. இதில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது. தவிர, கடந்த 1984ல் கேரள பல்கலை.,யில் நடக்க இருந்த இந்திய-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டி மழையால் ரத்து செய்யப்பட்டது.

**மிரட்டும் மழை**

இன்றைய போட்டி நடக்கவுள்ள திருவனந்தபுரத்தில், வெப்பநிலை அதிகபட்சம் 31, குறைந்தபட்சம் 25 டிகிரி செல்சியசாக இருக்கும். மழை வர 60 சதவீதம் வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவிக்கிறது. இதனால் போட்டிக்கு பாதிப்பு ஏற்படலாம்.

இதுகுறித்து கேரள கிரிக்கெட் சங்க செயலாளர் ஜெயேஷ் ஜோர்ஜ் கூறுகையில்,

"மழையால் தேங்கும் தண்ணீரை வெளியேற்ற போதுமான வசதிகள் உள்ளன. தவிர, மூன்று 'சுப்பர் சாப்பர்ஸ்' தயாராக உள்ளன. ஒட்டுமொத்த ஆடுகளத்தையும் மூடிவிடலாம். மழை குறுக்கிட்டால், அடுத்த 15 நிமிடங்களுக்குள் போட்டியை நடத்தும் வகையில் மைதானத்தை தயார் செய்துவிடலாம்," என்றார்.

### ஆஷஸ் தொடர்

# இங்கிலாந்தின் துணைத் தலைவராக அண்டர்சன்



ஆஷஸ் தொடருக்கான இங்கிலாந்து அணியின் துணைத்தலைவராக வேகபந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் நியமிக்கப் பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் வருகிற 23 ஆம் திகதி பிரிஸ்பேனில் தொடங்குகிறது.


இந்த தொடருக்கான இங்கிலாந்து அணியின் துணைத் தலைவராக அணியில் இடம்பிடித்திருந்த பென் ஸ்ரோக்ஸ், மேற்கிந்தியத் தொடரின்போது நைட் கிளப்பிற்கு வெளியே வைத்து வாலிபர் ஒருவரை தாக்கிய சம்பவத்தில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக பொலிஸ் விசாரணை நடைபெற்றதால் பென் ஸ்ரோக்ஸ் ஆஷஸ் தொடரில் இருந்து நீக்கப்பட்டார்.

இதனால் இங்கிலாந்து அணி துணைத் தலைவர் இன்றி தவித்து வந்தது. இந்நிலையில் தற்போது வேகப் பந்து வீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்சன் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### லா லிகா கால்பந்து

# ரியல் மட்ரிட் வெற்றி



லா லிகா கால்பந்து தொடரில் லாஸ் பால்பாஸ் அணிக்கெதிரான ஆட்டத்தில் ரியல் மட்ரிட் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

லா லிகா கால்பந்து லீக் தொடரில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற ஒரு போட்டியில் முன்னணி கழகமான ரியல் மட்ரிட், லாஸ் பல்பாஸ் அணியை எதிர்கொண்டது. இந்த போட்டி ரியல் மட்ரிட் அணிக்கு சொந்தமான மைதானத்தில் நடைபெற்றது.

இந்த சீசனில் ரியல் மட்ரிட் தனது சொந்த மைதானத்தில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை. இந்நிலையில் இந்த போட்டியில் வெற்றி பெற்றே தீர வேண்டும் என்ற கட்டாயத்தில் களம் இறங்கியது.

ஆட்டத்தின் 41ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணிக்கு கோர்னர் வாய்ப்பு கிடைத்தது. கோர்னரில் இருந்து அடிக்கப்பட்ட பந்தை தலையால் முட்டி அந்த அணி வீரர் கேஸ்மிரா அற்புதமாக கோல் அடித்தார். இதனால் முதல் பாதி நேரத்தில் ரியல் மட்ரிட் 1-0 என முன்னிலை பெற்றது.

2ஆவது பாதி நேரத்தில் ஆட்டத்தின் 56ஆவது நிமிடத்தில் ப்ரீ ஹிக் ஷொட்டை லாஸ் பால்மாஸ் கோல் காப்பாளர் தடுத்துவிட்டார். பந்து நேராக மார்கோ சென்சியோவை நோக்கி வந்தது. கண்ணிமைக்கும் நேரத்திற்குள் பந்தை கோல் கம்பம் நோக்கி உதைத்தார். இரண்டு தடுப்பு ஆட்டக்காரர்கள் மற்றும் கோல் காப்பாளர் ஆகியோரை ஏமாற்றி பந்து கோல் எல்லைக்குள் தஞ்சம் புகுந்தது.

74ஆவது நிமிடத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ கொடுத்த பாஸை இஸ்கோ சுலபமாக கோலாக மாற்ற ரியல் மட்ரிட் 3-0 என வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ரியல் மட்ரிட் 11 போட்டிகள் முடிவில் 23 புள்ளிகளுடன் 3ஆவது இடத்தில் உள்ளது. பார்சிலோனா 31 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறது.

### ஹட்ரிக் விக்கெட் வீழ்த்தி

# இங்கிலாந்துக்கு ஸ்ரார்க் எச்சரிக்கை


உள்ளூர் கிரிக்கெட் தொடரில் ஹட்ரிக் விக்கெட் வீழ்த்திய அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் ஸ்ரார்க், இதன்மூலம் இங்கிலாந்து வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஆஷஸ் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 23ஆம் திகதி தொடங்குகிறது.

இந்தத் தொடர் வேகப் பந்து வீச்சாளர்களுக்கும் துடுப்பாட்ட வீரர்களுக்கும் இடையில் நடைபெறும் மிகப்பெரிய சவால் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த தொடருக்கான இரு அணி வீரர்களும் தயாராகி வருகிறார்கள். அவுஸ்திரேலிய அணியின் வேகப் பந்துவீச்சை முன்னின்று கொண்டு செல்பவராக மிட்சல் ஸ்ரார்க் உள்ளார்.

இந்தியாவிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ஸ்ரார்க் ஓய்வில் இருந்து வந்தார். தற்போது ஆஷஸ் தொடர் வரவுள்ள நிலையில், அதற்கு தயாராகும் வகையில் உள்ளூர் தொடரான ஷெஃப்பீல்ட் ஷீல்ட் தொடரில் விளையாடி வருகிறார்.



மிட்செல் ஸ்ரார்க், வோர்னர், ஸ்மித் போன்றோர் இடம்பிடித்துள்ள நியூ சவுத் வேல்ஸ் அணி, வெஸ்டர்ன் அவுஸ்திரேலியா அணியை எதிர்கொண்டது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ சவுத் வேல்ஸ் 270 ஓட்டங்கள் எடுத்தது. வோர்னர் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தாலும், அணித் தலைவர் ஸ்மித் சிறப்பாக விளையாடினார். அவர் 130 பந்துகளில் 76 ஓட்டங்கள சேர்த்தார்.

பந்துவீச்சில் வெஸ்டன் அவுஸ்திரேலியா சார்பில் ரிச்சட்ர்சன் 4, டேவிட் மூடி 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

தொடர்ந்து தமது முதல் இன்னிங்சுக்காக துடுப்பெடுத்தாடிய வெஸ்டன் அவுஸ்திரேலியா, மிட்சல் ஸ்ரார்கின் வேகத்தில் சிக்கி 186 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

வெஸ்டன் அவுஸ்திரேலியா அணியின் இன்னிங்ஸில் 67ஆவது ஓவரை வீசிய மிட்சல் ஸ்ரார்க், இதன் 4ஆவது, 5ஆவது மற்றும் கடைசி பந்தில் தொடர்ச்சியாக மூன்று விக்கெட்டுக்கள் வீழ்த்தி ஹட்ரிக் சாதனை படைத்தார்.

நீண்ட நாட்களுக்குப்பின் மீண்டும் களத்திற்கு திரும்பியுள்ள ஸ்ரார்க் ஹட்ரிக் விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தியுள்ளதுடன், இதன் மூலம் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்துள்ளார்.

## முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர்


# அஷ்ரப் மரணம் அறிக்கை மாயம்

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் அக்கட்சியின் ஸ்தாபகருமான எம்.எச்.எம். அஷ்ரப் விபத்தில் பலியானமை ,தொடர்பில் கண்டறிய நியமிக்கப்பட்டிருந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2000 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் பயணித்த ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி 14 பேர் உயிரிழந்தனர். இவர்களது மரணம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் நிலவின. இதனைக் கண்டறிவதற்காகவே அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் ஜனாதிபதிவிசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

நீதிபதி எல்.கே. ஜீ. வீரசேகரவின் தலைமையில் அவ்வாணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் அதனை ஒப்படைத்துள்ளது.



இந்த அறிக்கை கடந்த 2007 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்திலிருந்து தேசிய சுவடிகள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கை கடந்த சில நாட்களுக்கு முன்னர் தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட போது காணாமல் போயுள்ளதாக அதன் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் இந்த வேண்டுகோளை ஜனாதிபதி செயலகத்திடம் விடுத்திருந்தார். இந்த வேண்டுகோளை ஜனாதிபதி செயலகம் மறுத்துள்ளது.

இதனையடுத்து முன்னாள் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தகவல் அறிந்து கொள்ளும் ஆணைக்குழுவிடம் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இது தொடர்பில் தகவல் அறிந்து கொள்வது தொடர்பான ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (இ-7)

---


## கண்ணீர் அஞ்சலி



அமரர். **தம்பு கந்தையா**

மலர்வு 12-07-1939    உதிர்வு 03-11-2017

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி க.சந்திரசேகரி அவர்களது அன்புத் தந்தையாரின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சி-309)

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி.

---

## கண்ணீர் அஞ்சலி



திரு. **இராசன் சிவபாதம்**

பிறப்பு 1940-06-07    இறப்பு 2017-11-01

எமது பிரதேச செயலகத்தில் அலுவலக உதவியாளராக கடமையாற்றும் திரு சி.தங்கமயில் அவர்களின் பாசமிகு தந்தையார் **அமரர்.இராசன் சிவபாதம்** அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி-312)

அன்னாரின் துயரில் பங்குபெறும்
பிரதேச செயலரும் அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை

---

## துயர் பகிர்கின்றோம்



அமரர். **முத்தையா வேலுப்பிள்ளை**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் திரு.வே. தவச்செல்வம் அவர்களின் தந்தையார் அமரர் முத்தையா வேலுப்பிள்ளை அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு மிகுந்த வேதனைப்படுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பொதுச்சபை உறுப்பினர்கள், பணியாளர்கள்,
யாழ். மாவட்ட க.தொ.கூ.ச.சமாச சம்மேளனம்.

562.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி சசிகலா அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

திரு. **நாகமுத்து நல்லதம்பி**



தோற்றம் 26-05-1928    மறைவு 05-11-2017

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(சி-313)

ஆசிரியர் சகோதரத்துவம் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.


---

## இராசி பலன்

07.11.2017
ஐப்பசி 21, செவ்வாய்க்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 3.08 மணிவரை
மிருகசீரிடம் முன்னிரவு 10.45 மணிவரை
சுபநேரம் 10.35-12.05 மணிவரை
இராகுகாலம் 3.05-4.35 மணிவரை
சங்கடகர சதுர்த்தி விரதம்

**வளவன்**

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>விசாகம், அனுசம்<br>பகல் 11.21 மணிக்கு<br>மிதுன-சந் | | ராகு |
| கேது | | | |
| | சனி, புத | சூரி, சுக், குரு | செவ் |

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**இடபம்** தொலைபேசி வழித் தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள்.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயமாகலாம், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், வியாபார நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பொருளாதார நிலை உயரும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, எடுத்த காரியங்களில் சிறு தாமதங்கள் ஏற்படலாம்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், புதிய பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, மறைமுகப் போட்டிகள் மாறும்.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

# பார்த்தீனியத்தை ஒழியுங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

யாழ்.மாவட்டத்திலுள்ள விவசாய நிலப்பகுதிகளில் பார்த்தீனியச் செடியின் பரம்பல் அதிகரித்துக் காணப்படுவதால் விவசாயிகள் பெரும் பாதிப்பினை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் விவசாய நிலங்களில் பார்த்தீனியத்தின் பரம்பலை கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், கோப்பாய், குப்பிளான், மயிலங்காடு, வசாவிளான் குரும்பசிட்டி ஈவினை, சுன்னாகம், மருதனார்மடம், அச்செழு, ஊரெழு, உரும்பிராய் உள்ளிட்ட பகுதிகளில் விவசாய நிலங்களில் பார்த்தீனியச் செடிகள் அதிகம் முளைப்பதால் தமது விவசாயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பயிர்களுக்குச் சேர வேண்டிய சத்துக்களைப் பார்த்தீனியச் செடிகள் தமக்குள் உள்ளுறிஞ்சிக் கொள்வதாகக் கவலை தெரிவித்துள்ள விவசாயிகள், பார்த்தீனியச் செடிகளை அடியோடு பிடுங்கி அழிக்கும் செயற்பாட்டை அடிக்கடி மேற்கொண்டு வந்த போதும் பார்த்தீனியச் செடிகள் மீண்டும் மீண்டும் வளர்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

பார்த்தீனியச் செடியை அழிப்பதற்காகவே தாம் வேலைக்கு ஆட்களை வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் விவசாயசெய்கையில் இலாபத்தினை பெற முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

மேலும் தென்மராட்சி கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தை அண்டிய பகுதிகள், வடக்கு மாகாணசபை, முன்பாக ஏ- 9 வீதி ஓரங்கள், பலாலி வீதி போன்றவற்றின் வீதி ஓரங்களில் பார்த்தீனியம் வளர்ந்து காணப்படுகிறது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பார்த்தீனியத்தை அழிக்கும் செயற்பாடுகளை பல அமைப்புக்கள் மேற்கொண்டிருந்தன. ஆனால் அதன் பின்னர் அதை முற்றாக ஒழிப்பதற்கு எந்த வொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அத்துடன் இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9-10-101)

## கோழிப் பண்ணையால் தொற்றுநோய்த் தாக்கம்

தமது கிராமத்திலுள்ள கோழிப் பண்ணையால் தொற்றுநோய்த் தாக்கத்திற்கு உள்ளாகும் அபாயங்கள் உள்ளதாகவும் இது விடயத்தில் தமக்கு உரிய தீர்வினைப் பெற்றுத் தருமாறும் டக்ளஸ் தேவானந்தாவிடம் சண்டிலிப்பாய் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் வேண்டுகோளையடுத்து சண்டிலிப்பாய் பகுதிக்கு சென்றிருந்த அவர் இந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடி அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

அதனடிப்படையில் தமது கிராமத்தில் கோழிப்பண்ணையொன்று இருப்பதாகவும் அங்கிருந்து அகற்றப்படும் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாத காரணத்தினால் தாம் வாழும் சூழலில் பல்வேறுபட்ட சுகாதார சீர்கேடுகளுக்கு தாம் முகம் கொடுத்து வருவதாக அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக குழந்தைகள், சிறுவர்கள் தொற்று நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகி வருவதாகவும் இந்த கோழிப் பண்ணையைஅகற்றுமாறு பல்வேறு தரப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப் பட்ட போதிலும் கோழிப் பண்ணை அகற்றப்படாது உள்ளமையானது தமக்கு மிகுந்த வேதனையை தருவதாகவும் மக்கள் தமது ஆதங்கத்தை தெரிவித்துள்ளனர்.

இது விடயம் தொடர்பில் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய தீர்வுகளை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாகச் செயலாளர் சிவகுரு -பாலகிருஸ்ணன் (ஜீவன்) கட்சியின் வலி.தென்மேற்கு நிர்வாகச் செயலாளர் வெலிஜ் ஜோர் அன்ரன்ஜோன்சன் ஆகியோர் உடனிருந்தார். (இ-7)

## மாணவ முதல்வர் தினம்

யாழ்.இந்துக் கல்லூரி யின் மாணவ முதல்வர் சபை நடத்தும் மாணவ முதல் வர் தினம் நாளை 8 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணிக்கு சபாலிங்கம் மண்டபத்தில் சிரேஷ்ட மாணவ முதல்வன் லோ.சிவ லக்ஷன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இருதய சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி பூபாலன் லக்ஷ்மன் கலந்து கொள் வார். (இ-7)

## மாவீரர் துயிலுமில்லத்தில் சிரமதானம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறை மாவீரர் துயிலும் இல்லத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இச் சிரமதானப் பணியில் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் அன்றைய தினம் மாவீரர்களுடைய விபரங்கள் பதிவு செய்யப்படவுள்ளதால் மாவீரர்களின் பெற்றோர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-9-60)




## பனம் கைப்பணித் தொழிலுக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் வாழ்வாதார நிதித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி மற்றும் வேலணை பிரதேசத்தில் வழங்கப்பட்ட பனங்கைப்பணிப் பயிற்சி நெறியினை பூர்த்திசெய்த 29 பயனாளிகளுக்கு பனங் கைப் பணி உற்பத்தியினை மேற்கொள்வதற்குரிய தலா 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் அடங்கிய பொதிகளும், காசோலைகளும் கடந்த வாரம் அந்தந்த பிரதேசங்களில் வழங்கப்பட்டன.

அந்தவகையில் கைப்பணி பயிற்சியை பூர்த்தி செய்த சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மறவன்புலோ கிராமத்தில் 17 பெண்களுக்கும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் அல்லைப்பிட்டி - வெண்புரவி நகரில் 12 பெண்களுக்கும் பனங்கைப்பணி உற்பத்தியினை மேற்கொள்வதற்குரிய 8 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உபகரணங்கள் அடங்கிய பொதிகளும் சிறு தொகை காசோலைகளும் பனை அபிவிருத்தி சபையால் வழங்கப்பட்டுள்ளன. (இ-9)

## இடைநடுவில் நிறுத்தப்பட்ட வீதிப் புனரமைப்பு மாணவர்கள், பொதுமக்கள் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வீதியையும் சிவன் வீதியையும் இணைக்கும் பாடசாலை பின்புற மாழிகை வீதி சீராக புனரமைப்புச் செய்யப்படாத காரணத்தினால் போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்வதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

நவக்கிரி, மருதடி, புத்தூர் மேற்கு, புத்தூர் வடக்கு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 400 இற்கும் மேற்பட்ட மாணவர்களும் 100 இற்கும் மேற்பட்ட பொதுமக்களும் அவ்வீதியை நாளாந்தம் பயன்படுத்தி வருகின்றனர்.

இவ்வீதியில் 700 மீற்றர் அளவிலான பாதை தார் ஊற்றி செப்பனிடப்பட்டுள்ளது. மிகுதி 300 மீற்றர் தூரம் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளப்படாது இடைநடுவில் கவனிப்பாரற்று விடப்பட்டுள்ளது.

மாரி காலத்தில் பாடசாலைமாணவர்கள்கையில் காலணிகள் ஏந்தியவாறு வெள்ளத்தில் செல்கின்றனர்.

இதனை பல தடவைகள் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனினும் சுன்னாகம் வீதியில் 9.9 மில்லியன் ரூபாய் செலவில் இவ் ஒழுங்கையானது குறிப்பிட்ட காலத்தினுள் அதாவது 01.01.2016 தொடக்கம் 31.10.2016 வரை செப்பனிடப்படும் என விளம்பர பலகையில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இடையில் வீதி திருத்தப்பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

மாணவர்களின் அவலநிலையினையும் பொதுக்கள் படும் கஷ்டத்தினை கருத்தில் கொண்டு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-9)

## வடமராட்சியில் மூன்று இடங்களில் தேசிய சுனாமி அனர்த்த வேலைத்திட்டம்



(கரவெட்டி)

அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் தேசிய சுனாமி அனர்த்த வேலைத்திட்டம் வடமராட்சியில் மூன்று இடங்களில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/401 பருத்தித்துறையிலும், ஜே/388 வல்வெட்டித்துறை வடமேற்கிலும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/418 மணற்காடு ஆகிய கிராம அலுவலர் பிரிவிலும் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பிற்பகல் 2.15 மணியளவில் மணற்காட்டில் உள்ள சுனாமி எச்சரிக்கை கோபுரத்தில் இருந்து ஒலி எழுப்பப்பட்டதையடுத்து பொது மக்கள் வெளியேறி சவக்காலுபிட்டிக்கு அருகாமையில் உள்ள மணல் தும்பி ஒன்றில் ஒன்றிணைந்து விழிப்புணர்வு மேற் கொள்ளப்பட்டதுடன் பதிவுகளும் மேற்கொள்வதற்கான முறைகளும் பயிற்சிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அனர்த்த முகாமைத்துவ குழுவினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், இராணுவம், கடற்படையினர், செஞ். ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவினர், பாடசாலை அதிபர், பங்குத்தந்தை என்போர் கலந்து கொண்டனர்.

இதேபோன்று பருத்தித்துறை சுப்பர் மடத்திலும் வல்வெட்டித்துறையிலும் இவ் விழிப்புணர்வு ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டன. (இ-60)

## விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

விசேட டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் கார்த்திகைமாதம் 06,10 ஆம் திகதிகளில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

டெங்குநுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாக்குமுகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட முடியும். இந்தத் தேசிய நிகழ்வு அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அனைத்து சமூகமும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்பரவாக பேணுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்நாட்களில் பின்வரும் கிராம அலுவலர் பகுதிகளில் டெங்கு களத்தரிசிப்பு நடைபெறும்.

09.11.2017 நாவாந்துறை ஜே/ 85, 86, 87

10.11.2017 வண்ணார்பண்ணை ஜே/100, 101, 104

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைகள் காணப்படும் அலகைத்து அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாகவைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என யாழ். மாநகரசபை சுகாதாரவைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

## பாரிய கொள்ளைச் சம்பவம்

# டுபாயில் 6 இலங்கையர்களுக்கு 3 வருடங்கள் சிறைத்தண்டனை

## நாடு கடத்தவும் உத்தரவு

(கொழும்பு)

டுபாயில் பாரிய கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட ஆறு இலங்கையர்களுக்கு தலா 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. கடந்த மே 6 ஆம் திகதி தாம் பணியாற்றும் நிறுவனத்திற்கு சொந்தமான வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட பணப்பொதிகளில் இருந்து 1.198 மில்லியன் டினார் பணத்தை இவர்கள் கொள்ளையடித்துள்ளனர். 22 மற்றும் 29 வயதிற்குட்பட்ட இலங்கை காவலர்களே இவ்வாறு கொள்ளையடித்துள்ளனர்.

குறித்த ஆறு இலங்கையர்களும் ஒன்றாக திட்டமிட்டுள்ளதுடன், Al Muraqqabat பகுதியில் வாகனம் நிறுத்தப்பட்ட போது அவர்கள் பணத்தை திருடியுள்ளனர். திருடப்பட்ட சில தொகை பணத்தை வைத்திருந்த இரு இலங்கை சுத்திகரிப்பாளர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு சுத்திகரிப்பாளர்களும் தங்கள் அடையாள அட்டைகளை பயன்படுத்தி, இலங்கை கணக்கிற்கு 84,000 டினார்களை மாற்றியுள்ளனர். அந்த 6 காவலர்களும் பெரிய பண தொகையை திருடிய போது அவர்களில் ஒருவர் அந்த பணத்தை பாதுகாத்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பின்னர் அவர்கள் Al Rashidiyaவில் ஒரு குடியிருப்பு கட்டடத்தை பெற்றுக் கொண்டனர். அங்கு ஒவ்வொருவரும் 160,000 டினார் பணத்தை பெற்றுக் கொண்டனர். மீதமிருந்த ஏனைய செலவீனங்களுக்காக பயன்படுத்தி கொண்டுள்ளனர்.

பின்னர் பிரித்துக்கொண்ட பணத்தின் பெரும்பகுதி பணத்தை பணப்பரிமாற்ற நிலையங்கள் மூலம் தங்கள் வீடுகளுக்கு அனுப்ப முடிவு செய்துள்ள நிலையில் பொலிஸாரிடம் சிக்கியுள்ளனர்.

இந்த நிலையில் இது வரை டுபாய் குற்றவியல் நீதிமன்றத்தில் குறித்த 6 இலங்கையர்கள் தொடர்பில் இடம்பெற்ற வழக்கு விசாரணையில் குற்றச்சாட்டு உறுதியாகியுள்ளது.

அதற்கமைய அனைவருக்கும் தலா 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிறைத்தண்டனையின் பின்னர் குற்றவாளிகளை நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

## நீராடும்போது அறிவித்தல்களில் கவனம் செலுத்துக

(கொழும்பு)

ஓடை, நதி, நீர் வீழ்ச்சிகள் உள்ள இடங்களில் நீராடும் போது அந்த இடங்களில் பொருத்தப்பட்டுள்ள அறிவிப்புக்கள் தொடர்பில் பொதுமக்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பணிப்பாளர் வசந்த பண்டார பலுகஸ்வெள இந்த விடயத்தை வலியுறுத்தியுள்ளார்.

இதன்படி, குறித்த ஆலோசனைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஏற்படும் அனர்த்தங்களைத் தவிர்க்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா:48 செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/கனடா PR<br>தொ.இ: B/7920 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 25செவ் 12 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:BA, MA/ விரிவுரையாளர்<br>தொ.இ: G/7967 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7921 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BSc/கணக்காளர் அவுஸ்ரேலியா PR<br>தொ.இ: G/7968 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்:கார்த்திகை<br>கி.பா: 37செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/7923 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 17செவ் 12 இல்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/7972 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:திருவோணம்<br>கி.பா: 13<br>உயரம்: 170cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: B/7924 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்:புனர்பூசம்<br>க.பா: செவ் 4 இல்<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/7975 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



ௐ
கணபதி துணை







காரைநகர் - புளியங்குளம்

## திருவருள்மிகு புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் தேவஸ்தானம்

## பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

(09.11.2017 வியாழக்கிழமை பகல் 10.51 - 11.51 மணி வரை)

எடுக்குமாக் கதை இன்தமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக் களிற்றினைக் கருத்துள் இருத்துவாம்.

விநாயகர் அடியார்களே,

காரைநகர், தங்கோடை பதியிலே வீற்றிருந்து அருள்பாலிக்கின்ற புளியங்குளம் அருளானந்த பிள்ளையார் பெருமானின் ஆலயம் புனருத்தாரணம் செய்யும் பொருட்டு நிகழும் மங்களகரமான ஏவிளம்பி வருஷம் ஐப்பசி மாதம் 23 ஆம் நாள் 09.11.2017 வியாழக்கிழமை ஷஷ்டி திதியும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய பகல் 10.00 மணி 51 நிமிடம் முதல் 11.00 மணி 51 நிமிடம் வரையுள்ள மகரலக்ன சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நிகழ்த்துவதற்கு திருவருள் கூடியுள்ளது. அடியார்கள் கிரியா காலங்களில் கலந்து கொள்வதுடன் அபிஷேக, பூஜா, ஹோம திரவியங்களை உபசரித்து விநாயகப் பெருமான் அருள்பெற்று சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழ்வீர்களாக.

### கிரியா கால விபரம்

ஐப்பசி 22 ஆம் நாள் 08.11.2017 புதன்கிழமை மாலை 4.00 மணிமுதல் விநாயக வழிபாடு, புண்ணியாகவாசனம், அனுக்ஞை, கணபதிஹோமம், நவக்கிரக ஹோமம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகபூஜை, ஹோமம், தீபாராதனை, வேத திருமுறை பாராயணம் பிரசாதம் வழங்கல்.

ஐப்பசி 23 ஆம் நாள் 09.11.2017 வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் விநாயக வழிபாடு, புண்ணியாகவாசனம், யாகபூஜை, ஹோமம், பூர்ணாகுதி பாலஸ்தாபன கும்பாபிஷேகம், தீபாராதனை, வேத திருமுறை பாராயணம், ஆசியுரை, திருவருட் பிரசாதம் வழங்கல்.

ஆலய பிரதம குரு:
"சிவாச்சார்ய பூஷணம்" பிரம்மஸ்ரீ.பா.சபாரத்தின குருக்கள்

பாலஸ்தாபன குரு:
பிரம்மஸ்ரீ.ஸ்ரீவத்ஸ.வ.இராஜேஸ்வரக் குருக்கள்

2018 ஆம் ஆண்டு சித்திரை மாதம் மஹா கும்பாபிஷேகம் நிகழ்த்த தீர்மானித்திருப்பதனால் புனருத்தாரணப் பணிகள் விரைவாக நிறைவுற அடியார்கள் மனஉதவி, பொருள் உதவி, சரீர உதவி புரிந்து ஆலயம் புதுப்பொலிவு பெற்று விளங்க தங்கள் பங்களிப்பை நல்குவீர்களாக.

கருணை வள்ளல் கணபதியை தொழ அருமைப் பொருள்கள் அனைத்தும் வருமே.

புளியங்குளம் அருளானந்தப் பிள்ளையார் தேவஸ்தானம், தங்கோடை, காரைநகர். (F-289) இங்ஙனம், அறங்காவலர்கள் 077 739 5978, 021 321 9430

# முல்லையில் சுனாமி ஒத்திகை செயற்றிட்டம்



(பனிக்கன்குளம்)

தேசிய சுனாமி எச்சரிக்கை ஒத்திகை செயற்றிட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் 14 கடற்கரை மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள 77 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்கள் ஒரே நேரத்தில் பரீட்சித்து பார்க்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பி.ப 2.12 மணியளவில் மேற்கொள்ளப்பட்டது.

இதன் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 முன்னெச்சரிக்கை கோபுரங்கள் அமைந்துள்ள இடங்களான புதுமாத்தளன், வெள்ள முள்ளிவாய்க்கால், கொக்கிளாய், அளம்பில், முல்லைத் தீவு நகரம் ஆகிய கடற்கரை பிரதேச கிராம சேவையாளர் பிரிவுகளில் சுனாமி முன்னெச்சரிக்கை ஒத்திகை நிகழ்வு நடைபெற்றது.

முதலாவது எச்சரிக்கை பி.ப. 2.12 மணியளவிலும் இரண்டாவது எச்சரிக்கை 2.20 மணியளவிலும் எச்சரிக்கை மீள பெறப்பட்ட செய்தி பி.ப. 3.35 மணியளவிலும் தெரிவிக்கப்பட்டது.

கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு அளம்பில் கிராம சேவையாளர் பிரிவில் அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரனின் தலைமையில் நடைபெற்ற ஒத்திகை நிகழ்வில் பிரதேச செயலாளர், அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் மற்றும் ஊழியர்கள். இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளை, அனர்த்த பதிலுருப்பு பிரிவினர், முப்படையினர், காவல்துறையினர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது சுனாமி தொடர்பான உறுதிசெய்யப்பட்ட செய்தியை கேள்வியுற்ற பொது மக்கள் வெளியேறி அளம்பில் மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்தனர்.

இவர்களுக்கான முதலுதவி மற்றும் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக்களை அரச ஊழியர்கள் மற்றும் செஞ்சிலுவை சங்கத்தினர் வழங்கி வைத்தனர்.

இறுதியாக பாதுபாப்பான இடத்திற்கு வருகை தந்த பொதுமக்களுடனான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதில் மாவட்ட அரசாங்க அதிபர் இந்த நிகழ்வு தொடர்பில் மக்களுக்கு க்ருத்துக்களையும் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் எஸ். குணபாலன் ஆகியோரும் கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். இந்நிகழ்வு பி.ப. 4 மணியளவில் நிறைவு பெற்றது. (2-281)




# ஆற்றுமணல் கடத்திய வாகனங்கள் கைப்பற்று

## சாரதிகள் மூவர் கைது



(மல்லாவி )

கிளிநொச்சி/முல்லைத் தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப் பின்கீழ்இயங்கிவரும்போதைப் பொருள் மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் மேற்கொண்ட விசேட ஊர் சுற்றுக் காவல் கடமையின் போது சட்டவிரோதமான முறையில் ஆற்று மணலை கடத்திச் சென்ற டிப்பர் வாகனம் ஒன்றையும் மற்றும் இரண்டு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டதுடன், சட்டவிரோதமான முறையில் தயாரிக்கப்பட்ட கசிப்பு40 லீற்றரை மோட்டார்சைக்கிளில்கொண்டு சென்ற நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி/முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமையும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் விசேட உத்தரவுக்கு அமைய தருமபுரம் பொலிஸ் நிலையப் பிரிவில் விசேட ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான போதைப் பொருள் தடுப்பு மற்றும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் படைப் பிரிவுப் பொலிஸார் பிரமந்தனாறு மற்றும் கல்லாறு ஆகிய கிராமங்களில் வைத்து சட்ட விரோதமான முறையில் ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனத்தையும், இரண்டு உழவு இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதிகள் மூவரையும் கைது செய்துள்ளனர்.

இந் நிலையில், பரந்தன் -முல்லைத்தீவு வீதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் தருமபுரம் பகுதியில் இருந்து பரந்தன் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை தடுத்து நிறுத்தி சோதனையிட முற்பட்ட போது, அவர் அதனை நிறுத்தாமல் அதிவேகமாக பரந்தன் பகுதியை நோக்கி தப்பிச் செல்ல முற்பட்ட போது பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து சென்று முரசு மோட்டை பகுதியில் வைத்து தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது உருமறைப்புச் செய்யப்பட்டு கொள்கலன் ஒன்றில் கொண்டு செல்லப்பட்ட 40 லீற்றர் கசிப்பையும் அதனைக் கடத்திச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் கைப்பற்றியுள்ளதுடன், சந்தேக நப்ரையும் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு இரண்டு சம்பவங்களிலும் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களையும் சந்தேக நபர்களையும் தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணைகளுக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக ஒப்படைக்கப் பட்டுள்ளதாக கிளிநொச்சி/ முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவுனியா பசங்க அமைப்பினர் முன்னாள் போராளிகளுக்கு உதவிகள்



(வவுனியா)

வவுனியா ஓமந்தையில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட முன்னாள் போராளிகள் இருவருக்கு "வவுனியா பசங்க" அமைப்பினரினால் கடந்த 3ஆம் திகதி உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

வவுனியா பசங்க அமைப்பினரால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க புலம்பெயர் நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்த நடராஜா சிவகுமாரின் நிதியில் ஒருவருக்கு தலா 6ஆயிரத்து 500ரூபா பெறுமதியான அத்தியாசிய பொருட்கள் அடங்கிய பொதியொன்றும் சிறு பணமும் வழங்கி வைக்கப் பட்டன. (2)

# தேர்தலை எதிர்கொள்வது தொடர்பாக மஸ்தான் எம்.பி. கலந்துரையாடல்

(குருமன்காடு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலை எதிர்கொள்வது தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஸ்ரீலங்கா சுததந்திரக் கட்சியின் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தலைமையில் வவுனியாவில் அமைந்துள்ள அவரது காரியாலயத்தில் நடைபெற்றது.

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தல் தொடர்பான கலந்துரையாடலில் அழைப்பு விடுக்கப்பட்ட செயற்பாட்டாளர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது கலப்பு தேர்தல் முறை மற்றும் பெண்களுக்கான .இட ஒதுக்கீடு தொடர்பாகவும் இளைஞர்களின் பங்களிப்பு தொடர்பான விளக்கங்களை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் வழங்கினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,மாகாணசபையில் கொண்டுவரப்பட்ட திருத்தச்சட்டங்கள் தொடர்பாகவும் கிராம மக்களுக்கு விளக்க மளிக்கப்பட வேண்டும்.

'வவுனியாவில் இன முரண்பாடுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. ஒரு அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் தனிப்பட்டவரின் பிரச்சினைகளை சமூகப் பிரச்சினைகளாக மாற்றுவதற்கு சிலர் முயற்சி செய்கிறார்கள் என குறிப்பிட்டார்.

நிகழ்வில் வவுனியா மாவட்டத்திலுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்பாட்டாளர்களும், ஆதரவாளர்களும் கலந்துகொண்டிருந்தனர். (2-250)

# கல்வியியல் முதுமாணி மாணவர்களின் 'முதுசித்தம்' சஞ்சிகை வெளியீடு



(குருமன்காடு)

யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தின் கல்வியியல் முதுமாணி மாணவர்களின் முதுசித்தம் சஞ்சிகை வெளியீடும் ஒன்றுகூடலும் அண்மையில் வவுனியா றோயல் கார்டன் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீடத்தின் வவுனியா நிலையத்தில் கல்வி பயிலும் கல்வியியல் முதுமாணி கற்கை பீட நான்காவது அணி மாணவர்களால் இச் சஞ்சிகை வெளியிடப்பட்டுள்ளது.

கல்வியியல்முதுகலைமாணி மாணவர் மன்றத் தலைவர் ல.சதீஸ்குமார் தலைமையில் நடைபெற்ற இச்சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன், யாழ்.பல்கலைக்கழகத்தின் உயர் பட்டப்படிப்புக்கள் பீட பீடாதிபதி பேராசிரியர் கு.மிகுந்தன், யாழ்.பல்கலைக் கழகத்தின் வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

# வலைப்பாடு கிராமத்தில் சுனாமி ஒத்திகை

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தின் வலைப்பாடு கிராமத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் தேசிய சுனாமி ஒத்திகை வேலைத் திட்டம் மாவட்ட .அனர்த்த முகாமைத்துவ அலகின் பதில் அலுவலர் சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

நாடளாவிய ரீதியில் 14 கரையோர மாவட்டங்களில் உள்ள 77 சுனாமி முன்னெச்சரிக்கை கோபுரங்களில் ஒலி எழுப்பப்பட்டு மக்கள் எவ்வாறு பாதுகாப்பாக வெளியேறுகின்றனர் என்பதை பரீசித்து பார்க்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 2.12 மணியளவில் வலைப்பாடு கிராமத்தில் நடைபெற்றது.

குறித்த இந்த நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கிளிநொச்சிக் கிளையினர் முதலுதவிச் சேவையை மேற்கொண்டனர்.



குறித்த நிகழ்வில் 500 இற்கும் மேற்பட்ட வலைப்பாடு கிராம மக்கள், முப்படையினரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281-312)



கிளிநொச்சி மாவட்ட ஓய்வுபெற்ற அரசாங்க அதிபரும் சிறுவர் இல்லத்தலைவருமான திருநாவுக்கரசு இராசநாயகத்தின் . பூதவுடல் தாங்கிய பேழை நேற்றுக் காலை யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துவரப்பட்டு கிளிநொச்சி ஜெயந்தி நகரிலுள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் சிறப்பாக ஒழுங்கைமைக்கப்பட்ட மண்டபத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வுக்காக முற்பகல் 11 மணியளவில் வைக்கப்பட்டது. இறுதி அஞ்சலி நிகழ்வு நடைபெற்று முடிந்தவுடன் தகனக்கிரியைக்காக பூநகரி மூன்றாம் கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் தீயுடன் சங்கமமானது. இறுதி அஞ்சலி நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள், சிவில் சமூகத்தைச் சார்ந்தவர்கள் என பலர் கலந்துகொண்டிருந்தனர். (படங்கள்:- கிளிநொச்சி செய்தியாளர்)

# தீர்வு கிடைக்காவிடின் முல்லை.மாவட்ட செயலகத்தை முற்றுகையிடுவோம்

## பனை தென்னை வள அபிவிருத்தி சங்க சமாசம் ஜனாதிபதிக்கு மகஜர்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி சங்க சமாசத்தால் கடந்த 20.10.2017 அன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தகவலுக்கு அமைவாக பனை தென்னை மரங்களுக்கு அனுமதி பெறவேண்டும் ஆனால் கித்துள் மரத்தில் கள் இறக்க அனுமதி பெறதேவையில்லை என்ற வர்த்தமானி அறிவித்தலின் பாதிப்பு தொடர்பில் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைக்கவுள்ளதாகவும் தீர்வு இல்லையேல் மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டுப்போராடவேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

பனை தென்னை மரங்களுக்கு அனுமதிபெறவேண்டும் ஆனால் கித்துள் மரத்தில் கள் இறக்க் அனுமதி பெறத் தேவையில்லை என்ற கோரிக்கை வடக்கு மாகாண பனைதென்னை வள தொழிலாளர்களையும் சங்கங்களையும் பாதித்துள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி சங்க சமாசத்தின் பொது முகாமையாளர்சி.வேதவனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பிலான ஊடக சந்திப்பொன்று நேற்றுக்காலை பதினொரு மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்தி சங்க சமாச வளாகத்தில் நடைபெற்றது

இதன்போது பனை தென்னை வள சங்க சமாசத்தின் தலைவர் பிரான்சிஸ் விஜயச்சந்திரன், முல்லைத்தீவு மாவட்டபனை தென்னை வளகூட்டுறவு சங்க சமாசத்தின் பொதுமுகாமையாளர் சி.வேதவனம் ஆகியோர் கருத்துக்களை தெரிவித்திருந்தனர்.

இதன்போது அரசாங்கம் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விடயம் தொடர்பில் வடக்கு மாகாணத்தில் உள்ள பனை தென்னையை நம்பி தொழில் செய்யும் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 128 குடும்பங்கள் தொழில் செய்து வருகின்றன. எங்கள் நிறுவனங்களில் பணி புரியும் பணியாளர்களின் எண்ணிக்கை 256 குடும்பங்கள். நிறுவனங்களை சார்ந்திருக்கின்ற மகளிர்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 30 குடும்பங்கள். பனைவளத்தினை மூலாதாரமாக கொண்டு வாழ்வாதாரத்தை நடத்தி வருகின்ற குடும்பங்கள் ஆயிரத்தி 9 குடும்பங்கள் இவ்வாறு முல்




லைத்தீவு மாவட்டத்தில் 13 ஆயிரத்து 696 குடும்ப அங்கத்தவர்கள் அரசின் இந்த அறிவிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவரும்பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சிவமோகன் ஊடாக மகஜர்ஒன்றைஅனுப்பிவைக்கவுள்ளதாக தீர்மானித்துள்ளார்கள் இதன் பிரதிகள் வடக்கு மாகாணசபை முதலமைச்சர் மற்றும் வடக்கின் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

இதேவேளை போத்தல் கள்ளுக்கான வரியை நல்லாட்சி அரசாங்கம் அதிகரித்துள்ளதாகவும் போத்தல் கள் அடைப்பதற்கான நிலையத்திற்கான ஆண்டு அனுமதியும் அதிகரித்துள்ளது இவ்வாறு நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லிக்கொண்டு இதனை நம்பி தொழில் செய்யும் எங்கள் குடும்பங்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு அரசாங்கம் நல்ல பதில் தராவிடின் மாவட்ட செயலகத்திற்கு முன் போராட்டம் ஒன்றினையும் நடத்தவுள்ளோம். எனவே நல்லாட்சி அரசாங்கத்திடம் இருந்து இதற்கான சரியான முடிவு கிடைக்கவேண்டும்என ஊடக சந்திப்பில் அறிவித்துள்ளார்கள். (2-281)

# 9 குளங்களின் நீர்மட்ட அளவும் கிடைக்கப்பெற்ற மழைவீழ்ச்சியும்

## இரணைமடுகுள நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவிப்பு

(மல்லாவி )

இரணைமடு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 9 நீர்ப்பாசனக் குளங்களிற்கு நேற்று திங்கட்கிழமை அதிகாலை 6 மணி வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற நீர் வரத்தின் அளவையும், கிடைக்கப் பெற்ற மழை வீழ்ச்சியின் விபரங்களையும் இரணைமடுகுள நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதற்கமைய 36 அடி கொள்ளளவுடைய இரணைமடு குளத்திற்கு 15 அடி 6 அங்குலமாகவும் 25அடி கொள்ளளவுடைய் அக்கராயன் குளத்திற்கு9 அடி 2 அங்குலமாகவும், 24 அடி கொள்ளளவுடைய கல்மடுக் குளத்திற்கு 10 அடி 6 அங்குலமாகவும் 10 அடி கொள்ளளவுடைய கரியாலை நாகபடுவான் குளத்திற்கு ஒரு அடி 3 அங்குலமாகவும், 10 அடி 6 அங்குலம்கொள்ளளவுடைய கனகாம்பிகைக் குளத்திற்கு 7அடியாகவும் 9 அடி 6 அங்குலம் கொள்ளளவுடைய வன்னேரிக் குளத்திற்கு 4 அடி 8 அங்குலமாகவும், 19 அடி கொள்ளளவுடைய முறிப்புக் குளத்திற்கு 10 அடி 8 அங்குலமாகவும், 12 அடி கொள்ளளவுடைய பிரமந்தனாறு குளத்திற்கு 7 அடி 10 அங்குலமாகவும். 8 அடி 9 அங்குலம் கொள்ளளவுடைய குடமுருட்டிக் குளத்திற்கு 5 அடி 5 அங்குலமாகவும் நீர் வரத்து கிடைக்கப் பெற்றுள்ளது.

இன் நிலையில், நேற்று முன்தினம்ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6 மணி தொடக்கம் திங்கட்கிழமை அதிகாலை 6 மணி வரையான 24 மணி நேரக் காலப்பகுதியில் இரணைமடுகுள நீரேந்து பிரதேசத்தில் 35 மில்லி மீற்றராகவும், அக்கராயன் குளம் நீரேந்து பிரதேசத்தில் 10.02 மில்லிமீற்றராகவும், கரியாலை நாகபடுவான் குள நீரேந்து பிரதேசத்தில் 29.8. மில்லி மீற்றராகவும் மழை வீழ்ச்சி கிடைக்கப் பெற்றுள்ளதாக இரணை மடு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## 21 கோடியே 19 இலட்சத்து 770 ரூபா நிதி

# உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்

## முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள தகவல்படி

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 10 கமநல சேவை நிலையங்களின் சீழ் 2017 - 2018 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்ச் செய்கையை 14 ஆயிரத்து591 விவசாயிகள் 43 ஆயிரத்து 954 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் இவர்களுக்கான உரமானியக் கொடுப்பனவாக21 கோடியே 19 இலட்சத்து 770 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கம் ஊடாக, பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட ஒட்டுசுட்டான், பாண்டியன்குளம், புதுக்குடியிருப்பு. முள்ளியவளை, செம்மலை, அளம்பில், உடையார்கட்டு, குமுழமுனை, ஒலுமடு ஆகிய 10 கமநல சேவை நிலையங்களின் கீழ் நடப்பாண்டுக்குரிய காலபோக நெற்ச் செய்கையை 14 ஆயிரத்து591 விவசாயிகள் 43 ஆயிரத்து 954 ஏக்கரில் மேற் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் ஒரு விவசாயிக்கு ஏக்கருக்கு5 ஆயிரம் ரூபா வீதம் மொத்தம் 5 ஏக்கரில் நெல்பயி ரிட்டிருப்பின் 25 ஆயிரம் ரூபா பணம் உரமானியக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு நெல் பயிரிட்டுள்ள விவசாயிகளில் முதலாம் ஆம் கட்டத்தில் 11 ஆயிரத்து 142 விவசாயிகளின் 33 ஆயிரத்து 422.75 ஏக்கர் நெற்ச் செய்கைக்குரிய உரமானியக் கொடுப்பனவாக 16 கோடியே 71 இலட்சத்து 13 ஆயிரத்து 750 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக் கத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வரவிடப்படவுள்ளது.

இரண்டாம் கட்ட உரமானியக் கொடுப்பனவாக3 ஆயிரத்து 449 விவசாயிகளின் 10 ஆயிரத்து 531.25 ஏக்கர் நெற்ச்செய்கைக்கு 5கோடியே 26 இலட்சத்து 56 ஆயிரத்து 250 ரூபா பணம் உரமானியக் கொடுப்பனவாக விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கத்திற்கு பகிர்ந் தளிக்கப்பட்டு வரவிடப்படவுள்ளது.

இந்த உரமானியக் கொடுப்பனவில் முதலாம் ஆம் கட்டக் கொடுப்பனவு எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# நித்தியநகரிலுள்ள குளங்கள் நீண்டகாலமாக புனரமைக்கவில்லை

## மக்கள் குற்றச்சாட்டு

(குருமன்காடு)

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பூவரசங்குளம் கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள நித்திய நகர் கிராமத்திலுள்ள இரண்டு குளங்கள் நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமையால் குறிப்பிட்ட கிராமத்து மக்கள் விவசாயம் செய்வதில் இடர்பாடுகளை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளனர்.

யுத்தத்தின் காரணமாக நித்தியநகர் கிராமத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் 1998 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் நீர்ப்பாசன நடவடிக்கைகள் சீரின்மையால் தமது விவசாய உற்பத்தியை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்தின் அபிவிருத்தி சங்கத் தலைவர் எஸ்.பரமசிவம் கருத்து தெரிவிக்கையில், நித்தி நகர் பகுதியில்வசிக்கும் 98 குடும்பங்களில் 55 குடும்பங்கள் விவசாயத்தையே தொழிலாக கொண்டிருக்கிறார்கள். நித்திக்குளம், அம்பாள்குளம் ஆகிய இரண்டு குளங்கள்அமைந்துள்ள நிலையில் அம்பாள் குளம் நீண்டகாலமாக புனரமைப்பு செய்யப்படவில்லை.

நித்திக்குளத்திலிருந்து வரும் நீரையே கிராமத்து விவசாயிகள் விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார்கள். நீர்ப்பாற்றாக்குறை காரணமாக கிராமத்தில் விவசாயம் பாதிக்கப்படுவதுடன்குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்படுவதாகவும் தெரிவித்தார்.


சம்பந்தப்பட்ட அதிகாரிகள் குளத்தை புனரமைக்க முன்வர வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-250)



வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரி அதிபர் சு.அமிர்தலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது குறித்த பாடசாலையில் இருந்து இம்முறை பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த 49 மாணவர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கு விருதுகளும்வழங்கப்பட்டது. (படம்: குருமன்காடு செய்தியாளர்)

# கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்டவகையில் அனைத்து அபிவிருத்திகளும் முடக்கம்

## முன்னாள் முதல்வர் நஷீர் குற்றச்சாட்டு



(ஏறாவூர்)

கிழக்கு மாகாணத்தில் திட்டமிடப்பட்ட வகையில் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளும் முடக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் ஹாபீஸ் நஷீர் அஹமட் குற்றம் சாட்டியுள்ளார்.

ஏறாவூரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டுக்கு முன்பாக ஆளுநரின் கைகளில் கிழக்கு மாகாண சபை கொடுக்கப்பட்டு, அபிவிருத்திகள் முடக்கப்பட்டு, பாரபட்சமாக, குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு அபிவிருத்திகள் நடத்தப்பட்ட வரலாற்று துரோகம் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என கேட்கின்றோம்.

தேர்தலை நடத்தாமல் மாகாணசபையில் ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில். முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த செயற்பாடு தொடர்பில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டிய கடப்பாடுள்ளது.

கபடத்தனமாக கிழக்கு மாகாணசபை ஆட்சியை கவிழ்த்துள்ள நிலையில் அதனை தமது சுய இலாபத்திற்காக அரசாங்கம் அதனை பிற்போடுகின்ற நிலையில் அதற்கு துணை போன எங்களது நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதற்கு பதில் கூறியாக வேண்டும்.

கடந்த ஆண்டு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவினை 10ஆயிரமாக எதிர்வரும் ஆண்டு அதிகரிக்கும் பணிகளை நாங்கள் மேற்கொண்டிருந்தோம்.

ஆனால் ஆளுநர் அதனை தட்டிக்கழிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக நாங்கள் அறிகின்றோம்.

எதிர்வரும் ஆண்டு முன்பள்ளி ஆசிரியர்கள் 10ஆயிரம் ரூபாவினை சம்பளமாக பெறுவதற்கான நடவடிக்கையினை ஆளுநர் செய்ய வேண்டும்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கான ஆசிரிய நியமனங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் இழுத்தடிப்பு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் அறிவிக்கப்பட்ட நிலையில் வேட்புமனுத் தாக்கல் கோரப்பட்டால் நியமனங்கள் வழங்கப்படுவதில் பாரிய சவால்கள் ஏற்படும்.

அத்துடன், 40புள்ளிகளுக்கு மேல் பெற்ற அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.

கிழக்கு மாகாணசபை என்ற ஒன்று இருக்கின்றதா? இல்லையா?என்று கேட்குமளவுக்கு கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளன.

திட்டமிட்ட, சதித்திட்டமாகவே நாங்கள் பார்க்கின்றோம். இதற்கு மத்திய அரசாங்கம் பதில் கூறியே ஆக வேண்டும்.

உள்ளூராட்சிமன்ற தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்திற்கு வெளியே ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து போட்டியிடவும், கிழக்கில் தனித்து போட்டியிடுவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாதுகாப்பு விருது விழா ஜனாதிபதி தலைமையில்



(கொழும்பு)

இலங்கை சமூக பாதுகாப்பு தேசிய விருது விழா-2017 நேற்று முற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் தாமரைத் தடாக கலையரங்கில் நடைபெற்றது.

இலங்கை சமூக பாதுகாப்பு சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு நன்மை முறையை நடைமுறைப்படுத்தி வழங்கப்பட்டுள்ள இலக்கை அடைந்துள்ள அரசாங்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதியால் விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஓய்வூதிய முறைமையின் நன்மைகளை மக்களிடம் கொண்டு செல்லுதல் மற்றும் ஓய்வூதிய முன்மொழிவு முறைமையை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளை பாராட்டும் வகையில் இந்த விருது விழா வருடாந்தம் நடத்தப்படுகின்றது.

அரச சேவையில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளாத அனைவருக்கும் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நன்மைகளை திட்டமிடுவது இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் பணியாகும். இதன்மூலம் சுயதொழில்களில் ஈடுபடுகின்றவர்கள், தனியார் துறையில் சேவை செய்பவர்கள், வெளிநாட்டு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், கலைஞர்கள், சுதேச மருத்துவர்கள் போன்ற அனைத்து துறைகளையும் இது உள்ளடக்கியுள்ளது.

இந்த நிகழ்வில் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, சமூக வலுவூட்டல், நலன்பேணல் கண்டி மரபுரிமை அமைச்சின் செயலாளர் ஷிரானி வீரக்கோன், இலங்கை சமூக பாதுகாப்பு சபையின் தலைவர் கீர்த்தி சுரஞ்சித் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-7)

# லயன் வீடுகளுக்கு பதிலாக 7பேர்ச்சஸ் காணி வழங்குவதே பிரதமரின் கனவு

## அமைச்சர் கயந்த தகவல்

(கொழும்பு)

தோட்ட பகுதிகளில் உள்ள லயன் வீடுகளுக்கு பதிலாக 7 பேர்ச்சஸ் காணியில் வீடு கட்டி கொடுப்பதே பிரதமரின் கனவு என அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

மாத்தறை-தெனியாய பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

"பிரதமருக்கு எண்ணம் ஒன்று இருக்கிறது. தோட்ட பகுதிகளில் லயன் அறைகளில் வாழ்பவர்களுக்கு லயன் வீடுகளுக்கு பதிலாக 7 பேர்ச்சஸ் காணி வழங்கப்பட்டு வீடு கட்டி காணி உறுதிப்பத்திரமும் வழங்கப்பட வேண்டும் என்பதே பிரதமரின் கனவாக இருக்கின்றது.



அதற்கான நடவடிக்கையை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் ஊடாக மேற்கொண்டு வருகின்றோம்" எனக் கூறினார். (இ-7)


# பணம் வைத்துவிட்டு செல்லும் திருடர்கள்

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் இரவு நேரங்களில் கொமியூனிகேஷன் நிலையங்களுக்குள் புகுந்து தொலைபேசி மீள்நிரப்பு அட்டைகளைத் திருடி விட்டுப் பணத்தை வைத்து விட்டுச் செல்லும் புதுமையான திருடர்கள் பற்றிய செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன் விஜேராம பகுதியில் இடம்பெற்ற கொம்யூனிகேஷன் நிலைய திருட்டைப் போன்று, அதே பாணியில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இரவு நேரங்களில் கொம்யூனிகேஷன் திருட்டுச் சம்பவங்கள் நடைபெற்றுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. (இ-7)

# அமெரிக்காவில் 27 பேர் பலி; ஜனாதிபதி மைத்திரி இரங்கல்




(கொழும்பு)

டெக்சாஸ் மாநிலத்தின், பாப்டிஸ்ட் தேவாலயத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கு இலங்கை அரசு அனுதாபம் வெளியிட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் உயிரிழந்தவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் அமெரிக்க மக்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் உள்ள சதர்லேண்ட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் அமைந்துள்ள தேவாலயத்தில் நேற்று முன்தினம் துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளதுடன், 30இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்திருந்தனர்.

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தினூடாக இரங்கல் செய்தியை வெளியிட்டுள்ளார். (இ-7)

# இலங்கை நீதித்துறை வரலாற்றில் முதன்முறையாக ஏற்பட்ட மாற்றம்

(கொழும்பு)

இலங்கையின் நீதித்துறை வரலாற்றில் புதிய மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மேலதிக சொலிஸ்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோதாகொட தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் உபகரணத்தை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்டவர்களை அடையாளம் காணும் புதிய தொழில் நுட்பம் இலங்கையின் நீதித்துறையில் இணைக்கப்பட்டுள்ளது.

புதிய தொழில்நுட்பத்தின் கீழ் இலங்கை நீதிமன்ற வரலாற்றில் முதன்முறையாக முறி ஆணைக்குழுவில் சாட்சி பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். குற்றவியல் குற்றம் தொடர்பில், முதன் முறையாக குற்ற விசாரணை திணைக்களத்தின் டிஜிற்றல் ஆய்வகத்தின் பொறுப்பதிகாரி பீ.எம்.சேனாரத்னவினால் சாட்சி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பிரச்சினைக்குரிய முறி வெளியிடப்பட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் முறி ஆணைக்குழுவின் விசேட அமர்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (இ-7)

# மேலும் 10 மேல் நீதிமன்றங்கள்

(கொழும்பு)

புதிதாக பத்து மேல் நீதிமன்றங்கள் நிறுவப்படும் என பின்வலு மற்றும் எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

அமைச்சில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் இடம்பெற்று வரும் ஊழல் மோசடிகள், பாரிய குற்றச் செயல்கள் போன்றன தொடர்பில் நீதியை துரித கதியில் நிலைநாட்டுவதற்கு 35 மேல் நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்படவுள்ளனர்.

தற்போது 75 மேல் நீதிமன்ற நீதிபதிகள் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த எண்ணிக்கை 10 ஆக உயர்த்தப்படும்.

புதிதாக நீதிபதிகளை நியமிப்பது குறித்த யோசனைக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# நேர்மையானவர்கள் அரசியலுக்குள் பிரவேசித்தால் நாடு அபிவிருத்தியடையும்-சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

நேர்மையானவர்கள் அரசியலுக்குள் பிரவேசிக்கும் போது, நாடு பொருளாதாரம் மற்றும் சிறந்த சமூகம் உள்ளிட்ட விடயங்களில் அபிவிருத்தி அடையும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வத்தளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

ஆனால், சில வருடங்களாக இவ்வாறானதொரு நிலை இருந்திருக்கவில்லையெனவும், இந்த நிலை தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)



# பிரபாகரன் உயிருடன் இருந்தால் ஆயுதம் ஏந்தியிருக்கமாட்டார்

## ரோஹித எம்.பி.கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டுக்கு பெற்றோலை பிரித்து வழங்க முடியாத இந்த அரசாங்கம் அதிகாரங்களைப் பகிர்வதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அதிகாரங்களைப் பகிர்வதன் மூலம் நாட்டின் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் தற்போது பெற்றோல் பிரச்சினை நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. இதற்கு என்ன தீர்வு? எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து இன்று வரை புதுப்புது பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தலைப்புச் செய்தியாக எதைப் போடுவது என்று ஊடகவியலாளர்கள் யோசிக்கும் அளவுக்கு இந்த நாட்டில் பிரச்சினைகள் கொட்டிக்கிடப்பதாகவும் குற்றம் சுமத்தினார்.

இலங்கையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து உருவாக்கியுள்ள இந்த ஆட்சி இனியும் முன்னோக்கி செல்வதற்கான வாய்ப்பு இல்லை எனத் தெரிவித்தார்.

இந்த ஆண்டின் இயலாமையைப் பார்க்கும் போது. தற்போது பிரபாகரன் இருந்து இருந்தால் நிலைமை எப்படி போய் இருக்கும் என்பதை நினைத்தாலே மனதில் பயம் எழுவதாக குறிப்பிட்டார். இந்த அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இருந்திருந்தால் எமது நிலை என்னவாகியிருக்கும்?



இன்று பிரபாகரன் இருந்திருந்தால் அவர் ஆயுதம் ஏந்தியிருக்கமாட்டார். அதற்கான தேவையும் இருந்திருக்காது. இவர்களை அடக்கியிருப்பார். அந்த அளவுக்கு பலவீனமான ஆட்சியே இது எனவும் சுட்டிக்காட்டினார்.மேலும், இனியும் தேர்தலை பிற்போடக்கூடாது. உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

தற்போது பெற்றோலை சிக்கனமாக பயன்படுத்துமாறு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இதனால் உங்களது வாகனங்களை தள்ளிக் கொண்டு செல்லுங்கள். முடியவில்லை என்றால் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவை அழைத்து வந்து தள்ளச்சொல்லுங்கள் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.(இ-7)

# ஊழல், மோசடி இல்லாத மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும்



## ஜனாதிபதி மைத்திரி அறிவுரை

(கொழும்பு)

**மக்கள், தேர்தல்களில் வாக்கைப் பயன்படுத்த செய்ய வேண்டியது ஊழல் மோசடி இல்லாத மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதாகும். நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தூய அரசியல் இயக்கத்தின் மூலம்தான் முடியும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவுரை வழங்கியுள்ளார்.**

பொலநறுவை அரலங்வில பிரதேசத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டை முன்னெடுத்துச் செல்கின்றபோது ஊழல் மோசடி இல்லாத நேர்மையான அரசியல் முகாம் ஒன்று அவசியம் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தனது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில் இருந்து தமக்கு பலமாக இருந்த கலைஞரான ஜே. ஆர்.குணசேன பெயரில் இசைக்கருவிகளையும் ஜனாதிபதி வழங்கி வைத்தார். (இ-7)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய ஓடுபாதைகள் அமைப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் ஜோனல் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதைகளின் தரம் மேம்படுத்தப்படவுள்ளது.

அதேவேளை புதிய ஓடு பாதைகளையும் நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பணிப்பாளர் ஜோனல் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது. வருடாந்தம் மேலும் 20 இலட்சம் பயணிகளை அதிகரிக்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது 60 இலட்சம் பயணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்தை பயன்படுத்துவதாக நிறைவேற்று பணிப்பாளர் ஜோனல் ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

ஓடுபாதை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்காக ஒரு கோடியே 50 இலட்சம் அமெரிக்க டொலர்களில் இருந்து ஒரு கோடியே 90 இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.இதன் மூலம் 2018 ஆம் ஆண்டளவில் ஓடுபாதையில் அதிகளவிலான விமானங்களை ஏற்றி இறக்க முடியும்.

தற்போது கட்டுநாயக்க வரும் விமானங்களின் எண்ணிக்கை அதிகளவில் இருப்பதனால் பயணிகளை துரித கதியில் கையாள்வதில் அதி காரிகள் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஓடுபாதைகள் கடந்த காலத்தில் திருத்தி அமைக்கப்பட்டதன் பின்னர் ஏ380 ரக விமானங்களை இலகுவாக கையாள முடிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த மூன்று வருட காலப்பகுதியில் கணிசமான வருமானத்தை ஈட்டிக் கொள்ள விமான நிலையத்தினால் முடிந்துள்ளது. (இ-7)

# சுதந்திரக் கட்சி-கூட்டு எதிரணியின் இடையேயான பேச்சுவார்த்தைகளை வெளிநாடுகள் சீர்குலைப்பு

## ஊவா முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டு எதிர்க்கட்சி இடையிலான பேச்சுவார்த்தைகளை வெளிநாட்டு சக்திகளே சீர்குலைத்து வருவதாக ஊவா மாகாண முதலமைச்சர் சமர சம்பத் தஸநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மற்றும் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆகியோர் இதற்கு பங்களிப்பு வழங்கி வருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாக பிளவுபடுத்த இவர்களுக்கு இந்தியா உதவி வருவதாகவும் முதலமைச்சர் குற்றம் சாட்டினார்.

கூட்டு எதிர்க்கட்சியினரை பேச்சுவார்த்தைக்கு வருமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். அவர்கள் என்ன செய்தனர்.

ஆறு விடயங்களை உள்ளடக்கி கடிதம் ஒன்றை அனுப்பினர். ஆறு நிபந்தனை பற்றியாவது பேச நாட்டின் ஜனாதிபதி அழைப்பு விடுத்ததும் செல்ல வேண்டாமா?

முடியும் முடியாது என்பதை கூறுவதற்காவது போயிருக்கலாம். பிரசன்ன ரணதுங்கவும் பசில் ராஜபக்ஷவும் இந்தியப் பெண்களை திருமணம் செய்தவர்கள்.

இவர்கள் இருவர் தான் இந்தியாவுக்கு தேவையான வகையில் வேலைகளை செய்கின்றனர்.

இந்தியாவே இவர்களை இயக்குகின்றது. இரண்டு தரப்பாக பிரிந்து இருப்பதை இந்தியாவின் றோ அமைப்பு செய்து வருகிறது எனவும் சமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார். (இ-7)

# பாரதம்

# தனிநாடு கோரி போராடிய காட்டலோனியா தலைவர் கார்லெஸ் பொலிஸில் சரண்



(பிரெஸ்ஸல்ஸ்)

காட்டலோனியா தலைவர் கார்லஸ் பூட்ஜிய மோண்ட் மற்றும் அவரது ஆதரவாளர்களை கைது செய்ய பிடியாணை பிறப்பித்துள்ள நிலையில்,நேற்று அவர்கள் பெல்ஜியம் பொலிஸில் சரணடைந்துள்ளனர்.

ஸ்பெயின் நாட்டு பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் மாகாணம் காட்டலோனியா. இங்கு தனிநாடாக பிரிவது தொடர்பான வாக்கெடுப்பு கடந்த மாதம் முதலாம் திகதி நடந்தது. இதில் காட்டலோனியா தனி நாடாக பிரிந்து செல்வதற்கு 90 சதவீதம் மக்கள் ஆதரவு தெரிவித்தனர்.

இதையடுத்து, கடந்த மாதம் 27 ஆம் திகதி ஸ்பெயினிடம் இருந்து விடுதலை பெற்றதாக காட்ட லோனியா பாராளுமன்றம் அறிவித்தது.


காட்டலோனியா சுதந்திர பிரகடனம் செய்த சில மணி நேரங்களில் பாராளுமன்றத்தை கலைத்து, நேரடி நிர்வாகம் அமுல்படுத்தப்படுவதாக ஸ்பெயின் அரசு அறிவித்தது. கலைக்கப்பட்ட காட்டலோனியா பாராளுமன்றத்திற்கு டிசெம்பர் மாதம் மறு தேர்தல் நடத்தப்படும் என தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, பிரிவினைவாத நடவடிக்கையில் ஈடுபட்டதாக கூறி காட்ட லோனியா தலைவர் கார்லஸ் பூட்ஜிய மோண்ட் உள்ளிட்ட 5 பேர்மீது ஸ்பெயின் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. விசாரணைக்கு ஆஜராகாத பூட்ஜிய மோண்ட் உட்பட 5 பேருக்கு பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் காட்டலோனியா ஆட்சியில் இருந்து நீக்கப்பட்ட கார்லஸ் பூட்ஜிய மோண்ட் மற்றும் அவருடைய ஆலோசகர்கள் 4 பேர் பெல்ஜியம் பொலிஸில் சரணடைந்துள்ளனர் என தெரிவித்துள்ளனர். (இ-7)

# இடஒதுக்கீடு மசோதா விவகாரத்தில் பெண்களுக்கு பிரதமர் மோடி துரோகம்

## இமாச்சல முதல்வர் குற்றச்சாட்டு



(டில்லி)

மகளிர் இடஒதுக்கீடு மசோதா விவகாரத்தில் பிரதமர் நரேந்திர மோடி பெண்களுக்கு துரோகம் இழைத்துவிட்டார் என்று இமாச்சல முதல்வர் வீரபத்ர சிங் குற்றம் சாட்டியுள்ளார்.


இமாச்சல பிரதேசத்தில் வரும் நாளை மறுதினம் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ளது. அந்த மாநிலத்தில் முதல்வர் வீரபத்ர சிங் தலைமையிலான காங்கிரஸ் ஆட்சி நடைபெற்று வருகிறது. காங்கிரஸ் தரப்பில் வீரபத்ர சிங் முதல்வர் வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ளார்.

தேர்தலுக்கு ஒருசில தினங்களே உள்ள நிலையில் ஆளும் காங்கிரஸ், எதிர்க்கட்சியான பாஜக தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

முதல்வர் வீரபத்ர சிங் டுவிட்டரில் தெரிவித்திருப்பதாவது, இந்தியாவை பெண்கள் கட்டி எழுப்புகின்றனர் என்று பிரதமர் நரேந்திர மோடி புகழாரம் சூட்டினார். உண்மையில் அவர், பெண்களின் நலனுக்கு எதிராக செயற்பட்டு வருகிறார்.

மகளிர் இடஒதுக்கீடு மசோதா கடந்த 2010 மார்ச் 9 ஆம் திகதி மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது. மக்களவையில் பாஜகவுக்கு தற்போதுள்ள பெரும்பான்மையை பயன்படுத்தி இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கடந்த செப்டெம்பர் 21 ஆம் திகதி பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதினார். இந்த மசோதாவை நிறைவேற்றாமல் பிரதமர் பெண்களுக்கு துரோகம் இழைத்து விட்டார். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# சவுதி இளவரசர் விபத்தில் பலி!



(ரியாத்)


ஏமன் நாட்டு எல்லை அருகில் நடைபெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் சிக்கி சவுதி அரேபியா இளவரசர் மன்சூர் பின் மாக்ரோன் உயிரிழந்தார் என அந்நாட்டு ஊடகம் தகவல் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியா இளவரசர்களுள் ஒருவரும், ஆசிர் மாகாண துணை ஆளுநராக பதவி வகித்தவருமான மன்சூர் பின் மாக்ரோன் நேற்று முன்தினம் அதிகாரிகள் சிலருடன் ஹெலிகொப்டரில் சென்று கொண்டிருந்தார். ஏமன் நாட்டு எல்லை அருகில் பறந்து கொண்டிருந்த போது திடீரென ஹெலிகொப்டர் கீழே விழுந்து நொறுங்கியது.

இந்த விபத்தில் சவுதி இளவரசர் மன்சூர் பின் உயிரிழந்தார் என அந்நாட்டு செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் தலைமையிலான ஊழல் தடுப்பு ஆணைக்குழு உலக முன்னணி கோடீஸ்வரர்களில் ஒருவரான அல்வாலித் பின் தலால் உள்ளிட்ட 11 இளவரசர்களை கைது செய்துள்ள நிலையில் இந்த விபத்து நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்காவி[...] தேவாலயத்[...] 27 பேர் [...] 30 பேர் படு[...]



அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள சதர்லேண்ட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் அமைந்துள்ள பாப்டிஸ்ட் தேவாலயத்தில் நேற்று முன்தினம் காலை ஏராளமானோர் கூடியி

# கந்துவட்டியை விமர்சித்த கேலிச்சித்திர வரைஞர் பாலா நேற்று விடுவிப்பு

(சென்னை)

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 'லைன்ஸ்' ஊடகத்தின் ஆசிரியரும், கேலிச்சித்திர ஓவியருமான பாலா, நேற்று திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.




நெல்லை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவர், நெல்லை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.


அதன் பின்னர் நேற்று கடும்நிபந்தனைகளுடன் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கந்துவட்டி பிரச்சினையை மையப்படுத்தி, முதல்வர் எடப்பாடி மற்றும் நெல்லை மாவட்ட ஆட்சியர், நெல்லையின் பொலிஸ் ஆணையர் ஆகியோரை விமர்சித்து வரைந்த கேலிச்சித்திரம் தொடர்பில், நெல்லை ஆட்சியர் கொடுத்த முறைப்பாட்டிற்கு இணங்க, நேற்று முன்தினம் நெல்லை பொலிஸாரால் பாலா கைது செய்யப்பட்டார்.

இவர் வரைந்த கேலிச்சித்திரம், லைன்ஸ் இணையம் உட்பட, பல்வேறு இணையத்தளங்களிலும் வெகுவாக பரவியதையடுத்து, இவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வெளிநாடு

# ...வில் தொடரும் சோகம்
# ...தில் துப்பாக்கிச்சூடு
# ...ர் உயிரிழப்பு
# ...டுகாயம்



(வோஷிங்டன்)

**அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்திலுள்ள பாப்டிஸ்ட் தேவாலயத்தில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் 27 பேர் பலியாகினர். மேலும் 30க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.**

...ருந்தனர்.

அப்போது அங்கு வந்த மர்ம நபர் தான் கொண்டு வந்திருந்த துப்பாக்கியால் . அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாக சுட தொடங்கினார். இதனால் தேவாலயத்தில் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மக்கள் அதிர்ச்சியடைந்தனர். இந்த கண்மூடித்தனமான துப்பாக்கி சூட்டில் 27 பேர் பலியாகினர். மேலும், 30க்கு மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தகவலறிந்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றனர். அவர்கள் பலியானவர்கள் உடல்களை பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

படுகாயம் அடைந்து உயிருக்கு போராடிய பலரை ஹெலிகொப்டர் உதவியுடன் மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்த்து, சிகிச்சை அளித்து வருகின்றனர். துப்பாக்கிச்சூடு நடத்திய நபரை சுட்டுக் கொன்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தை தொடர்ந்து சதர்லேண்ட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பேரழிவு ஏற்படும்
# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்புக்கு வடகொரியா கடும் எச்சரிக்கை



(சியோல்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கருத்துக்கள் அமெரிக்காவுக்கு பேரழிவை கொண்டு வரும் என வடகோரியா எச்சரிக்கை விடுத்துள்ளது.

வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களை முடிவுக்கு கொண்டு வந்தே ஆக வேண்டும் என்பதில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உறுதியாகவுள்ளார்.

இது தொடர்பாக அவருக்கும், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் உன்னுக்கும் இடையே தொடர் வார்த்தைப் போர் நடந்து வந்தது.

இந்நிலையில், வட கொரியாவின் அணு ஆயுதத் திட்டங்களுக்கு எதிராக ஆசிய நாடுகளை ஒன்று திரட்டும் நோக்கத்துடன் ட்ரம்ப் அங்கு சுற்றுப்பயணம் தொடங்கியுள்ளார்.

முதல் கட்டமாக ஜப்பான் சென்றுள்ள அவர் சென்ற உடனேயே வடகொரியாவை மறைமுகமாகச் சாடினார். அப்போது அவர், எந்த சர்வாதிகாரியும், அமெரிக்காவை குறைத்து மதிப்பிட்டு விட முடியாது எனச் சாடினார்.

ட்ரம்ப், இன்று தென் கொரியா செல்லும் நிலையில், ஜப்பானில் இப்படி கருத்து வெளியிட்டிருப்பதற்கு வட கொரியா பதிலடி கொடுத்துள்ளது.


இதுதொடர்பாக அமெரிக்கப் பாராளுமன்ற வெளியுறவுத் துறைத் கமிட்டி தலைவர் பாப் கார்க்கர் மற்றும் முன்னாள் அதிகாரிகள், அர்த்தமே இல்லாமல் ட்ரம்ப் வடகொரியாவுக்கு அழுத்தங்களை ஏற்படுத்தி வருகிறார் என்று கூறியிருப்பதை மேற்கோள் காட்டி, வடகொரியாவின் ஆளுங்கட்சி நாளேடான 'ரோடாங் சின்முன்' செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அதில், அமெரிக்க ஜனாதிபதி முட்டாள்தனமாக கருத்துக்களை தெரிவிப்பதன் மூலமாக வடகொரியாவை தீவிரமாக தூண்டி விடுகிறார்.

வடகொரியாவின் கடுமையான விருப்பம் மற்றும் துணிச்சலான நடவடிக்கைகளை அமெரிக்கா தவறாக மதிப்பிட்டது என்றால், வட கொரியா அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி ஒரு உறுதியான மற்றும் இரக்கமற்ற தண்டனையை விதிக்க நேரிடும். அதை சமாளிக்க வேண்டிய நிலைக்கு அமெரிக்கா நிர்ப்பந்திக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

மேலும், ட்ரம்பின் கடுமையான கருத்துக்கள், அமெரிக்காவின் நிலப்பகுதிக்கு அணுசக்தி பேரழிவை கொண்டு வரக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது. (இ-7)

# சிரியாவில் கார்க்குண்டுத் தாக்குதலில் பலி எண்ணிக்கை 75 ஆக அதிகரிப்பு



(பெய்ரூட்)

சிரியாவில் டேர்எஸ்ஸர்நகரில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய கார் குண்டு வெடிப்பு தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 75-ஆக அதிகரித்துள்ளது.

சிரியா நாட்டில் 2011-ம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போர் நடைபெற்று வருகிறது. அங்குள்ள ஐ.எஸ். தீவிரவாதிகளை அழிக்கும் நடவடிக் கையில் இதுவரை அங்கு 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். தீவிரவாதிகளை அழிப்பதில் உலக நாடுகள் சிரியாவுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றன. இதுபோன்ற தாக்குதல்களில் சில சமயம் அப்பாவி பொதுமக்களும் கொல்லப்பட்டு வருகின்றனர். இந்த தாக்குதலுக்கு பயந்து பொது மக்கள் வேறு இடங்களுக்கு புலம் பெயர்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், சிரியாவின் கிழக்கு டேர் எஸ்ஸர் நகரில் புலம் பெயர்ந்த பொது மக்கள் கூடியிருந்த இடத்தில் ஐ.எஸ். தீவிரவாதிகள் நேற்று முன்தினம் கார் வெடிகுண்டு மூலம் தாக்குதல் நடத்தினர். தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் காயமடைந்தவர்களை மீட்டு அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர். இந்த தாக்குதலில் 12 பேர் உயிரிழந்ததாக முதல் கட்ட விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஐ.எஸ். தீவிரவாதிகள் நடத்திய இந்த கொலை வெறி தாக்குதலில் சுமார் 75 பேர் உயிரிழந்துள்ளதாக சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பு குழு தலைவர் ரமி அப்தெல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 12ஆம் திகதி ஹசகே பகுதியில் தீவிரவாதிகள் நடத்திய கார் வெடி குண்டு தாக்குதலில் குர்திஷ் படையினர் மற்றும் பொதுமக்கள் உட்பட 6 பேர் உயிரிழந்தனர். (இ-7)

## தாம்ரே புயல் தாக்கியதையடுத்து
# வியட்நாமில் வெள்ளப்பெருக்கு 50 பேர் பலி! 20 பேர் மாயம்



(ஹனோய்)

வியட்நாமின் மத்தியப் பகுதியில் தாம்ரே சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்துக்கு 50பேர் பலியாகியுள்ளனர். 20 பேரைக் காணவில்லை.

இதுகுறித்து வியட்நாம் தேசிய பேரிடர் மேலாண்மை அதிகாரிகள் தரப்பில், "வியட்நாமின் மத்திய மற்றும் தென் பகுதியில் வீசிய தாம்ரே சூறாவளியால் மணிக்கு 90 கி.மீ. வரை பலமாக காற்று வீசியது. தாம்ரே சூறாவளியால் ஏற்பட்ட வெள்ளத்துக்கு இதுவரை 50 பேர் பலியாகியுள்ளனர். 20 பேரைக் காணவில்லை. 40,000க்கும் அதிகமான வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. பல்வேறு இடங்களில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்று கூறப்பட்டுள்ளது.

தாம்ரே சூறாவளியால் வியட்நாமின் நாட்ராங் நகரம் மிகுந்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

பெரும்பாலான இடங்களில் மரங்கள் வேருடன் சாய்ந்துள்ளதால், மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. சுமார் 30,000 மக்கள் அவர்களது பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ளனர்.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாம் அதிகமான புயல்களை சந்தித்து வருகிறது. மேலும் வெள்ளப் பெருக்கு காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பெரும் மரணங்கள் ஏற்படுகின்றன. (இ-7)

# சட்டத்தை மீறும் பொலிஸாருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை

## பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுமக்களின் பாதுகாப்புக்காக வுள்ள பொலிஸ் படையிலுள்ளவர்கள் சட்டங் களை மீறினால் அதற்கு எதிராகக் கடு மையான நடவடிக்கை எடுப்படு மென பொலிஸ்மா அதிபர் பூஜிதஜெயசுந்தர எச்சரித்துள்ளார்.**



கண்டியில் நேற்று நடை பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக் கையில் அவர் இத னைக் கூறியுள்ளார். பொலிஸ் நிலை யங்களுக்கு இன்னும் 10 ஆயிரம் பேர் இணைத்துக் கொள்ள வேண்டிய தேவை யுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# பூர்த்தியாக்கப்படுமா? அபிவிருத்தித் திட்டங்கள்



## மக்கள் விசனத்துடன் கேள்வி

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிர தேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் கிராமத்துக்கு 5 இலட்சம் ரூபாய் வேலைத் திட்டத்தின் கீழ் கிராமங்களில் அபிவிருத்தி தொடர்பான வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்பட்ட போதிலும் முழுமையாக நிறைவு பெறாத நிலையில் உள்ளதாக பிர தேச மக்கள் விசனம் வெளி யிட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு கரை யோர கிராமங்களில் படகுத் துறை மற்றும் கடற்கரைக்கு மின் விளக்குகள் பொருத்து வதற்காக மின்கம்பங்கள் நாட் டப்பட்டுள்ளன. ஆனால் இது வரை மின் இணைப்பு வழங் கப்படவில்லையென பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்த ப்பட்ட அதிகாரிகள் கவனத் திற்கு கொண்டு உரிய நட வடிக்கையெடுக்குமாறு இப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-64)

# முக்கிய விவகாரங்கள் குறித்து மு.காவுடன் பேசவுள்ளது கூட்டமைப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் அடுத்த வாரமளவில் முக்கிய பேச்சுக்கள் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



அரசியலமைப்பு மறுசீர மைப்பு விவகாரம், கிழக் கில் தமிழ்-முஸ்லிம் விவ காரம் என்பன தொடர்பாக இம்மாத நடுப்பகுதியில் பேச் சுக்கள் நடத்தப்படவுள்ளன.

இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, கொழு ம்பு ஆங்கில வாரஇதழ் ஒன் றுக்கு இந்தத் தகவலை வெளி யிட்டுள்ளார்.

அதிகாரப்பகிர்வு தொட ர்பான அபிலாஷைகள் மற் றும் கிழக்கில் முஸ்லிம்க ளுக்கான தனி அலகு கோரி க்கை என்பன குறித்தும் இந்தப் பேச்சுக்களில் கவனம் செலுத்தப்படும்.

வரவு-செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்ட பின்னர். இந்தப் பேச்சுக்கள் நடத்தப்படும். அப்போது எல்லா நாடாளு மன்ற உறுப்பினர்களும் கொழும்பில் இருப்பார்கள்.

நாங்கள் பேச்சுக்களை நடத்த வேண்டியுள்ளது. பல் வேறு காரணங்களால் இது பிற்போடப்பட்டு வந்தது.

வழிநடத்தல் குழுவில் உள்ள அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் நாங்கள் பேச்சுக்களை தொடர்ந்து நடத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தூதரகம் அமைக்க இடம் தேடுகிறது நியூசிலாந்து அரசு

(கொழும்பு)

இலங்கையில் தூதரக த்தை அமைப்பதற்குப் பொருத் தமான இடத்தை, நியூசிலா ந்து அரசாங்கம் தேடி வரு வதாக இந்தியாவுக்கான நியூ சிலாந்து தூதுவர் ஜொவ ன்னா கெம்கேர்ஸ் தெரி வித்துள்ளார்.

இலங்கையில் 44 நாடு கள் தூதரகங்களைக் கொண் டுள்ளன. அதேவேளை, 89 நாடுகள் டில்லியில் உள்ள தமது நாட்டின் தூதரகம் வழியாகவே இலங்கையு டனான இராஜதந்திர உற வுகளைப்பேணிவருகின்றன.

டில்லியில் உள்ள தூதர கம் மூலம், இலங்கை யுட னான இராஜதந்திரத் தொடர் புகளைப் பேணி வரும் நியூசி லாந்து, கொழும்பில் தூதரக த்தை அமைக்கத் திட்டமிட்டு ள்ளது.

இலங்கையில் தமது நாடு புதிய தூதரகத்தை விரைவில் திறக்கவுள்ளதாக நியூசிலாந்து வெளி விவகார அமைச்சர் முரே மக்கலி கடந்த மார்ச் 22 ஆம் திகதி அறிவித்தி ருந்தார்.

இந் நிலையிலேயே, கொழும்பில் புதிய தூதர கத்தை அமைப்பதற்கான இடத்தை தேடி வருவதாக டில்லியில் உள்ள நியூசிலா ந்து தூதுவர் ஜொவன்னா கெம்கேர்ஸ் தெரிவித்து ள்ளார்.

"இதற்கு சிலகாலம்தேவை ப்படும். 2018ஆம் ஆண்டு இறுதியில் கொழும்பில் தூதரகத்தை திறக்க முடியும் என்று நம்புகிறோம். அல்லது நிச்சயமாக, 2019 தொடக்கத்தில் திறந்து விடுவோம்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

# நாமே சொல்லலாமா?

சில மாதங்களுக்கு முன்பு மதுரை அண்ணா நகரில் என் உறவினர் வீட்டுக்குப் கிரகப்பிர வேசத்திற்கு குடும்பத்துடன் போயிருந்தேன்.

ஹோட்டலிலிருந்து கிரகப்பிரவேசம் நடந்த இடத்திற்குச் செல்ல எனக்கு ஒரு கார் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. என் உபயோகத்திலிருந்த அந்தக் காரின் உரிமையாளர் அதே கிரகப் பிரவேசத்திற்கு ஆட்டோவில் வந்து இறங்கினார். நான் ஆடிப்போய் விட்டேன்.

"என்ன சார் இது! எனக்குக் காரைத் தந்து விட்டு ஆட்டோவில் நீங்கள் வருவதாவது? என் வண்டிக்கு வேலையிருக்கிறது என்று நீங்கள் தாராளமாகச் சொல்லியிருக்கலாமே!'' என்றெல்லாம் மனசே ஆறாமல் புலம்பித் தள்ளிவிட்டேன்.

அவரோ, "அதனால் என்னங்க இப்போ? எப்பவோ வர்றீங்க நீங்க! நான் ஒரு நாள் ஆட்டோவில் போனால் என்ன?'' என்றார் மிகச் சாதாரணமாக.

அன்றிலிருந்து அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதையும் பிரியமும் ஏற்பட்டுவிட்டன. அவர் கார் தந்ததற்காக அல்ல; அவர் சொன்ன வார்த்தைகளுக்காக.

அவரே வேறு ஒரு கிருகப்பிரவேசத்திற்கோ அல்லது வேறு ஒரு நிகழ்ச்சிக்கோ சென்றி ருந்தால் எனக்கு இந்த உண்மை தெரியாம லேயே போயிருக்கும். ஏதோ அவரும் கார் தந்தார் என்பதாகவே விடயம் முடிந்திருக்கும்.

ஒரு வெளியூர் மாணவி தன் ஊரில் கிடைக் காத புத்தகம் ஒன்றைக் கேட்டு, சென்னை யில் உள்ள தன் உறவினருக்குக் கடிதம் எழுதினார். உறவினர் நாயாய் அலைந்தார். படாத பாடுபட்டார். ஏகப்பட்ட போன்களைச் சுழற்றினார். கிடைக்கவில்லையே என்று மனச் சங்கடப்பட்டார். உதவ முடிய வில்லையே என்று ஏங்கினார். ஆனால் கடிதத்தில் எழு தும் போது இங்கும் அந்தப் புத்தம் கிடைக்க வில்லை என்று சுருக்கமாக எழுதிவிட்டார். அம் மாணவியோ ''சே! இந்த ஆளுக்குக் கொஞ்சங்கூட அக்கறையோ உதவுகிற எண் ணமோ இல்லை'' என்று பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்.

எல்லாம் இவர் சரிவரத் தெரியப்படுத்தாத தால் வந்த கோளாறு.

நாம் கஷ்டப்பட்டு ஒரு தொகையைத் திரட் டிக் கடனாக கொடுத்து உதவியிருப்பபோம். வாங்கியவரோ, இவர் எக்கச்சக்கமாக வைத்தி ருக்கிறார் போலிருக்கிறது. நாம் இன்னும் கூடக் கேட்டிருக்கலாம் என்று நினைப்பார்.

அரும்பாடுபட்டு ஒரு வேலை வாங்கிக் கொடுத்திருப்போம். சுலபமா வாங்கிவிட்டார் என்று வேலை கிடைத்தவர் நினைப்பார்.

இவற்றிலெல்லாம் எவ்வளவு இடைவெளி பார்த்தீர்களா? காரணம் என்ன தெரியுமா? மற்றவர்களுக்கு உண்மை நிலவரங்கள் தெரி யாதபடி நாம் பார்த்துக் கொள்வதுதான்.

சேச்சே ! இதைப் போய்ச் சொல்லிக் கொண் டிருப்பதாவது? என்று நாம் எண்ணுவது தவறு. நம் மூலம் தெரியாவிட்டால் பிறர் மூலம் தெரியப்போவது இல்லை.

நடந்தவற்றை மிகைப்படுத்தி சொல்லுவதை நிறுத்தி விட்டு இயல்பாகச் சொல்லலாம். முடிந்தால் குறைத்துச் சொல்லலாம்.

தவணை தவணையாகவும் சொல்லலாம்.

ஆனால் , சொல்லிக் காண்பிக்கிறான் பார் என்கிற குற்றச்சாட்டு வராதபடி பார்த்துக் கொள்வது முக்கியம். இதைச் செய்வதன் மூலம்பிரியம் பெருகும் நல்லுறவு பலப்படும். இது உறுதி!

**லேனா தமிழ்வாணன்**

# சுதந்திர கட்சியுடன் எந்தவொரு உடன்படிக்கையும் கிடையாது

## கூட்டு எதிர்க்கட்சி உறுதி

(கொழும்பு)

**இந்த அரசுடன் இணைந்திருக்கும் வரை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் எந்தவொரு உடன்படிக்கையும் கிடையாது என கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பு பத்திரிகை யொன்றுக்கு அளித்த நேர் காணலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்துடன் கூட்டணி வைத்திருக்கும் வரையில் அந்தக் கட்சியுடன் எந்தவொரு இணக்கப்பாடும் ஏற் படுத்திக் கொள்ளப்படாது.

கூட்டு எதிர்க்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் என வெளியாகி வரும் தகவல்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவது தொடர்பில் சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன.


இந்த நிபந்தனைகளை சுதந்திரக் கட்சி ஏற்றுக்கொண்டால் கூட்டணி சேர்வது குறித்து கூட்டு எதிர்க்கட்சி கவனம் செலுத்தும்.

கூட்டு எதிர்க்கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளதாக வெளியாகி வரும் தகவல்களில் உண்மையில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்ட கூட்டு எதிர்க்கட்சி நடவடிக்கை எடுக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஹிருணிகாவுக்கு எதிரான வழக்கில் 8 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்

(கொழும்பு)



நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர உட்பட 9 பேருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில் 8 பிரதிவாதிகள் நேற்று குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதனால், தண்டனைக்கான தீர்ப்பு வழங்குவதை கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆர்.குருசிங்க எதிர்வரும் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

தெமட்டகொடை பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் தொழில் புரிந்த இளைஞர் ஒருவரை கடத்திச் சென்று தடுத்து வைத்து தாக்கியதாக இவர்களுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி ஹிருணிகா உட்பட பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## அ'புரத்தில் ஆரம்பிக்கிறார் மகிந்த

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உள்ளூராட்சித் தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 12ஆம் திகதி அநுராதபுரவில் உள்ள சல்காடோ மைதானத்தில் முதலாவது பரப்புரைக் கூட்டம் மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

கூட்டு எதிரணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளதுடன், இந்தக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளனர் என்று, அந்தக் கட்சியின் பரப்புரைப் பேச்சாளர் சஞ்சீவ எதிரிமன்ன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி நாடு முழுவதிலும் தாமரை மொட்டு சின்னத்தில் தனித்துப் போட்டியிடத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## பஸ் குடை சாய்ந்து 28 பேர் படுகாயம்



(கொழும்பு)

பதுளையிலிருந்து போடைஸ் ஊடாக ஹற்றன் நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் ஒன்று குடைசாய்ந்ததில் 28 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பதுளை ஹற்றன் பிரதான வீதியில் போடைஸ் என்.சி தோட்டப் பகுதியில் குறித்த பஸ் தலைகீழாக குடை சாய்ந்துள்ளது. பதுளை பகுதியிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு ஹற்றன் பகுதிக்கு சென்ற குறித்த பஸ் பாதையை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

சாரதியின் கட்டுப்பாட்டை யிழந்ததன் காரணமாகவே இந்த விபத்து நேர்ந்ததாக தெரியவந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 28 பேரில் 3 பேர் பெரதெனியா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-7)

## தேசத்துரோகி விமல் வீரவன்ச பணம் என்றால் வாய்திறப்பார்

### சுதந்திரக்கட்சி காட்டம்

(கொழும்பு)



ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச பணத்திற்காக மட்டுமே இன்று வாய் திறப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

உண்ணாவிரதத்தை கூட ஒழுங்காக செய்யமுடியாத நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, தேசத்துரோக செயற்பாடுகளிலேயே ஈடுபட்டு வருவதாக சுதந்திரக் கட்சியின் கோட்டை மாநகர சபை முன்னாள் முதல்வரும் அமைப்பாளருமான ஜனக்க ரணவக்க குற்றம் சாட்டினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டை மாநகர அமைப்பாளரான ஜனக்க ரணவக்க ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதில் "விமல் வீரவன்ச மீது எமக்கு கௌரவம் இருந்தது. நாங்கள் உயர்தரம் கற்கும் காலத்தில் விமல் வீரவன்ச ஒரு புரட்சியாளர் என்ற கௌரவத்தை அவர் மீது வைத்திருந்தோம். மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றில் அவர் ஈடுபட்டிருந்தார் அல்லவா. 24 மணி நேரத்திற்குள் மகிந்த ராஜபக்ஷ அங்கு சென்று தண்ணீரை அருந்தக் கொடுத்து போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்திருந்தார். அப்போதுதான் முழு நாட்டு மக்களும் விமல் வீரவன்ச எவ்வகையான புரட்சியாளர் என்பதை அறிந்து கொண்டார்கள். நாட்டை சரிப்படுத்த வேண்டும் என்று குரல்கொடுத்துவரும் விமல் வீரவன்சவுக்கு அவரது கட்சியையே ஒழுங்கமைக்க முடியாமலிருக்கிறது.

அவர் தனது கட்சி அமைப்பாளர்களை தனது அறிவுமட்டத்திற்கும் குறைவானவர்களையே தெரிவுசெய்கிறார். ஏனென்றால் தன்னைவிட கல்வி அறிவுள்ளவர்களை நியமித்தால் அவருக்கே பிரச்சினை ஏற்படும் என்று நினைத்தே விமல் வீரவன்ச இப்படிச் செய்கிறார்.

88,89களில் நாங்கள் கண்ட விமல் வீரவன்ச அல்ல இப்போது இருப்பது. இன்று அவர் பணத்தின் பின்னால்தான் செல்கின்றார். இன்று இருக்கும் விமல் வீரவன்ச புரட்சியாளர் கிடையாது. அவர் வெறுமனே தேசத்துரோகி. அவரது வாய் பணத்திற்காக மட்டுமே இன்று பயன்படுகிறது" என்றும் கடுமையாக விமர்சித்துள்ளார். (இ-7)

## மக்களை ஏமாற்றி கீதாவுக்கு வேட்புமனு!

### பிரதியமைச்சர் சாடல்

(கொழும்பு)

வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனரா? என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என பிரதியமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் அதன் பின்னர் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே அஜித் பி. பெரேரா இதனைக் கூறியுள்ளார்.

மக்களை ஏமாற்றி கீதா குமாரசிங்கவுக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பை வழங்கியுள்ளனர்.

இந்த செயல் முற்றிலும் சட்டத்திற்கு எதிரானது. அதே வேளை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு நியமிக்கப்படுபவர், இலங்கை குடியுரிமை கொண்டவரா? இல்லையா? என்பது அடிப்படை தகுதியல்ல.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவி அல்லது ஜனாதிபதி பதவியை வகிப்பவர் வேறு நாடு ஒன்றின் குடியுரிமையைக் கொண்டிருப்பது பிரச்சினைக்குரிய விடயம் எனவும் அஜித் பி. பெரேரா மேலும் தெரிவித்தார். (இ-7)

# விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு

(கொழும்பு)

பொலிஸ் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவினரால் தனக்கு எதிராக மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாக, முன்னாள் ஜனாதிபதியின் பிரதம அதிகாரி காமினி செனரத், உயர்நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தியுள்ளார்.



தன்னைக் கைது செய்வதை தவிர்க்குமாறு உத்தரவிடக் கோரி, காமினி செனரத் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை நேற்று உயர்நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போதே, அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இந்த விடயத்தை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தினார்.

மேலும், தேவையான வாக்குமூலத்தை வழங்க நாளை மறுதினம் 9ஆம் திகதி காமினி செனரத் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராகத் தயாராகவுள்ளதாகவும் அவரது சட்டத்தரணி தெரிவித்தார். (இ-7)




# கல்முனை மாநகர சபையை பிரிப்பதன் மூலம் தமிழர்களை நிரந்தர அடிமைகளாக்கச் சதி!

## அமைச்சர் அனந்தி குற்றச்சாட்டு




கல்முனை மாநகர சபையினை நான்காக பிரிக்க வேண்டும் எனும் கோரிக்கையானது கல்முனையில் வாழ்கின்ற தமிழர்கள் எப்போதும் முஸ்லிம்களின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் அடிமைகளாக இருக்க வேண்டும் என்ற திட்டத்திற்கான கோரிக்கையாக காணப்படுகின்றது.

எனவே கல்முனை மாநகர சபையினை பிரிக்கின்ற விடயத்தில் சாய்ந்தமருதை தனியாக பிரித்துக் கொடுத்துவிட்டு எஞ்சிய பிரதேசங்களை ஒரு சபையாக அமைக்குமாறு வடமாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களை உருவாக்குதல் மற்றும் தரம் உயர்த்துதல் என்பதற்கு அமைவாக கல்முனை மாநகர சபையினை பிரிப்பது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையினை பிரிப்பதற்கு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துவருகின்றனர். கல்முனை மாநகர சபையினை பிரிக்கின்ற விடயத்தில் கல்முனை தமிழ் மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருக்கின்றேன்.

கல்முனை நகரமானது தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசமாக இருந்துவருகிறது. தமிழர்கள் செறிந்து வாழும் இப்பிரதேசம் சுதந்திரத்திற்கு பின்னர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு கல்முனை தமிழர்கள் அந்திக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

தற்போது தோற்றுவிக்கப்பட்டுள்ள சூழ்நிலையை சாதகமாக பயன்படுத்தி கல்முனை வாழ் தமிழ் மக்களுக்கு விமோசனத்தையும் விடிவையும் தேடிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசியல்வாதிகளுக்கு இருக்கின்றது. கல்முனை மாநகர சபையினை நான்காக பிரிக்குமாறு பிரதான முஸ்லிம் கட்சிகள் கோரிநிற்கின்றன. இக்கோரிக்கையை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. கல்முனை வாழ் தமிழர்களை அடக்கி ஆள்வதற்கான கோரிக்கையாகவே இதனைப் பார்க்கின்றேன்.

அமைச்சர்களான ஹக்கீம், றிசாத் போன்றவர்களின் கல்முனையை நான்காக பிரிக்க வேண்டும் என்னும் நிலைப்பாட்டினை வன்மையாக கண்டிப்பதோடு சாய்ந்தமருது மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமானால் சாய்ந்த மருதை தனியாக பிரித்துக் கொடுத்துவிட்டு எஞ்சிய பிரதேசங்களை ஒரு சபையாக அமையுங்கள். அதற்கு மேலதிகமாக பிரிக்க முற்படுவதானால் கல்முனை தமிழ் பிரதேசங்களை ஒன்றிணைத்து நிலத்தொடர்பற்ற ரீதியில் ஒரு நகர சபை உருவாக்கப்பட வேண்டும். இதுவே எமது நிலைப்பாடாகும்.

எனவே சமகாலத்தில் இச்சபைகளை குறிப்பாக தமிழர்களுக்கு என்று ஒரு சபையையும் சாய்ந்தமருது மக்களுக்கு என்று ஒரு சபையையும் உருவாக்கி தர வேண்டிய பொறுப்பு நல்லாட்சி அரசுக்கு இருக்கின்றது.

ஆகவே உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா இவ் விடயத்தில் அக்கறைகொண்டு கல்முனையில் வாழையடி வாழையாக வாழ்கின்ற தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற உடனடியாக செயற்பட்டு ஒரு நியாயத்தை பெற்றுக் கொடுக்குமாறு வேண்டிகொள்வதாக அனந்தி மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொள்வனவு செய்யப்பட்ட ஆடையில் இருந்தது என்ன?

ஆடையகம் ஒன்றில் கொள்வனவு செய்த ஆடைகளில் சந்தேகத்திற்கிடமான வகையில் பொருள் ஒன்று காணப்படுவதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய பொலிஸாரினால் அரசாங்க இரசாயனவியல் ஆய்வாளரின் பகுப்பாய்வு அறிக்கை ஒன்றினை பெற்றுக் கொள்வதற்காக விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு காலி பிரதான நீதவான் அனுமதி வழங்கியுள்ளார்.

காலியில் கடந்த 28ஆம் திகதி தாய் ஒருவர் தனது 19 வயது மகனோடு நகரத்திலுள்ள ஆடையகம் ஒன்றிற்கு சென்று 4,300 ரூபா பெறுமதியான இரண்டு காற்சட்டைகளையும் இரண்டு டி.ஷேர்ட்களையும் கொள்வனவு செய்துள்ளார்.

வீட்டிற்கு சென்று கொள்வனவு செய்த ஆடைகளை துவைப்பதற்காக வாளி ஒன்றினுள் போட்ட போது ஒரு காற்சட்டையின் முன் பகுதியில் பொத்தானுக்கு கீழ் மண் நிறத்திலான ஒட்டும் தன்மையிலான பொருள் இருப்பதை கண்ட தாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட ஆடையிலிருந்த பொருள் என்ன வகையைச் சேர்ந்த இரசாயனம்? அதனால் உடலுக்கு ஏதும் பாதிப்புக்கள் ஏற்படுமா? என பரிசோதித்து பார்த்து அரசாங்க ஆய்வாளரிடமிருந்து அறிக்கை ஒன்றை பெறுவதற்கு நீதிமன்றில் முன் வைக்கப்பட்ட கோரிக்கைக்கு காலி நீதவான் அனுமதி வழங்கியுள்ளார். (இ-7)



ஐக்கிய நாடுகள் சபையின் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான இலங்கையின் இளைஞர் வலையமைப்பின் இராஜதந்திர ஆளுநராக அரியாலையைச் சேர்ந்த லயன் பீதாம்பரம் ஜெயவிந்தன் நியமனம் பெற்றுள்ளார். ஐக்கிய நாடுகள் தினத்தை முன்னிட்டு இலங்கை பாராளுமன்றத்தின் சபாநாயகர் கரு ஜயசூரியவால் 22.10.2017 அன்று பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் வைத்து இந் நியமனம் வழங்கப்பட்டது.

# கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்



(ஏறாவூர்)

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை நிரந்தரமாக மூடிவிட வேண்டும் எனக் கோரி நேற்று திங்கட்கிழமை கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்கள் பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கிழக்குப்பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு - வந்தாறுமூலை வளாக முன்றலில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

மாணவர்கள் தமது கோரிக்கைகளடங்கிய பதாதைகளை ஏந்தியவண்ணம் விடுதி பகுதியிலிருந்து புறப்பட்டு பிரதான வீதியோரம் நின்று தமது கோஷங்களை எழுப்பினர்.

போலித் தீர்ப்பு வேண்டாம், சைட்டத்தை உடனே ரத்துச் செய், வாக்களித்த ஜனநாயகம் இதுதானா?, பெற்றோர்களை அழித்து சைட்டத்தை பாதுகாப்பதா? போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவண்ணம் கோஷங்களை எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)

# தொண்டமானின் பெயர் நீக்கத்திற்கு தொல். திருமாவளவன் கண்டனம்



(கொழும்பு)

தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அவர் இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமின்றி மலையகப் பகுதிகளிலும் இலட்சக்கணக்கான தமிழர்கள் வசித்து வருவதை அறிவோம். இவர்கள் அனைவரும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆவர்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் போது தேயிலைத் தோட்டங்களில் பணியாற்றுவதற்கென அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் தோட்டத் தொழிலாளர்களாகக் கடுமையாக உழைத்து இலங்கையின் பொருளாதார வளத்தை மேம்படுத்தினர்.

அன்றைய தோட்ட முதலாளிகளான வெள்ளையர்களின் சுரண்டலுக்கும் ஒடுக்குமுறைக்கும் ஆளாகி, குதிரை லாயங்களில் கொத்தடிமைகளாக கிடந்து உழன்றனர்.

குடியுரிமை, வாக்குரிமை, கல்வியுரிமை உள்ளிட்ட வாழ்வுரிமைகள் ஏதுமின்றி அவர்கள் சொல்லொணா துன்பங்களில் சிக்கிச் சிதைந்தனர்.

அத்தகைய காலகட்டத்தில் அவர்களுக்கான பாதுகாவலராகத் தோன்றியவர் தான் "இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்" கட்சியின் நிறுவனரும் தலைவருமான சௌமியமூர்த்தி தொண்டமான்.

இலங்கை நாடு வெள்ளையர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்ற பின்னர், 1960களில் உருவான "சாஸ்திரி-பண்டா" ஒப்பந்தப்படி சுமார் 5 இலட்சம் தமிழர்கள் இந்தியா திரும்பி விட்ட நிலையில், எஞ்சிய தமிழர்கள் தொடர்ந்து சிங்கள ஆட்சியாளர்களின் ஒடுக்குமுறைக்குள்ளான சூழலில், இடையறாமல் போராடி அவர்களுக்கான உரிமைகளை நிலைநாட்டிய பெருமைக்குரியவர் தான் சௌமியமூர்த்தி தொண்டமான்.

மலையக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான அவரின் அளப்பரிய அர்ப்பணிப்பைப் போற்றும் வகையில், மத்திய மாகாணத்தில் "தொண்டமான் தொழிற்பயிற்சிமையம்", "தொண்டமான் கலாசார மன்றம்", "தொண்டமான் மைதானம்" என சில அரசு நிறுவனங்களுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளன.

இவற்றில், தொண்டமான் தொழிற்பயிற்சிமையத்திற்கு இந்திய அரசு நிதியுதவி அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சௌமியமூர்த்தி தொண்டமான் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கான தலைவராகச் செயற்பட்டார் என்றாலும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் பூர்வீகத் தமிழர்களின் மொழியுரிமைகள் மற்றும் இன உரிமைகளுக்காகவும் குரலெழுப்பினார் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# மார்ச் மாதம் இந்திய நிறுவனத்தின் வசமாகிறது மத்தள விமான நிலையம்




(கொழும்பு)


மத்தள மகிந்த ராஜபக்ஷ விமான நிலையம் எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் இந்திய நிறுவனத்துடன் இணைந்து இயக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். தெனியாயவில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையின் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் அதிகாரசபையும் இந்திய நிறுவனம் ஒன்றும் இணைந்து கூட்டு முயற்சியாக, மத்தள விமான நிலையத்தை இயக்கவுள்ளன. இந்தக் கூட்டு முயற்சி வரும் மார்ச் மாதம் முதல் செயற்படுத்தப்படும். அம்பாந்தோட்டை துறைமுகம் போன்ற அதே சூழ்நிலையிலேயே மத்தள விமான நிலையமுள்ளது.

இதனை இலாபமீட்டும் துறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் விமான நிலையங்கள் மற்றுழ் விமான சேவைகள் அதிகாரசபை இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், மத்தள விமான நிலையத்தை இலங்கையுடன் இணைந்து கூட்டு முயற்சியாக இயக்கவுள்ள இந்திய நிறுவனத்தின் பெயரையோ, இது தொடர்பான உடன்பாட்டு விதிமுறைகள் பற்றியோ பிரதமர் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொழும்பில் பாகிஸ்தான் போர்க்கப்பல்



(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படையின், பிஎன்எஸ் சைய்ப் என்ற போர்க்கப்பல் நான்கு நாட்கள் நல்லெண்ணப் பயணமாக நேற்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 123 மீற்றர் நீளம் கொண்ட இந்தப் போர்க்கப்பல், 3.144 தொன்எடை கொண்டது. இதில் 225 பாகிஸ்தான் கடற்படையினர் பணியாற்றுகின்றனர்.


கொழும்புத் துறைமுகத்தில் பிஎன்எஸ் சைய்ப் போர்க்கப்பலுக்கு இலங்கை கடற்படையினர் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளித்துள்ளனர். கொழும்பில் தரித்து நிற்கும் போது, பாகிஸ்தான் கடற்படையினர், இலங்கை கடற்படையினருடன் இணைந்து பயிற்சி மற்றும் விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர்.

நாளை 8 ஆம் திகதி பாகிஸ்தான் போர்க்கப்பல் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1242

Search for people, places and things Nagendram Home


## அஸ்வரன்




## பிரகர்சா




## அஸ்வின்




## அபி




## தானியா




## மகிசினி




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கண் சத்திர சிகிச்சை பாதிப்பு குறித்து தனியார் வைத்தியசாலைப் பணிப்பாளர் விளக்கம்

திருநெல்வேலி நொதேன் சென்றல் தனியார் வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை செய்யப்பட்டவர்களில் பத்துப் பேருக்கு கிருமித் தொற்று ஏற்பட்டது குறித்து அந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் விளக்கக் குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளார். அதன் விபரம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

எமது வைத்தியசாலையில் பிரபல்யமான கண் சத்திர சிகிச்சை நிபுணரால் மேற்கொள்ளப்பட்ட கண் சத்திர சிகிச்சையின் போது எதிர்பாராதவிதமாக இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நாம் மனம் வருந்துகின்றோம்.

தொடர்ச்சியாக பல ஆயிரம் கண் சத்திர சிகிச்சையினை முன்னணி வைத்திய நிபுணரைக் கொண்டு வெற்றிகரமாக மேற்கொண்ட நிலையில் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றிருப்பது எம்மை மிகுந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது.

குறித்த பாதிப்பு ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பது இதுவரை ஆய்வு ரீதியாக உறுதிப்படுத்தப்படாத நிலையில் பாதிப்பு ஏற்பட்டதற்கான காரணம் குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர், பணியாளர்கள் மட்டத்தில் தொடர் ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

எமது வைத்தியசாலையில் 10 பேருக்கு 21.10.2017 அன்று நடந்த கண் சத்திர சிகிச்சையின் போது பாதிக்கப்பட்ட 9 பேர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டதும் இவர்களில் 5 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதும் அனைவரும் அறிந்ததே.

இச் சம்பவம் எமது வைத்தியசாலை செயற்பட ஆரம்பித்த 5 வருட காலத்தில் ஏற்பட்ட ஜீரணிக்க முடியாத ஒரு சம்பவம். நோயாளிகளுக்கும் நோயாளிகளின் உறவுகளுக்கும் இது ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்பதை நாம் நன்கு அறிவோம்.

இதுவரை காலமும் இதே சத்திரசிகிச்சைக் கூடத்தில் இதே விதிமுறைகளுக்கமைய ஆயிரத்துக்கும் மேற்பட்ட கற்றாக் சத்திர சிகிச்சைகள் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் நடைபெற்றுள்ளன. இதுமட்டுமல்ல இந்த சத்திர சிகிச்சைகளைத் தொடர்ந்து மறுநாள் அதே சத்திர சிகிச்சைக் கூடத்தில் முள்ளந்தண்டு தொடர்பான சத்திர சிகிச்சை 6 பேருக்கான கற்றாக் சத்திர சிகிச்சைகள் நடந்தன. அவற்றில் எந்தவொரு பிரச்சினைகளும் இடம்பெறவில்லை.

எமது வைத்தியசாலையின் 5 வருட காலத்தில் இருதயம், நரம்பியல், கால் மூட்டு, முள்ளந்தண்டு, கற்றாக் அடங்கலாக சிறிய மற்றும் பெரிய 13,000 இற்கும் மேற்பட்ட சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம். இதன்போது இவ்வாறான ஒரு சவாலுக்கு நாம் முகம் கொடுக்கவில்லை.

வைத்தியர்கள், வைத்திய நிபுணர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் நன்மதிப்பை பெற்ற வைத்தியசாலையாக மிளிரும் எமது வரலாற்றில் சிறு கரும்புள்ளியாக சற்றும் எதிர்பார்க்காத இச்சம்பவம் அமைந்து விட்டது.

வடக்கில் மக்களுக்காக உன்னத மருத்துவ சேவையை வெளிப்படை தன்மையோடு வழங்கும் நாம் குறித்த அசம்பாவிதம் தொடர்பில் என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துவது இத்தருணத்தில் பொருத்தமானதும் அவசியமானதும் ஒன்று.

எமது வைத்தியசாலையில் 21.10.2017 ஆம் திகதி கற்றாக் கண் சத்திரசிகிச்சை மேற்கொண்டவர்களில் ஒருவர் 23.10.2017 அன்று கண் வலியுடன் எம்மை அணுகிய போது மருத்துவ நிபுணரின் ஆலோசனைக்கிணங்க அவரை நாம் உடனடியாகவே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம்.

அன்றைய தினம் மாலை இதேபோன்று இரு நோயாளர்கள் கண் நோவுடன் எம்மை நாடிய போது குறித்த சத்திர சிகிச்சையின் போது தொற்று ஏற்பட்டிருக்கின்றதா என்ற சந்தேகத்தில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் அறிவுறுத்தியதன் படி 21.10.2017 அன்று சத்திர சிகிச்சைக்குட்படுத்தியவர்களில் வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ளவர்களை தொலைபேசியினூடாக தொடர்பு கொண்டு வரவழைத்துடன் தொலைவிலுள்ளவர்களை எமது வாகனத்தில் அழைத்து வந்து தொற்றுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தொற்று என இனங்காணப்பட்ட ஒன்பது நோயாளர்களையும் அன்றைய தினமே கண் சிகிச்சை நிபுணரின் அறிவுறுத்தலின் படி உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தோம்.

இது சம்பந்தமாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ஊடாக உரிய தரப்புக்களுக்கு வைத்திய நிபுணர் தகவல்களைப் பரிமாறினார்.

நாம் இது தொடர்பில் 25.10.2017 அன்று எழுத்து மூலமாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் தனியார் சுகாதார சேவை ஒழுங்கு முறை சபைக்கும் தகவல்களை அனுப்பி வைத்துள்ளோம்.

இச் சம்பவத்துக்கான உண்மைக் காரணம் என்னவென்பதை ஆய்வுகள் ரீதியாக அறிந்து கொள்ளும் நோக்கோடு எமது வைத்தியசாலை சத்திர சிகிச்சைக் கூட சேவைகளை 25.10.2017 ஆம் திகதி முதல் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருக்கின்றோம்.

இந்நிலையில் 27.10.2017 ஆம் திகதி மாகாண பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய பிரதிப் பணிப்பாளர் உள்ளடங்கிய குழுவினர் வைத்தியசாலைக்கு நேரில் விஜயம் செய்து குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் இது தொடர்பில் எமது சத்திரசிகிச்சை கூடத்திலிருந்து மாதிரிகள் கொழும்பிற்கு அடிப்படை நுண்ணங்கியியல் ஆய்வு கூடத்திற்கு பரிசோதனைகளுக்காக அனுப்பப்பட்டன. அவ்வறிக்கைகளின் படி எமது சத்திர சிகிச்சைக் கூடத்தில் சத்திர சிகிச்சைகளின் போது தொற்று ஏற்படுத்துவதற்கான எவ்விதமான கிருமித் தொற்றுக்களும் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

இருப்பினும் இத்துடன் நிறுத்திவிடாது நாம் இலங்கை மத்திய சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினை அணுகி இது தொடர்பில் நிபுணர்களை அனுப்பி மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்ததன் பெயரில் விசேட ஆய்வுக்குழு ஒன்று மிக விரைவில் வருகைதந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் என உறுதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் உரிய ஆய்வுகள் செய்யப்பட்டு முடிவுகள் உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமையே இச் சம்பவம் தொடர்பில் நாம் தாமதமாக விளக்க மளிப்பதற்கு காரணமாகும்.

இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் இடம்பெற்று விடக்கூடாது என்பதில் நாம் மிகுந்த கரிசனையோடு எமது மக்களுக்கான சேவையினை முன்னெடுத்து வருகின்றோம்.

பணிப்பாளர்
நொதேன் சென்றல்
வைத்தியசாலை

பகலிரவு பாராது பணியாற்றிய ஜனாதிபதி பாராமுகம்

# முன்னேற்பாடுகள் எதுவும் இன்மையே பெற்றோல் தட்டுப்பாட்டிற்கு காரணம்

## பந்துல குணவர்த்தன கண்டுபிடிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு அரசாங்கத்தின் முன்னேற்பாடுகளற்ற செயற்பாடுகளே காரணம் என சுட்டிக்காட்டிய கூட்டு எதிர்க்கட்சி பகலிரவு பாராது பணியாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால இது குறித்து பாராமுகமாகவிருப்பது ஏன் எனவும் கேள்வி எழுப்பியுள்ளது.



புஞ்சிபொரளையில் அமைந்துள்ள ஸ்ரீ வஜிராஷ்ரம பௌத்த நிலையத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து வெளியிடுகையிலேயே கூட்டு எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நாட்டின் நிலவும் பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக மக்கள் சிரமப்படுவதை காணக்கூடியதாக உள்ளது. யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் கூட பெற்றோலுக்கு தட்டுப்பாடு இவ்வாறு ஏற்படவில்லை. அவ்வாறு தட்டுப்பாடு ஏற்பட்டாலும் நாட்டின் பாதுகாப்பு கருதி குறிப்பிட்ட அளவிலான பெற்றோல் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால் தற்போதைய ஆட்சியில் அவ்வாறான முன்னேற்பாடு எதுவும் கிடையாது. அதன் காரணமாகவே நாட்டில் பாரிய பெற்றோல் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் ஆட்சியில் யுத்தம் உட்பட பல்வேறுபட்ட பிரச்சினைகள் நாட்டில் நிலவிய போதும் நாம் மக்களது ஜீவனோபாயத்துடன் விளையாடவில்லை. மக்களது உணவுத் தேவையினை நாம் சீராக நடைமுறைப்படுத்தினோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவசாயத் துறை அமைச்சராக இருந்த பொழுது வர்த்தக மற்றும் நுகர்வு விடயங்களில் அவர் எம்முடன் பகலிரவு பாராது பாடுபட்டதை என்னால் மறக்க முடியாது. எனினும் அத்தகைய ஒருவர் தற்போது ஏன் இவ் விடயங்களில் முறையான வேலைத்திட்டங்களை அமுல்படுத்துகின்றார் இல்லை என்பது தான் ஆச்சரியமாகவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

### ஊடக சந்திப்பில் விநோதமாக செயற்பட்ட பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினர் கொழும்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பை கூட்டு எதிர்க் கட்சியின் பொருளாதார ஆய்வு பிரிவு ஏற்பாடு செய்தது.

இந்தச் சந்திப்பின் போது நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன, தேங்காய், அரிசி, சீனி, பருப்பு ஆகிய அத்தியாவசிய பொருட்களுடன் ஊடகவியலாளர் சந்திப்பிற்கு வந்தார்.

நாட்டில் பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளன. நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு உயர்வடைந்துள்ளதனையே அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான நெருக்கடி நிலையை மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன சுட்டிக் காட்டியுள்ளார். (இ-7)

# வெளிநாட்டு கம்பனிகளுக்கு இங்கு இடமில்லை

# பாற்பண்ணையாளர்களைப் பலப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்

## ஜனாதிபதி மைத்திரி உறுதி

(கொழும்பு)

வெளிநாட்டு பால்மா கம்பனிகள் இங்கு ஆக்கிரமிக்க இடமளிக்காது தேசிய பாற்பண்ணையாளர்களை பலப்படுத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் பொலநறுவை அரலங்வில பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

குழந்தைகளுக்கான பால்மாவிற்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுத்து, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் ஏனைய பால்மாக்களுக்கு கட்டுப்பாட்டை விதித்து தேசிய பாற்பண்ணையாளர்களை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

பால்மா இறக்குமதிக்காக வருடாந்தம் பெரும்தொகை நிதி செலவிடப்படுகிறது. இது நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.




உலகின் அபிவிருத்தியடைந்த எந்தவொரு நாடும் வெளிநாட்டு பால்மாவை பயன்படுத்துவதில்லை.

இன்று இலங்கை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வரப்படும் பால்மாவை அதிகம் பயன்படுத்தும் நாடாக மாறியிருப்பதுடன், இந்த நிலை உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பிரதேசத்தில் இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

பிரதி அமைச்சர்களான அநுராத ஜயரத்ன, லக்ஷ்மன் வசந்த பெரேரா, வடமத்திய மாகாண சபையின் முன்னாள் பிரதித் தலைவர் ஜெயந்த மாரசிங்க, மகிந்த ரத்நாயக்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (இ-7)

# பிணி தீர்க்கும் புளி



புளியமரம் முதன் முதலாக ஆபிரிக்காவிலேயே பயிரிடப்பட்டது. உஷ்ணப் பிரதேசங்களில் நன்கு வளரும் புளியமரம், குளிரைத் தாங்காது. ஆனால் கடற்கரை ஓரங்களில் கூட வளரும். அதிகமான கவனிப்பும் தேவையில்லை. இம்மரம் காடுகளில் தானாக வளரும். வீதியோரங்களில் இம்மரத்தை வளர்ப்பதும் உண்டு.

### நடுகைமுறை

3-4 மாத புளியங் கன்றுகளை 6 X 6 மீற்றர் இடைவெளியில் நட வேண்டும். சித்திரை-வைகாசி மாதங்களில் 2 அடிநீளம் 2 அடி அகலம் 2 அடி ஆழத்தில் குழி எடுக்க வேண்டும். அதில் காய்ந்த இலைதழைகளை போட்டு தீ எரித்து சாம்பலாக்கி வைக்க வேண்டும். பிறகு அந்த குழியில் மேல் மண், மணல், கூட்டெரு சமவிகிதத்தில் நிரப்ப வேண்டும். அதை அப்படியே ஆடி மாதம் வரை ஆறவிட்ட பின் புளியங்கன்றை நடுகை செய்யலாம். கன்றுகள் நன்கு துளிர்த்து வளரும் வரை நீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் தேவைக்கேற்ப நீர்ப்பாசனம் செய்யலாம்.

விதையை நட்டு உருவாகும் புளியமரங்கள் 6-8 வருடங்களில் பலன் தரும். செடியாக நடப்பட்ட மரங்கள் காய்க்க 3-4 வருடங்கள் போதும். மெதுவாக வளரும் புளியமரம் அதிக ஆயுள் உள்ளது. இது 100 ஆண்டுகள் வரை பயன் தரும். நன்கு வளர்ந்த புளியமரம், ஒரு வருடத்திற்கு 160 கிலோ வரை புளியை சராசரியாக தரும். புளியமரம் 25 மீற்றர் உயரம் வளரும். 8-10 மீற்றர் சுற்றளவைக் கொண்டிருக்கும். இம்மரம் உறுதியானது. இதன் பக்கக் கிளைகள் பரவிக் காணப்படும். இவை எளிதில் முறிவதில்லை.

புளியமரம் பே பேசி இனத்தைச் சேர்ந்த ஒருமரம். புளியமரம் இதற்கு அமிலம், சிந்தாரம், சிந்தகம், சஞ்சீவகரணி போன்ற பெயர்களும் உண்டு. குடும்பம் சிசால்பினியேசி) (Caesalpinioidaeae). இம்மரத்தின் தாவரவியல் பெயர் டேமரிண்டஸ் இண்டிகா (Tamarindusindica L.) என்பதாகும்.

புளியமரத்தின் இலை, புளி, பிஞ்சு, பழம், ஓடு, விதை, பருப்பு, மரம் முதலியவை நன்கு பயனாகின்றன. தடித்த ஓடுக்குள் புளி பாதுகாக்கப்படுகிறது. அதன் உள்ளே கடினமான விதைகள் இருக்கும். இதன் கனி புளிப்புச் சுவை கொண்டது. தாய்லாந்தில் இனிப்பான பழங்களை நல்கும் புளியமர வகைகள் உள்ளன.

புளியந்தேன, மகரந்தம், தேனீக்களுக்கான சிறந்த உணவாகும். புளியமரம்காணப்படும் இடத்தில் இதனால் தேனீவளர்ப்பை மிகச்சிறப்பாக மேற்கொள்ள முடியும்.

புளியமரத்தைக் காற்றுத் தடைக்காக வளர்க்கலாம். புளியமரங்கள் மிகச் சிறந்த மாசுக்குறைப்பான் மரங்கள் ஆகும். வாகனங்களில் இருந்து வெளியேறும் மாசுகளை தடுக்க புளியமரம் பயன்படுகிறது. இதன் வேர்கள் மிகப் பரவலாக இருப்பதால் இம்மரத் தின் கீழ் அதிக வெப்பம் காணப்படும். அதனால் இம்மரத்தின் கீழ் அமர்வோருக்கு களைப்பைக் கொடுக்கிறது. புளியமரத்தின் கீழே வேறு செடிகள் வளராது.

### புளியமரத்தின் மருத்துவகுணங்கள்

ஆயுர் வேதத்தில் வயிறு, ஜீரணக்கோளாறுகளுக்கு புளி பயன்படுகிறது. அமெரிக்கா மருந்துகள் தயாரிக்க வருடத்தில் 90,000 கிலோபுளியை இறக்குமதி செய்கிறது.

### 1. புளிய இலை, பூவின் பயன்கள்

இது வயிற்றை சுத்தப்படுத்தி கிருமிகளை அழிக்கிறது. புளி இலை இரைப்பை பிரச்சினை, செரிமானப் பிரச்சினை போன்றவற்றை தீர்த்து இதயத் துடிப்பை பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்கிறது.

புளியிலைகளை மூட்டு வீக்கங்களின் மீது பற்றிட்டு வந்தால் அந்த வீக்கம் விரைவில் மறையும். புளியிலை, வேப்பிலை இடித்து, காய்ச்சி வடிகட்டி, அதைக்கொண்டு புண்களை கழுவி வர ஆறாத ரணங்கள் ஆறிவிடும். புளியிலையை அவித்து, அதே சூட்டோடு சுளுக்கு உள்ள இடத்தில் ஒற்றடம் இட்டு, வைத்து கட்டிவர சுளுக்கு குணமாகும். இளம் பச்சை நிறத்தில் இருக்கும் புளியங்கொழுந்து இலைகளை பாசிப் பருப்புடன் சேர்த்து கடைந்து சாப்பிட உடலுக்கு பலம் உண்டாகும். புளியங்கொழுந்தை பறித்து பச்சையாக சாப்பிட கண்களைப் பற்றிய நோய்கள், புண்கள் ஆறும்.

பூக்களைச் சமைத்து உண்ணலாம். புளியம் பூவுடன் காரம், உப்பு சேர்த்து உண்ண நீர்க்கடுப்பு, மூலச்சூடு, சீதபேதி, வெப்ப வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் தீரும். புளியம் பூவை நெய் விட்டு வதக்கி துவையலாக செய்து சாப்பிட்டு வர பித்தம், வாந்தி, வாய்க்கசப்பு ஆகியவை தீரும். புளியங்கொழுந்தை பக்குவப்படுத்தி உணவுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம். இது இரத்தத்தை சுத்திகரிக்கிறது.

### 2. புளியம் பழத்தின் பயன்கள்

புளியில் கல்சியம், விற்றமின் 'பி' நிறைந்துள்ளது. தவிர பொஸ்பரஸ், இரும்பு போன்றவைகளும் உண்டு. உணவில்மணமூட்டவும்சுவை ஊட்டவும் புளி பயன்படுகிறது. புளியைமாலை வேளையில் சிறிது புளியாகாரம் செய்து சாப்பிடுவதனால் குடல் இயக்கங்களை மேம்படுத்தலாம். புளி பித்தநீரால் ஏற்பட்ட கோளாறுகளுக்கு சிகிச்சையளிக்க மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

நீர்த்த புளிசாறு தொண்டையில் ஏற்படும் புண்னை குணமாக்குகிறது. விற்றமின்-C பற்றாக்குறையை புளியம் பழம் சரி செய்கிறது. முக்கியமாக தோலில் ஏற்படும் அலர்ஜியை குணமாக்கும். புளி சூட்டைத் தணிக்கும். புளியை குழம்புபோல்கரைத்து, அதனுடன் 2 பங்கு உப்பு சேர்த்து காய்ச்சி கொதிக்க வைத்து, இளம்சூடாக இருக்கும் நேரத்தில் அடிபட்டதால் ஏற்பட்ட வீக்கத்தில் தடவிவர இரண்டொரு வேளையில் அது கரைந்து விடும். புளியந்தண்ணீரை கொப்பளித்தால் வாய்ப்புண்கள் குறையும். புளியுடன் சுண்ணாம்பு கலந்து குழப்பி சூட்டோடு தேள் கொட்டிய இடத்தில் போட, தேள் விஷம் இறங்கும். புளி, உப்பு இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்து உள் நாக்கில் தடவிவர அதன் வளர்ச்சி கரையும். புளியம்பழம், கரிசலாங்கண்ணி இரண்டையும் அரைத்து நெல்லிக்காய் அளவு 8 நாட்கள் சாப்பிட்டு வர அடிதள்ளல் குணமாகும்.

ஒக்ஸினேற்றத்திற்கு நல்ல ஆதாரமாக இருப்பதுபுளி. ஆதலால் புற்று நோய்க்கு எதிரான போராட்டத்திற்கு உதவி புரிகிறது புளி உடலில் உள்ள கொழுப்பு அளவுகளை குறைத்து ஆரோக்கியமான இதயத்தை ஊக்குவிப்பதற்கு உதவுகிறது.

புளியை தினமும் ரசத்தில் சேர்ப்பதால் மிளகாய், உப்பு, பூண்டு ஆகியவற்றின் வேகத்தை அது கட்டுப்படுத்தும். உணவில் அளவோடு புளியை சேர்த்து வர ஜீரண சக்தி அதிகரிக்கும். மது அருந்தியதால் ஏற்பட்ட வெறி, மயக்கத்திற்கு புளியை கரைத்து உட்கொள்ள கொடுக்க அது குணமாகும். புளி மலத்தை இளக்கக் கூடியதும் கூட! என்றாலும், அளவுக்கு அதிகமாக பயன்படுத்தி வந்தால் நரை, வயது முதிர்ந்த தோற்றம் போன்றவை விரைவில் ஏற்படும்.

### 3. புளியங்கொட்டைகளின் பயன்கள்

விதை புரதம் நிறைந்தது. இப்புரதத்தில் புரோலமின், குளுட்டெலின், அல்புமின் ஆகியவை உள்ளன. புளியங்கொட்டையின் மேல் தோலை பொடித்து சீதக் கழிச்சலுக்கு உட்கொள்ள கொடுக்க அது தீரும். கசப்பான விதைத்தோல் வயிற்றுப்போக்கு, வயிற்றுக் கடுப்பைப் போக்கும். விதையிலிருந்து அரைத்த பசையைக் கொப்புளங்களுக்குத் தடவலாம்

இதனுடன் மாதுளம் பழத்தோலையும் பொடித்து உட்கொள்ள கொடுக்கலாம். புளியங்கொட்டை பருப்பை இடித்து பொடியாக்கி, பசும்பாலில் அரைக்கரண்டி தூளை போட்டு கற்கண்டு கலந்து குடித்து வர தாதுவிருத்தி உண்டாகும்.

### 4. புளிய மரப்பட்டையின் பயன்கள்

புளிய மரப்பட்டையையும், சிறிது உப்பையும் ஒரு பாத்திரத்தில் இட்டு எரித்து சாம்பலாக்கி, அதில் 100 - 200 மில்லிகிராம் அளவு தினமும் இரு வேளை தேனில் கலந்து சாப்பிட அஜீரணம், வயிற்றுப்புண் ஆகியவை குணமாகும்.

புளியம்பட்டையின் சாம்பலை நீரில் கலக்கி, அது தெளிந்தவுடன், அந்த நீரைக் கொண்டு வாய் கொப்பளித்து வர தொண்டைப்புண் குணமாகும். புளியம்பட்டையை பொடி செய்து புண்களின் மீது தேங்காய் எண்ணெயில் குழைத்து பூசி வர அந்த புண் ஆறும். புளிய மரப்பட்டையும் மருத்துவ குணங்கள் கொண்ட ஒரு 'டானிக்' புளியமர வேர்களிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் குஷ்ட ரோகத்திற்கு உபயோகப்படுகின்றன. ஜீரணசக்தியை உண்டாக்கும்

### தொழிலியல் பயன்கள்

புளியமரம் உறுதியானது. மரவேலைசெய்யக் கடினமானது. சக்கரம், கொட்டாப்புளி, உலக்கை, செக்கு, உரல், கரும்பலகை முதலியவற்றைச் செய்ய இது பயன்படுகிறது

புளியம் இலையைக் கொண்டு பட்டுத் துணிகளுக்குப் சாயம் தோய்க்கலாம். பழச்சதையிலிருந்து பெக்டின் (Pectin) எடுக்கலாம். பழத்திலிருந்து புளிப்பொடி, புளிச்சத்து, புளிரசம் தயாரிக்கப்படுகிறது.

புளிக்கொட்டையிலிருந்து பொடி எடுக்கப்பட்டு துணிக்கு மெருகூட்டவும். சணல் நூல் தயாரிப்பிலும் செயற்கை இழைகள் தயாரிப்புகளிலும் பயன்படுத்தப்படுகிறது. புளியங்கொட்டை தோலிலிருந்து 'டானின்' எடுக்கப்பட்டு தோல் பதனிடலில், பயன்படுகிறது. புளியம் பருப்பிலிருந்து தயாரித்த பசையைக் கொண்டு பலகைகள் ஒட்டப்படுகின்றன. சிமெண்டைப் போல இது கெட்டியாக ஒட்டும்.

புளியங்கொட்டை எண்ணெய் வார்னிஷ், பெயிண்ட் தயாரிக்க விளக்கு எரிக்க பயன்படுத்தப்படுகிறது.

புளியைக் கொண்டு பித்தளை, செம்பு பாத்திரங்களையும், இசைக் கருவிகளையும் துலக்கினால் அழுக்கு நீங்கி பளபளப்பான தோற்றம் கிட்டும். வெள்ளி நகை, பாத்திரங்கள் ஆகியவற்றிற்கும் வணிகர்கள் புளியைப் பயன்படுத்துவர்.

"இயற்கை அன்னையின் படைப்பில் பலபயன்களைக் கொண்ட புளியின் பயனை முழுமையாய் பெறுவோம். ஆரோக்கியமாக வாழ்வோம்"

திருமதி. கிருபவதனி சிவதீபன்
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்,
பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்
அலுவலகம் யாழ்ப்பாணம்.




# அரணாகும் அறிவு!



முன்னொரு காலத்தில் பல சிற்றரசர்கள் தனித்தனி நாடுகளை ஆண்டு வந்தனர். அப்படிப்பட்ட ஒரு சிற்றரசுதான் இங்கு குறிப்பிடப் படும் ஒரு நாடு. செண்பகபுரி என்று அந்த நாட்டுக்குப் பெயர். அந்த நாட்டுப் பிரபுக்களுக்குச் சில அதிகாரங்கள் இருந்தன. பிரபுக்கள் அந்த நாட்டுக்கு மன்னனைத் தேர்ந்தெடுப்பர். ஓராண்டானதும் அவன் பதவியிறக்கம் செய்யப்பட்டு தொலைவிலுள்ள மனிதரற்ற கடல் நடுவில் இருக்கும் தீவுக்கு அனுப்பப்படுவான். கானகம் நிறைந்த அந்தத் தீவில் பல விலங்கினாங்கள் வாழ்ந்து வந்தன. அங்கு செல்பவர் இறப்பது உறுதி. இப்படி ஓராண்டுக்கு ஒரு மன்னர் என்ற விசித்திர பழக்கத்தைக் கொண்டிருந்தனர் செண்பகபுரி மக்கள். அதனால் மன்னர் சிம்மாசனம் என்றால் மக்கள் ஓடி ஒளிந்து கொள்வர்.

அந்த ஆண்டும் மன்னரைத் தேர்ந்தெடுக்கும் நாள் வந்தது. நாட்டிலுள்ள அனைத்து வீடுகளிலும் உள்ள மக்கள் அரசு அதிகாரிகள் கண்ணில் படாமல் வீட்டுக்குள்ளேயே பதுங்கி இருந்தனர்.

அந்த ஊரில் வைசாலி என்று ஒரு பெண்மணி வாழ்ந்து வந்தாள். அவளுக்கு ஒரே மகன் விசாகன். தந்தையற்ற விசாகனைக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வந்தாள் வைசாலி. வைசாலி கல்வி கற்காவிடினும் கேள்வி ஞானம் நிறைந்தவள். அறிவும் ஆற்றலும் மிகுந்தவள். தன் மகனையும் அவள் அறிவு புகட்டி நிறைந்த அறிவுள்ளவனாகவே வளர்த்திருந்தாள்.

அன்று தாயும் மகனுமாகத் தங்கள் நிலத்தைக் கவனிக்க வயலுக்குச் சென்றிருந்தனர். மாலையில் வீடு திரும்பும் பொழுது ஊர் மக்கள் யாரையும் காணோம். இருவரும் காரணம் தெரியாமல் திகைத்தபடி நடந்து வந்து கொண்டிருந்தனர். அவர்கள் எதிரே காவலர் நால்வர் வந்து நின்று அவர்களை பிரபுக்களின் முன்னே கொண்டு போய் நிறுத்தினர். இப்போது அவர்களுக்குப் புரிந்துவிட்டது.

விசாகன் "ஐயா, நான் விவசாயி. கல்வி என்பதே அறியாதவன். என்னை மன்னனாக்கினால் நாட்டின் நிலை என்னாகும்? நன்கு படித்த பிரபுக்களின் வம்சத்தில் மன்னனைத் தேர்ந்தெடுங்கள்" என்று கேட்டுக் கொண்டான்.

ஆனால் இருள் வருமுன் மன்னனுக்கு முடிசூட்ட வேண்டிய கட்டாயத்தினால் பிரபுக்கள் விசாகனுக்கு முடிசூட்டினர். இப்போது விசாகன் அந்த நாட்டு மன்னன். மக்கள் அவனை மகிழ்ச்சியோடு பார்த்ததைவிட பரிதாபமாகப் பார்த்தனர். இன்னும் ஓராண்டு தானே இவன் ஆயுள். பிறகு இவன் விலங்குகளுக்கு இரையாகப் போகிறானே என்பதை எண்ணி அவனுக்காக அனுதாபப்பட்டனர். வைசாலி கலங்கவில்லை. வருவது வரட்டும் என்று துணிவுடன் இருக்க தன் மகனுக்கு அறிவுரை கூறினாள்.

நாட்கள் சென்றன. விசாகன் மன்னனாகி இரண்டு மாதங்கள் கழிந்தன. அந்த நாட்டிலிருக்கும் கிராமங்களிலிருந்து மக்கள் சிலர் காணாமல் போகத் தொடங்கினர். பிரபுக்களுக்கு இதென்ன புது விபரீதம் என்று அச்சம் ஏற்பட்டது. இதனால் நாட்டில் குழப்பம் ஏற்படத் தொடங்கியது. தெய்வக் குற்றமா அல்லது கடல்கொள்ளையர் வேலையா என ஆலோசனை செய்யத் தொடங்கினர்.

இப்படியே மாதங்கள் ஓடின. இப்போது இன்னும் ஒரு மாதம் தான் விசாகன் மன்னனாக இருப்பான். அதன்பின் நடுக்கடலிலுள்ள தீவுக்கானகத்திற்கு அனுப்பப்படுவான். அதன்பின் அவன் மீண்டு வரமாட்டான். பாவம் இளம் வயது. அவன் தாயின் மனம் எவ்வளவு வேதனைப்படும்? என்று மக்கள் பலவாறு பேசிக் கொண்டனர்.

திடீரென்று ஒரு நாள் அரண்மனையில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்த ராஜமாதாவான வைசாலியைக் காணோம். ஊரெங்கும் ஒரே பரபரப்பு. பிரபுக்களின் அச்சம் உச்சத்திற்கே போய்விட்டது. சபையைக் கூட்டி ஆலோசனை செய்தனர். ஊரெங்கும் ராஜமாதாவைத் தேட ஆணை பிறப்பித்தான் விசாகன். ஆனால் வைசாலியோ அவளுக்கு முன்னர் காணாமல் போன மக்களோ யாரும் கிடைக்கவே இல்லை.

இதற்கிடையே விசாகனின் மன்னர் பதவி முடிவுக்கு வந்தது. அன்றுடன் அவன் அரச பதவி முடிந்தது.

மறுநாள் அதிகாலையிலேயே அரண்மனையில் பிரபுக்கள் கூடினர். சகல மரியாதையுடன் விசாகனை கடற்கரைக்கு அழைத்துச் சென்றனர். இளம்வயது மன்னனை கடைசியாகப் பார்க்க மக்கள் கூட்டம் நிறைந்து இருந்தது.

ஒரு சிறிய கப்பலில் விசாகன் ஏற்றப்பட்டான். அதில் ஒரு மாலுமியும் அவனுக்கு உதவியாளனும் மட்டும் இருந்தனர்.

தொடரும்...

# 07 11.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- ❖1492- உலகின் மிகப் பழைமையான விண்கல் மோதல் பிரான்சில் இடம்பெற்றது.
- ❖1502- கொலம்பஸ் ஹொண்டுராஸ் கரையை அடைந்தார்.
- ❖1665- உலகின் பழைமையானதும் இப்போதும் வெளிவரும் தலண்டன் கசெட் (The London Gazette) முதலாவது இதழ் வெளியானது.
- ❖1910- உலகின் முதலாவது விமானத் தபால் பொதிச் சேவை ரைட் சகோதரர்களால் ஒகையோவில் ஆரம்பிக்கப்பட்டது.
- ❖1917- ஒக்டோபர் புரட்சி: விளாடிமிர் லெனின் தலைமையில் கம்யூனிசப் புரட்சியாளர்கள் ரஷ்யாவின் இடைக்கால அரசாங்கத்தைக் கவிழ்த்தனர். (பழைய ஜூலியன் நாட்காட்டியில் இது ஒக்டோபர் 25 இல் இடம்பெற்றது).
- ❖1917- முதலாம் உலகப் போர்: பிரித்தானியப் படைகள் ஓட்டோமான் பேரரசிடம் இருந்து காசாப் பகுதியைக் கைப்பற்றின.
- ❖1931- மாவோ சேதுங் சீன சோவியத் குடியரசை ஒக்டோபர் புரட்சியின் நினைவு நாளில் அறிவித்தார்.
- ❖1956- சூயஸ் கால்வாய் பிரச்சினை: எகிப்தில் இருந்து உடனடியாக ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இஸ்ரேல் படைகளை வெளியேறுமாறு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் கேட்கப்பட்டது.
- ❖2002- அமெரிக்கப் பொருட்களின் விளம்பரங்களை அறிவிக்க ஈரான் தடை செய்தது.

### பிறப்புகள்

- ❖1186- ஒகோடி கான், மங்கோலியப் பேரரசர் (இ. 1241)
- ❖1728- ஜேம்ஸ் குக், ஆங்கிலேயக் கடற்படைத் தலைவர், நாடுகாண் பயணி (இ. 1779)
- ❖1312- வீர புரன் அப்பு, இலங்கை விடுதலைக்காகப் போராடியவர் (இ. 1848)
- ❖1858- பிபின் சந்திர பால், இந்திய செயற்பாட்டாளர், கல்வியியலாளர் (இ. 1932)
- ❖1867- மேரி கியூரி, நோபல் பரிசு பெற்ற போலந்து இயற்பியலாளர், வேதியியலாளர் (இ. 1934)
- ❖1879- லியோன் திரொட்ஸ்கி, செஞ்சேனையைத் தோற்றுவித்த ரஷ்யப் புரட்சியாளர் (இ. 1940)
- ❖1888- ச. வெ. இராமன், நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர். (இ. 1970)
- ❖1913- அல்பேர்ட் காம்யு, நோபல் பரிசு பெற்ற பிரான்சிய எழுத்தாளர் (இ. 1960)
- ❖1918- பில்லி கிரஹாம், அமெரிக்க எழுத்தாளர்
- ❖1943- சில்வியா கார்ட்ரைட், நியூசிலாந்து அரசியல்வாதி
- ❖1954- கமல்ஹாசன், தமிழக நடிகர்.
- ❖1959- சிறிநிவாஸ், இந்தியப் பாடகர்
- ❖1969- நந்திதா தாஸ், இந்திய நடிகர்.
- ❖1975- வெங்கட் பிரபு, இந்திய நடிகர்
- ❖1980- கார்த்திக், இந்தியப் பாடகர்
- ❖1981- அனுஷ்கா செட்டி, இந்திய நடிகை

### இறப்புகள்

- ❖644- உமறு இப்னு அல்-கத்தாப், இசுலாமியக் கலீபா (பி. 590)
- ❖1627- ஜஹாங்கீர், முகலாயப் பேரரசர் (பி. 1569)
- ❖1836- ஆறுமுகம்பிள்ளை குமாரசுவாமி, இலங்கைத் தமிழ் அரசியல்வாதி (பி. 1783)
- ❖1862- பகதூர் சா சஃபார், முகலாயப் பேரரசர் (பி. 1775)
- ❖1947- கோ. நடேசையர், இந்திய-இலங்கை ஊடகவியலாளர், அரசியல்வாதி (பி. 1887)
- ❖1951- என். சி. வசந்தகோகிலம், கர்நாடக இசைப் பாடகி, நடிகை
- ❖1962- எலினோர் ரூசுவெல்ட், அமெரிக்காவின் 39ஆவது முதல் சீமாட்டி (பி. 1884)
- ❖1993- திருமுருக கிருபானந்த வாரியார், இந்திய ஆன்மீக சொற்பொழிவாளர் (பி. 1906)
- ❖2000- நிமலன் சௌந்தரநாயகம், இலங்கை அரசியல்வாதி (பி. 1950)
- ❖2014- தோர்ப்சான் சிக்கிலேண்டு, நோர்வே வேதியியலாளர் (பி. 1923)

### சிறப்பு நாள்

- ❖ ஒக்டோபர் புரட்சி நாள் (பெலாரஸ், கிர்கிஸ்தான்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 160 | 200 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 90 | 100 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 600 | 650 | 450 | 600 | 400 | 400 |
| தக்காளி | 200 | 200 | 100 | 140 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 25 | 60 | 60 | 60 |
| கோவா | 140 | 200 | 90 | 140 | 160 | 100 |
| கரட் | 140 | 200 | 70 | 100 | 240 | 80 |
| பூசணி | 80 | 100 | 60 | 60 | 80 | 50 |
| புடோல் | 120 | 150 | 60 | 100 | 120 | 100 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 80 | 160 | 100 |
| சின்ன வெங்காயம் | 320 | 350 | 250 | 300 | 500 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 140 | 200 | 240 | 220 |
| பாகற்காய் | 300 | 400 | 170 | 240 | 400 | 250 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 80 | 100 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 60 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 250 | 160 | 150 | 140 | 200 | 250 |
| லீக்ஸ் | 160 | 250 | 200 | 200 | 240 | 200 |
| பீற்றூட் | 100 | 120 | 70 | 120 | 120 | 100 |
| கறிமிளகாய் | 300 | 200 | 250 | 240 | 320 | 250 |
| முருங்கைக்காய் | 250 | 150 | 150 | — | 100 | 500 |
| போஞ்சி | 200 | 150 | 120 | 130 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 150 | 120 | 100 | — | 160 | 140 |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30 | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 120 | 150 | 160 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 90 | 75 | 60-80 | 100 |
| இராசவள்ளி | - | 450 | 300 | — | — | — |
| வெங்காயப்பூ | 250 | 250 | 230 | — | 140 | — |
| முள்ளங்கி | 100 | 100 | 30 | 80 | 240 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 25 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | -- | 100 | 30 | — | 80 | — |

மனித சமுதாயத்துக்கென நல்லவற்றைச் சாதிக் கத் துடிக்கும் மனிதனுக்கு களைப்பாற நேரமேது?
~ யாரோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பொது அணியை அறிய மக்கள் ஆர்வம் கொண்டுள்ளனர்

2018 உள்ளூராட்சித் தேர்தலின்போது வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து பொது அணியொன்றை தேர்தல் களத்தில் நிறுத்துவதற்கான ஏற்பாடுகள் நடப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறு பொது எதிரணியொன்று களத்தில் இறங்கும்போது தேர்தல் களத்தில் சுயேட்சைகளாக, உதிரிகளாகப் போட்டியிட நினைத்திருப்போர் அதிலிருந்து ஒதுங்கி பொது எதிரணிக்கு ஆதரவு கொடுப்பர் என்ற எதிர்பார்ப்பு நிறைவேறுவதற்கான சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு.

உள்ளூராட்சித் தேர்தலில் பொது அணியொன்று களமிறங்குவது பற்றிய ஆவல் தமிழ் மக்களிடம் பரவலாக ஏற்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் பொது அணி எவ்வாறு அமைக்கப்படும், அதில் எந்தெந்த அரசியல் கட்சிகள் இணையவுள்ளன, இதனை வழிப்படுத்திச் செல்வது யார் என்ற விடயங்கள் ஆர்வத்துக்குரியதாகியுள்ளன.

அதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் விலகிக் கொள்வதற்கான அறிவிப்புக்களும் வெளிவந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி வெளியேறினால், அந்தக் கட்சி பொது அணியில் இணைந்து கொள்வதற்கான சாத்தியங்களும் உண்டு.

இவ்வாறு சுரேஷ் பிரேமச்சந்திரன் பொது அணியில் இணைந்தால் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் அமைப்பின் தீர்மானம் என்னவாக இருக்கும் என்ற கேள்வி அரசியல் ஆர்வம்மிக்கவர்களிடம் மிகுந்து நிற்கிறது.

இந்தக் கேள்விக்குப் பதில் உடன் கிடைக்கக் கூடியதல்ல. பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் துரோணர்போல கௌரவர் பக்கம் நிற்க விரும்புவாரா? அல்லது பொது அணியொன்றின் அவசியத்தை உணர்ந்து அந்தப் பக்கம் வருவாரா? என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஆகையால் எல்லாம் காலம்தான் தீர்மானிக்கும் என்று கூறுவதை விலத்தி பொது அணியில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இணைந்து கொள்வதற்கு வாய்ப்பு உண்டு என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

பொது அணி ஒன்று உருவாகுமாயின் தமிழரசுக் கட்சியின் அதிருப்தியாளர்களும் ஒன்று சேர்ந்து பொது அணியில் இணைந்து கொள்வதற்கான ஏற்பாடுகளும் உள்ளதாகக் கூறப்படுகிறது.

நிலைமை அதுவாயின் உண்மையான கூட்டமைப்பு எது என்ற குழப்பம் உருவாகவே செய்யும்.

எது எவ்வாறாயினும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அஞ்சத் தேவையில்லை. ஏனெனில் அவர்களும் தாங்கள் தமிழ் மக்களுக்காகச் செய்தது என்ன? சாதித்தவை யாவை? என்பன பற்றித் தமிழ் மக்களிடம் எடுத்துக் கூற முடியும்.

இதைவிடுத்து பொது அணி தமிழர்களின் ஒற்றுமையை குழப்புவதாகவோ இது இனப்பிரச்சினைக்கான தீர்வைப் பாதிக்குமென்றோ பிரசாரம் செய்ய வேண்டிய தேவை தமிழரசுக் கட்சிக்கு இருக்காது எனலாம்.

இதைவிடுத்து அதையே செய்ய நினைத்தால், வெறுவாய் சப்புவதாகவே பொருள்படும்.

எது எவ்வாறாக இருந்தாலும் தீர்ப்பு வழங்கும் நீதிபதிகள் எங்கள் தமிழ் மக்களே. அவர்களுக்கு எல்லாம் தெரியும். என்ன நடந்தது என்பதும் தெரியும். ஆகையால் பொது அணியினரும் துணிச்சலோடு தேர்தல் களம் இறங்கலாம்.

மக்கள் எந்தப் பக்கமோ அந்தப் பக்கம் நின்று தர்மம் நிலைக்க சங்கநாதம் செய்வது தான் ஊடகங்களுக்குரிய தர்மமாகும்.

## 'போதைப்பொருளற்ற நாடு'

### மாகாண மட்ட தெளிவூட்டல் வேலை கிளிநொச்சியில் நாளை நடைபெறும்

(கிளிநொச்சி)

கொள்கைத் திட்டமிடல் பொருளாதார அமைச்சினால் நெறிப்படுத்தி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் "போதைப்பொருளற்ற நாடு" என்ற தொனிப்பொருளிலான மாகாண மட்ட தெளிவூட்டல் வேலைத்திட்டம கிளிநொச்சி மாவட்டத்தில் நடத்தப்படவுள்ளது.

இவ்வேலைத்திட்டத்தில் 750 இளைஞர், யுவதிகள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து பங்கு கொண்டு போதைப்பொருளற்ற நாடு சம்பந்தமான விழிப்புணர்வை ஊர்வலங்கள் மற்றும் விரிவுரைகள் மூலம் தெளிவுபடுத்தவுள்ளனர். இந்நிகழ்வு கரடிப்போக்குச் சந்தியில் நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பித்து கிளிநொச்சி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தை சென்றடைந்து விரிவுரைகள் நடைபெற்று நிகழ்வு நிறைவுபெற இருக்கின்றது என யாழ்ப்பாண மாவட்ட காரியாலயதேசியஇளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (2)

## நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

யா/கரணவாய் தாமோதர வித்தியாலய நிறுவுநர் நினைவும் பரிசளிப்பு விழாவும் நாளை பிற்பகல் 1.30 மணியளவில்அதிபர்ஆனந்தராஜா விமலராஜா தலைமையில் பாடசாலையின் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகவடமராட்சிவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) திருமதி அபிராமி பார்த்தீபன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-4)

## இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 12ஆம் திகதி முற்பகல் 10 மணி தொடக்கம் வவுனியா வன்னி இன் விடுதியில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் இடம் பெறவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் கிருஸ்ண பிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமாகிய இரா. சம்பந்தன் உட்பட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் கொழும்பு மாவட்டத்திலுள்ள கட்சியின மத்திய குழு உறுப்பினர்கள் இக்கூட்டத்தில்கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்காலத்தில் இடம் பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாகவும், மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணயங்கள் தொடர்பாகவும், அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கை தொடர்பாகவும் மேற்படி கூட்டத்தில் கலந்துரையாடப்படவுள்ளதாக கட்சியின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.(2)

## இரணைமடுக்குளத்தின் அருகில் முகாமிட்டிருந்த இராணுவம் வெளியேறியது

(பரந்தன்)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தினருகிலுள்ள முகாமிலிருந்த இராணுவம் வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் அண்மையில் அப்பகுதியை விட்டு வெளியேறியுள்ளனர்.

நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமான குறித்த பகுதியில் அமைந்திருந்த நீர்ப்பாசன திணைக்களத்தின் விடுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்து பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை இரணைமடு குளத்திற்கு சுற்றுலாவாக வருகை தரும் பிரயாணிகளிற்கு சிற்றுண்டிச் சாலை அமைத்து வியாபாரமும் செய்து வந்த நிலையில் குறித்த முகாமிலிருந்து இராணுவம் வெளியேறியுள்ளது.

இரணைமடுக் குளத்தின அபிவிருத்திப் பணிகள் நிறைவடையும் நிலையில் குறித்த பகுதி நீர்ப்பாசன திணைக்களத்திற்கு அத்தியாவசியமான பகுதியாக காணப்பட்ட நிலையில் இராணுவத்தினர்அப்பகுதியைவிட்டுவெளியேறியுள்ளனர். எதிர்வரும் காலங்களில் இரணைமடுக் குளத்தைப் பார்வையிட செல்வோர் அனுமதிக்கப்பட்ட பகுதியில் எவ்வித அச்சுறுத்தலும் இன்றி செல்லலாம என பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (2-312)

## 4கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைதானார்

வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் கேரள கஞ்சாவுடன் யாழ்வாசி ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

நேற்று முற்பகல் 11:30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவிற்கு பேருந்தில் எடுத்துவரப்பட்ட 4. கிலோ 350 கிராம் கேரள கஞ்சாவை வவுனியா மத்திய பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில வைத்திருந்த நபர் ஒருவரை சோதனை மேற்கொண்ட போது கைப்பற்றியுள்ளதாகவும் குறித்த கஞ்சாவினை எடுத்து வந்தவா யாழ்ப்பாணம வல் வெட்டித்துறையைச் சேர்ந்த 55 வயதுடைய நபர் எனவும் விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத் தப்படவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (2-281)




அந்த உத்தமனைக் கண்ணுற்ற போதில் உச்சி முதல் பாதம்வரை பரவசம்.

நின்ற நெடுமாலாய், சங்கு சக்கரதாரியாய்க் காட்சி தருகிறான் கலியுகப் பெருமான்!

கீழிரு கரங்களில் வலக்கரம் வரத முத்திரையிலும் இடக்கரம் கடிஹஸ்த முத்திரையிலும் இலங்குகின்றன.

ஸ்ரீதேவியும் பூதேவியும் நெஞ்சின் இரு புறங்களிலும் நிலைத்திருக்கின்றனர்.

ஸ்ரீதேவியே மகாலக்சும். பூமிதேவியே பத்மாவதி.

உச்சிமுதல் உள் பாதம் வரை உடுப்புகளாய் ஒப்பில்லா ஆபரணங்கள்.

இரு புஜங்களிலும் நாகாபரணங்கள். அங்கமெல்லாம் வர்ணஜாலங்களை வாரி இறைக்கும் வைர வைடூரியக் கற்கள். இவை தவிர உன்னதனின் திருமேனி தழுவி உவப்புடன் மலர்ச்சாரங்கள்.

கார்வண்ணனின்கருணை முகம்மட்டும்முகில்மூடாத கரிய நிலவாய் காண்போரைப் பரவசப்படுத்துகிறது. (தொடரும்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**பெரிய வயிறு என்றால் பெண் குழந்தையா?**

பழங்காலத்தில் பெண்ணின் வயிற்றைப் பார்த்து ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று கண்டறிவார்கள். பெண் குழந்தை என்றால் பெரிதாகவும் ஆண் குழந்தை என்றால் வயிறு சிறிதாகவும் இருக்கும் என்பார்கள். கருப்பைக்குள் இருக்கும் நீரானது ஆண் குழ்ந்தைக்கு குறைவாகவும் பெண் குழந்தைக்கு அதிகமாகவும் இருக்கும். ஆக இதை வைத்தே ஆண் குழந்தை, பெண் குழந்தை என்று கண்டறிவார்கள். (தொடரும்)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- கடவுள் பிரம்மாண்டமான பெரிய வட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் மையம், எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்து இருக்கிறது. அந்த மையம்தான் மனிதன்.
- நம்முடைய தெய்வீக இயல்பை வெளிப்படுத்த ஒரே வழி, மற்றவர்கள் தங்கள் தெய்வீக இயல்பை வெளிப்படுத்தும்படி அவர்களுக்கு உதவி செய்வதுதான்.
- கடவுள்ஒவ்வொரு உயிரிலும் குடிகொண்டிருக்கிறார். இதைத் தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை எவ்வளவோ தவங்களுக்குப் பிறகு நான் புரிந்து கொண்டிருக்கிறேன். மக்களுக்குச் சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்குச் சேவை செய்பவனாகிறான்.
- தன்னலமற்ற மனப்பான்மை தான் ஆன்மக வாழ்வின் அடிப்படை. இதை கொண்டே ஒருவரின் ஆன்மகத்தேடுதலை சோதிக்க வேண்டும். சுயநலம் இல்லாதவனே, ஆன்மக வாழ்க்கையைப் பெற்றவனாகிறான்.
- தீமையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் தீமை செய்கிறோம். நன்மையைச் செய்வதனால் நாம் நமக்கும் மற்றவர்களுக்கும் நன்மை செய்து கொள்கிறோம்.

# ஸ்ரீஅம்பாள் வி.கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## நியூட்டன் வெற்றி






ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழகம் நடத்திய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் ரேஞ்சர்ஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதில் அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் மோதிக் கொண்டது.

முதல் பாதியாட்டத்தில் 2:0 என்ற அடிப்படையில் நியூட்டன் முன்னிலை வகித்திருந்தது.

இரண்டாம் பாதியாட்டத்தில் அண்ணா சிலையடி ஒரு கோலினை போட எதிரணியால் மீண்டும் ஒரு கோலினை போட 3:1 என்ற நிலையில் முன்னிலையில் காணப்பட அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகம் அணி வீரரும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் முகமாக அபிதனால் மிகவும் நேர்த்தியாக கோல் ஒன்று போடப்பட்டு மேலும் கோல்கள் பெறப்படும் சந்தர்ப்பம் காணப்பட அது எதிர் அணியால் தடுக்கப்பட ஆட்டம் முடிவுக்கு வர நியூட்டன் 3:2 என்ற அடிப்படையில் வெற்றியீட்டியது. (க)

# வீரரின் செயலால் தடைப்பட்ட கால்பந்து போட்டி



பிரான்ஸில் நடந்த கால்பந்து போட்டியின் போது வீரர் ஒருவரின் செயலால் கோபமடைந்த உள்ளூர் ரசிகர்கள், மைதானத்திற்குள் நுழைந்ததால் போட்டி தடைப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

பிரான்ஸ் St Etienne மற்றும் Lyon ஆகிய கிளப் அணிகளுக்கு இடையே கால்பந்து போட்டி நடந்தது. போட்டியின் போது Lyon அணியை சேர்ந்த நபில் பெகீர், ஐந்தாவது கோல் அடித்த மகிழ்ச்சியில் தனது மேல் சட்டையை கழற்றி, St Etienne அணியின் உள்ளூர் ரசிகர்களின் முன்பு தனது கொண்டாட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனால் கோபமடைந்த ரசிகர்கள் களத்திற்குள் புகுந்தனர். ரசிகர்கள் இடையே சண்டை தொடங்கும் அபாயம் ஏற்பட இருந்த தால் பாதுகாப்பு அதிகாரிகளும் மைதான களத்திற்குள் நுழைந்தனர்.

வீரர்களை பாதுகாக்கவும், ரசிகர்களை வெளியேற்றவும் பாதுகாப்பு அதிகாரிகள் கண்ணீர் புகை குண்டுகளை வெடிக்க செய்தனர்.

இதனால் களத்திலிருந்து வெளியேறிய ரசிகர்கள், தாங்கள் அமர்ந்திருந்த இருக்கைகளுக்கு அருகேயே நின்று கொண்டு எரியும் வகையிலான புகை குண்டுகளை பற்ற வைத்தனர்.

இதனால் மைதானமே புகை மண்டலமாக காட்சியளித்தது. ரசிகர்களை களத்திலிருந்து அப்புறப்படுத்திய பின்னர், 30 நிமிடங்கள் தாமதமாக மீண்டும் ஆட்டம் தொடங்கியது. (க)

# மேலும் சதம் அடிக்க வேண்டும் கோலிக்கு சச்சின் பிறந்தநாள் வாழ்த்து




உலகின் எந்த அணியையும் வீழ்த்தக்கூடிய அணிக்கு கப்டனாக இருக்கும் விராட் கோலி, மேலும் சதங்கள் அடிக்க வேண்டுமென்று கோலி பிறந்த நாளில் சச்சின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான கப்டனாக திகழ்பவர் விராட் கோலி. டெஸ்ட், ஒருநாள் போட்டி மற்றும் 20 ஓவர் என 3 நிலைகளுக்கும் கப்டனாக இருந்து இந்திய அணியை சிறப்பாக வழி நடத்தி செல்கிறார்.

விராட் கோலி தனது 29ஆவது பிறந்தநாளை நேற்று முன்தினம் கொண்டாடினார். ராஜ்கோட்டில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் வீரர்களுடன் சேர்ந்து மிகப்பெரிய கேக்கை வெட்டி அவர் பிறந்த நாளை கொண்டாடினார்.

நியூசிலாந்துக்கு எதிரான 2-வது 20 ஓவர் போட்டியில் ஏற்பட்ட தோல்வியை கவலைப்படாமல் விராட் கோலி உற்சாகத்துடன் கொண்டாட்டத்தில் ஈடுபட்டார்.

விராட் கோலிக்கு சக வீரர்கள், பயிற்சியாளர் ரவிசாஸ்திரி மற்றும் முன்னாள் வீரர்கள் என பல்வேறு தரப்பில் இருந்தும் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கிரிக்கெட்டில் சகாப்தமான டெண்டுல்கர் டுவிட்டரில் தெரிவித்துள்ள பிறந்தநாள் வாழ்த்து செய்தி வருமாறு,

விராட் கோலி எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடிய இளம் வீரர் ஆவார். உலகின் எந்த அணியையும் வீழ்த்த கூடிய அணிக்கு கப்டனாக இருக்கிறார். அவர் மேலும் சதங்களை வெற்றிகரமாக அடித்தும், நீண்ட நாள் வாழவும் வாழ்த்து தெரிவிக்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பயிற்சியாளர் ரவி சாஸ்திரி கூறும் போது, விராட் கோலிக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள். அவருக்கு வரும் ஆண்டுகளும் புகழ் பெற்றதாக இருக்க வேண்டும் என்றார்.

இலங்கை அணியின் முன்னாள் கப்டன் மத்யூஸ் கூறும்போது, விராட் கோலி நவீன கிரிக்கெட்டின் சகாப்தம் ஆவார். உலகின் சிறந்த வீரர்களில் ஒருவராவார். அவருக்கு இந்த ஆண்டு மிகவும் சிறந்ததாக இருந்தது. விராட் கோலிக்கு மகிழ்ச்சியான பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன் என்றார்.

இதேபோல ரெய்னா, ரோகித் சர்மா, வி.வி.எஸ்.லட்சுமண் ஆகியோரும் டுவிட்டர் மூலம் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலும் (ஐ.சி.சி) விராட் கோலிக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளது. (க)

# டோனி இளைஞர்களுக்கு விட்டுக்கொடுக்க வேண்டும்

## வி.வி.எஸ்.லட்சுமன்

நியூசிலாந்திற்கு எதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில் இந்தியாவின் தோல்வியை அடுத்து டோனி இளைஞர்களுக்கு இருபது-20 வாய்ப்பை விட்டு கொடுக்க வேண்டும் என வி.வி.எஸ் லட்சுமன் கூறினார்.

நியூசிலாந்திற்கு எதிரான இருபது-20 போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா தோல்வியடைந்தது. அதற்கு டோனியின் சராசரியான ஆட்டமே காரணம் என முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் வி.வி.எஸ் லட்சுமன் மற்றும் அகர்கர் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது குறித்து லட்சுமன் கூறுகையில், "டோனி சர்வதேச போட்டிகளில் சிறப்பாக விளையாடுகிறார். அதில் அவரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆனால் இருபது-20 போட்டிகளில் அவரின் ஆட்டம் சிறப்பானதாக இல்லை. எனவே, டோனி இளைஞர்களுக்கு வாய்ப்பை விட்டு கொடுக்கலாம். இளம் வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்தால் இந்திய அணி சிறப்பாக இருக்கும் என தெரிவித்தார்.

முன்னாள் வீரர் அகர்கர் பேசுகையில், இந்திய அணி இருபது-20 போட்டிகளில் புதிய இளம் வீரர்களை சேர்க்க வேண்டும். ஒருநாள் போட்டிகளில் டோனி சிறப்பாக விளையாடுகிறார். கப்டனாக மட்டுமல்ல பட்ஸ்மனாகவும் அவர் சிறப்பாக செயற்பட வேண்டும் அவர் கோலியுடன் இணைந்து ரன்கள் குவித்திருந்தால் இந்தியா வெற்றி பெற்றிருக்கும் என கூறினார்.

இந்த தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் உள்ளது. இன்று திருவனந்தபுரத்தில் நடைபெறவிருக்கும் மூன்றாவது ஆட்டத்தின் முடிவைப் பொறுத்தே கோப்பை யாருக்கு? என்பது தெரியவரும். (க)

# பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் பட்டம் வென்றார், ஜாக் சோக்



பிரான்சில் நடைபெற்று வந்த பாரீஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் இறுதி போட்டியில், அமெரிக்க வீரர் ஜாக் சோக் சம்பியன் பட்டம் பெற்றார்.

பாரீஸ் மாஸ்டர்ஸ் சர்வதேச டென்னிஸ் போட்டி பிரான்சில் நடந்தது. இதில் நேற்று முன்தினம் நடந்த ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் அமெரிக்க வீரர் ஜாக் சோக் 5-7, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் பிலிப் கிராஜினோவிச்சை (செர்பியா) வீழ்த்தி பட்டத்தை தனதாக்கினார்.

ஆயிரம் தரவரிசை புள்ளிகளை வழங்கும் இத்தகைய மாஸ்டர்ஸ் போட்டியில் அவர் பட்டம் வென்றிருப்பது இதுவே முதல் முறையாகும். மேலும் 1999ஆம் ஆண்டு ஆந்த்ரே அகாசிக்கு பிறகு பாரீஸ் போட்டியில் வெற்றி கண்ட முதல் அமெரிக்க வீரரும் இவர் தான்.

இதன் மூலம் லண்டனில் நடக்கும் டொப்-8 வீரர்கள் மட்டுமே பங்கேற்கும் உலக டூர் சம்பியன்ஷிப் போட்டிக்கும் 25 வயதான ஜாக் சோக் தகுதி பெற்றார். தரவரிசையில் 22ஆவது இடத்தில் உள்ள ஜாக் சோக் இந்த வெற்றியின் மூலம் டொப்-10 இடத்திற்குள் நுழைகிறார். (க)

## யாழ்.பல்கலை...

வணிக பீடங்கள் எதிர்வரும் 13ஆம் திகதி முதல் ஆரம்பமாகும் என யாழ்.பல்கலைக் கழக பதிவாளர் அறிவித்துள்ளார்.

மேலும் மேற்படி பீட மாணவர்கள் எதிர் வரும் 12ஆம் திகதி காலை தொடக்கம் விடு திகளுக்கு திரும்ப முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் பதிவாளர் அறிவித்துள்ள தாவது,

நிறுத்தப்பட்ட பீட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் யாவும் 13.11.2017ஆம் திகதி யிலிருந்து ஆரம்பிக்கப்படும். விடுதிகளில் தங்கியிருக்கும் மேற்படி பீட மாணவர்கள் 12.11.2017 அன்று காலை தொடக்கம் விடு திகளுக்கு திரும்புமாறு கேட்டுக்கொள்ளப்ப டுகின்றனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக த்தின் பிரதான வளாகத்தை எல்லா மாணவ ர்களுக்கும் உட்புகுவதற்குத் தடைவிதிக்க ப்பட்ட பிரதேசமாக அறிவித்திருந்தமை 12.11.2017 (ஞாயிற்றுக்கிழமை) ஆம் திகதி யிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் விலக்கப்படுகிறது.

30.10.2017 மற்றும் 31.10.2017 அன்று நடைபெறவிருந்த விஞ்ஞானபீடப் பரீட்சை கள் முறையே 13.11.2017 மற்றும் 14.11.2017 ஆம் திகதிகளில் நடைபெறும். இரண்டாம் அரையாண்டிற்கான கல்வி நடவடிக்கைகள் யாவும் 15.11.2017ஆம் திகதியிலிருந்து ஆர ம்பிக்கப்படுகின்றன.

30.10.2017ஆம் திகதியிலிருந்து நடை பெறவிருந்த முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட நடு அரையாண்டுப் பரீட்சைகள் 13.11.2017ஆம் திகதியிலிருந்து நடை பெறும் என அறிவித்துள்ளார். (ம-4)

## மருத்துவ பீட மாணவர்...

கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய கலா நிதி எஸ்.ரவிராஜ், களனிப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் நிலாந்தி டீ சில்வா, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சுறாங்கி ஜசவர்த்தன, இலங்கை கிழக்குப் பல்கலைக் கழக மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி அஞ்சலா அருட்பிரகாசம், இலங்கை ரஜரட்டப் பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரி யர் சிசிர சிறிபத்தன ஆகியோர் கூட்டாக விடு த்த அந்த அறிக்கை வருமாறு,

சைட்டம் நிறுவனத்தின் மருத்துவ பீடம் தொடர்பாக எழுந்த பிரச்சினைகளைத் தீர்க் கும் முகமாக ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன அவர்களால் நியமனம் செய்யப்பட்ட ஜனாதிபதி குழுவினால் முன்வைக்கப்பட்ட தீர்வு தொடர்பாக 29 ஒக்டோபர் 2017இல் அரச தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாய கத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை நாம் வரவேற்கின்றோம்.

அரசாங்க அறிக்கையில் வெளிப்படுத்தப் பட்டதன் பிரகாரம் சைட்டத்தின் மருத்துவ பீடமானது இல்லாது ஆக்கப்படும். மேலும், மாணவர்கள் உள்வாங்கலும் நிறுத்தப்படவு ள்ளது. அத்துடன் அதற்கு மாற்றீடான புதிய நிறுவகம் இலங்கை மருத்துவ பேரவை யின் புதிய சான்றுப்படுத்தல்களுக்கேற்ப மீள மைக்கப்படும். மருத்துவக் கல்விக்கான மிகக் குறைந்த தரம், உயர்கல்வி அமைச்சின் பட் டம் வழங்கப்பதலுக்கான சட்ட ரீதியாக ஏற் றுக்கொள்ளப்பட்ட விதிமுறைகளுக்கு அமை வாகவும் உருவாக்கப்படும். இவற்றினைக் கருத்திற் கொண்டு எமது பீடங்களின் சகல மருத்துவ மாணவர்களையும் உடனடியாக தங்களுடைய கல்வி செயற்பாடுகளுக்கு திரு ம்புமாறு நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

மேலும் ஜனாதிபதி ஆணைக்குழுவால் சிபாரிசு செய்யப்பட்டதன்படி குழுவின் உறு ப்பினர்களையும் குறிப்பு விதிமுறைகளை யும் ஒருங்கிணைப்பதற்கு உயர்மட்ட அதிகா ரிகளை மிகவும் விரைவாக நியமிக்குமாறு நாம் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கின்றோம். மேலும் உயர்கல்வி அமைச்சு, சுகாதாரம் மற்றும் நிதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அரச மருத்துவ பீட ங்களின் பீடாதிபதிகள் அக்குழுவில் பிரதி நிதித்துவப்படுத்துவதை உறுதிப்படுத்து மாறும் அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

அத்துடன் இலங்கை மருத்துவ பேரவை க்கு எதிராக சைட்டம் பட்டதாரி மாணவர்களி னால் தொடரப்பட்ட வழக்கின் மேல்முறையீ ட்டு நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக மருத்துவ பேரவையால் தொடரப்பட்ட வழக்கின் அடு த்த தவணையில் 29 ஒக்டோபர் 2017இல் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாடு பற்றி சட்டமா அதி பர் திணைக்களத்தினூடாக உச்ச நீதி மன்றிற்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றோம். (ந)

## எரிபொருளுக்காக...

பணியாளர்களுடன் வாகன உரிமையா ளர்கள் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளமையையும் அவதானிக்க கூடியதாக இருந்தது.

நாட்டில் திடீரென ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாட்டை அடுத்து இருப்பில் உள்ள எரி பொருளை நிரப்பும் வகையில், மக்கள் முண்டியடித்து கொண்டிருந்தனர்.

இதனால் பெற்றோலை வழங்கும் எரி பொருள் நிரப்பு நிலைய பணியாளர்கள் பல் வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்த தோடு, பெற்றோலை போத்தல்களில் பெற்றுக் கொள்ள வந்தவர்களுக்கு பெற்றோல் வழ ங்கப்படாத நிலையில் அவர்கள் எரிபொருள் நிரப்பு நிலைய பணியாளர்களுடன் தர்க்க த்தில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் நாட்டில் எரிபொருட்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக எரிபொருள் நிர ப்பு நிலைய ஊழியர்களே காட்டிக்கொள்ளு வதாகவும் அவர்கள் விசனம் தெரிவித்துள் ளனர்.

எனினும் அனைவருக்கும் பெற்றோல் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவும், தம்மிடம் கையிருப்பில் உள்ள பெற்றோல் வாகன உரிமையாளர்கள் அனைவருக்கும் சமமான முறையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக மோட்டார் சைக்கிள்,முச்சக்கர வண்டி மற்றும் கார் போன்றவற்றிற்கு மட் டுப்படுத்தப்பட்ட அளவில் பெற்றோல் வழங்க ப்பட்டு வருவதாகவும்,

பாகுபாடுகள் இன்றி சமமான முறையில் பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருவதாக வும், பெற்றோல் நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். எனினும் சிலருக்கு மாத் திரம் போத்தல்களில் பத்து லீற்றருக்கும் அதி கமான அளவு எரிபொருட்கள் நிரப்பப்பட்ட மையை காண முடிந்தது. (ம-4)

## வடக்கு-கிழக்கு...

உத்தேச புதிய அரசியலமைப்பில் ஒரு மித்த நாடு - பிரிக்கப்பட முடியாத நாடு என்ப தை நாம் ஏற்றுள்ளோம் என்று எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித் தார்.

திருகோணமலை மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக்கூட்டம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

புதிய அரசியலமைப்பு எல்லா இனத்த வருக்கும் நீதி, நியாயம் கிடைக்கக்கூடியதாக அமைய வேண்டும். எந்த ஒரு இனமும் அத னால் பாதிக்கப்படக் கூடாது.

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்ட தமிழ்மொழி நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பில் உத்தியோகபூர்வ மொழிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. 9 மாகாணங்களுள் 7 மாகாணங்களில் சிங்க ளம் உத்தியோகபூர்வ மொழியாக இருக்கும். வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் உத்தியோகபூர்வ மொழியாக இருக்கவேண் டும்.

சில பிரதேச செயலக பிரிவுகளில் மக்கள் தொகை விகிதாசாரத்துக்கேற்ப தேவையான மொழி பயன்படுத்தப்படலாம்.

திருகோணமலை மாவட்டத்தில் 75 வீத த்துக்கும் அதிகமானோர் தமிழை தாய் மொழி யாக கொண்டுள்ளனர். அரசியலமைப்பின் அடிப்படையில் இங்கு பணிபுரியும் உத்தி யோகத்தர்கள் தமிழ் மொழியில் பணியாற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

நாட்டில் அமைதி, சமத்துவம், நிலவ அர சியலமைப்பில் குறிப்பிடப்பட்ட இவ்வாறான விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்" என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலை வர் இரா.சம்பந்தன் மேலும் தெரிவித்தார். (ம-4)

## அரச காணிகளில்...

உரிமைகளைப் பெறுவதில் தற்போது ள்ள நிபந்தனைகள் காரணமாக அவற்றில் குடியிருப்பவர்கள் சிரமங்களுக்கு உள்ளா னார்கள். அதனால் நிபந்தனைகளைத் தள ர்த்தி பொதுமக்களுக்கு உதவி வழங்கும் நோக்கில் இது தொடர்பான சட்டவரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கும் நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுவரையில் அரச காணிகளில் குடியி ருப்போருக்கு காணி உறுதிகள் இல்லாமை யால் பல வருடங்களாக பல்வேறு சிரமங் களை எதிர்நோக்கினார்கள். அரச காணிக ளில் குடியிருப்போருக்கு துரிதமாக காணி களை அளவீடு செய்து அனுமதிப்பத்திரம், காணி உறுதிகளை வழங்குவதற்கு நடவ டிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் 2020-ம் ஆண்டளவில் அரச காணிகளில் குடியிருக் கும் 20 இலட்சம் மக்களுக்கு தமது காணி உறுதிகளை பெற்றுக்கொடுப்பதற்கும் நட வடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமை ச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்தார். (ம-4)

# இந்த மண்ணுக்கான சரித்திரகால புருஷனாக பிரபாகரனை கண்டேன்

## மீண்டும் பாரதிராஜா தெரிவிப்பு

புத்தகங்களினூடாக நான் பார்த்த வீர மகன்தான் பிரபாகரன் என திரைப்பட இய க்குநர் பாரதிராஜா மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஈழம் 87 என்ற புத்தக வெளியீட்டு விழா சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற் றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

தொடர்ந்து தெரிவிக்கையில்,

"இந்த மண்ணுக்கான சரித்திரகால புரு ஷனை நான் என் கண்ணூடாக ஈழமண் ணில் பிரபாகரனாக பார்த்தேன்." என புகழா ரம் சூட்டினார்.

ஏழு நாட்கள் நான் வடக்கில் இருந்தேன், பிரபாகரனுடன் இருந்தேன், பெண் போராளி களுடன் இருந்தேன், அவர்களுக்கு 3 நாள் பாடம் எடுத்தேன். அப்போது அவர்களுடைய செயலைக்கண்டு அதிர்ச்சியடைந்தேன் என குறிப்பிட்டார்.

எனினும் இந்திய துணைக்கண்டத்தை வரலாறு மன்னிக்காது. இன்னும் சற்று விட்டு இருந்தால் ஈழம் மலர்ந்திருக்கும். நான் நேரில் பார்த்தவன். அனைத்தையும் கெடுத்து விட் டார்கள் என கவலை வெளியிட்டார்.

பிரபாகரனை நான் காண சென்ற போது என்னை அவர் கட்டித்தழுவினார். என்னு டைய மண்வாசனை படத்தை பார்த்தேன் என குறிப்பிட்டு, எங்களுடைய வரலாற்றை எமது பிள்ளைகளைக் கொண்டு படமாக எடு க்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதற்கு நான் "என் பிள்ளைகளுக்கு திரு மணம் முடிந்து விட்டு வருகின்றேன்" என பதில் கூறினேன்.

தற்போது புகழேந்தி எழுதிய ஈழம் 87 புத்தகமே ஒரு ஆயுதம்தான். இந்த புத்தக த்தை பரப்புங்கள் அனைவருக்கும். அப்போது தான் அனைவருக்கும் தெரியும் பிரபாகரன் என்றால் யார் என்று என குறிப்பிட்டார்.

சுபாஸ் சந்திரபோஸ் இன்னொரு பிரபா கரன். பிரபாகரனுக்கு எப்பொழுது எல்லாம் மனம் துயில்கின்றதோ அப்போது எல்லாம் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களுடைய புத்த கத்தை படிப்பதாக குறிப்பிட்டார் என பாரதி ராஜா தெரிவித்துள்ளார். புலம்பெயர்ந்து சென்ற அனைத்து இலங்கைத் தமிழர்க ளும் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கின் றார்கள் என பெருமையாக கூறினார்.

தமிழன் என்ற ஒரு இனம் வலிமையான இனம் என்று உலகுக்கு சொன்னது பிரபாகர னுக்கு பின்னர் தான் எனவும் பாரதிராஜா தெரிவித்துள்ளார். மேலும், வைகோவுக்கு ஐ.நாவில் சிங்களவர்களுடன் தர்க்கம் ஏற் பட்ட போது நான் யாழ்ப்பாணத்தில் இருந்தேன்.

இந்த நேரத்தில் என்னுடன் இருந்தவர்கள் என்னை பயமுறுத்தினார்கள். அப்போது நான் கூறினேன்.

"வைகோவைப்பார்த்து வளர்ந்த எனக்கு அவருடைய தைரியம் கொஞ்சம் கூட இரு க்காதா? என குறிப்பிட்டதுடன், வைகோ ஒரு புலி.. வைகோ ஒரு புலி.. நான் புலி இல்லை என்றாலும், குதறி எடுக்கும் நாயாக சரி இரு ந்து விடுகின்றேன்" என இறுதியாக கூறி விட்டுச் சென்றார் பாரதிராஜா. (ம-4)

# எந்தவொரு அரசாங்கமும் மேற்கொள்ளாததை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்கின்றது

## ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

(கொழும்பு)

நட்புறவான வெளிநாட்டுக் கொள்கை யின் ஊடாக இன்று இலங்கைக்கு கிடைத்தி ருக்கும் சர்வதேச ஒத்துழைப்பை நாட்டை கட்டியெழுப்புவதற்கும் சிறுவர்களுக்கு சிற ந்ததோர் எதிர்காலத்தை கட்டியெழுப்புவத ற்கும் அரசாங்கம் பயன்படுத்தும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரி வித்தார்.

மாத்தறை, தெய்யந்தர தேசிய பாடசாலை யில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகப் பிரிவை நேற்று பிற்பகல் திறந்து வைத்து உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலைக்கு சென்ற ஜனாதிபதி அவர் களை பாடசாலை மாணவர்கள் மகிழ்ச்சியு டன் வரவேற்றனர். நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து நிர்வாக பிரிவு உள்ளி ட்ட புதிய மாடிக் கட்டிடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, அங்கு வைக்கப்பட்டிருந்த விரு ந்தினர் புத்தகத்திலும் குறிப்பொன்றை பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ் வில் உரையாற்றிய ஜனாதிபதி, நாட்டின் சிறு வர்களுக்கு சிறந்த கல்வியை பெற்றுக்கொடு க்கவும் நாட்டின் பொருளாதாரத்தை பலப்படு த்தி சுபீட்சமானதொரு நாட்டைக் கட்டியெ ழுப்பவும் அரசாங்கம் தனது பொறுப்பையும் கடமையையும் நிறைவேற்றும் என்றும் தெரிவித்தார்.

ஒரு நாட்டை அபிவிருத்தி பாதையில் கொண்டு செல்வதற்கு, அந்நாட்டின் கல்வி மான்கள் உருவாக வேண்டுமெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டின் இலவசக் கல்வியை பலப்படுத்துவதற்கு எந்தவொரு அரசாங்க மும் மேற்கொள்ளாத பணிகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

அமைச்சர்களான மகிந்த அமரவீர, பைசர் முஸ்தபா, தென் மாகாண முதலமை ச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, கல்லூரி அதிபர் டப்ளியு.டப்ளியு.அமரசேன, ஆசிரிய ர்கள், பெற்றோர்கள், மற்றும் பழைய மாண வர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதே நேரம் மாத்தறை மாவட்டத்தில் முல ட்டியன, தெய்யந்தர பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட அபிவிருத்தி பணிகளை நேற்று ஜனாதிபதி மக்களிடம் கையளித்தார்.

மாகாண சபை உள்ளூராட்சி அமைச்சு, தென் மாகாண சபை இணைந்து புறநெகும திட்டத்தின் கீழ் நிர்மாணித்த முலட்டியன பிரதேச சபையின் புதிய அலுவலக கட்டிடம் மற்றும் பல்நோக்கு கட்டிடம் நேற்று முற்பகல் ஜனாதிபதியால் மக்களிடம் கையளிக்கப்ப ட்டது.

விரிவான மக்கள் சேவையை வழங்கும் நோக்குடன், 110 மில்லின் ரூபா செலவில் சகல வசதிகளையும் கொண்ட வகையில் இந்த கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மாத்தறை தெய்யந்தர சனச வங்கி கட்டி டத் தொகுதி நேற்று ஜனாதிபதியால் மக்க ளிடம் கையளிக்கப்பட்டது.

கூட்டுறவு திணைக்களத்தின் வழிகாட்ட லின் கீழ் நவீன தொழில்நுட்பங்களுடன் அனைத்து வசதிகளையும் கொண்ட வகை யில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

நினைவுப் பலகையை திரை நீக்கம் செய்து புதிய வங்கிக் கட்டடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி, விசேட நினைவுக் குறிப்பொன்றை பதிவு செய்ததுடன், முதலாவது கொடுக்கல் வாங்கல் நடவடிக்கையையும் ஆரம்பித்து வைத்தார்.

சனச சங்கத்தின் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவந்தெனிய மற்றும் மாத்தறை மாவ ட்ட சனச சங்கத்தின் தலைவர் எம்.ஜி.சுனில் காந்த ஆகியோருக்கு ஜனாதிபதியால் நினைவு விருதுகள் வழங்கிவைக்கப்ப ட்டன.

சனச முலட்டியன சங்கத்தின் தலைவர் எச்.பி.டி.சந்திரசிறி அவர்களினால் ஜனாதிபதி க்கு நினைவுச் சின்னம் ஒன்று வழங்கப்ப ட்டது.

அமைச்சர்களான மகிந்த அமரவீர, பைசர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் லக் ஷ்மன் யாப்பா அபேவர்தன, தென் மாகாண முதலமைச்சர் ஷான் விஜயலால் டி சில்வா, மாத்தறை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-4)

## தனியார் பஸ் புத்...

புத்தளம் - முந்தல் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 10 ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று முச்சக்கர வண்டியை முந்திச்செல்ல முயற்சித்த சந்தர்ப்பத்தில் இந்த விபத்து இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, பஸ்ஸில் பயணித்த 47 பேரும் முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த 49 பேரும் புத்தளம், சிலாபம் மற்றும் முந்தல் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் 27 பேர் புத்தளம் ஆதார வைத்தியசாலையிலும், 9பேர் சிலாபம் வைத்தியசாலையிலும், 8பேர் முந்தல் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டோர் பின்னர், சிலாபம் பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் அதில இருவர் தீவிர கண்காணிப்புப் பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிரிழந்தவர்களின் சடலங்கள் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், முந்தல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-4)

## மகிந்தவின் குற்...

எங்களுடன் இணைந்து தீர்வுகாண முற்பட்டிருந்தால் இன்று சிறந்த தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும். தீர்வை முன்வைப்பதற்காக எம்மால் எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைத்திருக்கவில்லை என்று முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டை முன்வைத்திருந்தார்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கொழும்பு வார இறுதி நாளிதழ் ஒன்று கேள்வியெழுப்பியிருந்தது. இதற்கு பதிலளித்தபோதே இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கூறியுள்ளார். (ம-4)

## நாளாந்த தேவை...

துங்க தெரிவித்தார்.

தற்பொழுது பொதுமக்கள் மத்தியில் எரிபொருள் தொடர்பான குழப்பநிலையை சிலர் தோற்றுவித்ததினாலேயே பெற்றோல் போன்ற எரிபொருளுக்கு நெருக்கடி நிலை ஏற்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

சிலர் பெற்றோல் தொடர்பில் ஏற்படுத்திய குழப்ப நிலையின் காரணமாக பலர் போத்தல்களிலும் கான்களிலும் அளவுக்கதிகமாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோலை கொள்வனவு செய்து வெளியில் விற்பனை செய்துள்ளனர்.

எரிபொருளுக்கான போலியான நெருக்கடி நிலையை ஏற்படுத்தி சிலர் இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டமை கண்டறியப்பட்டமையினால் கான்களுக்கும் போத்தல்களுக்கும் பெற்றோல் எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் வழங்கக்கூடாது என்று தடைவிதிக்கப்பட்டதாக நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க இந்த விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எரிபொருளுடனான கப்பல் 8ஆம் திகதியளவில் இலங்கையை வந்தடையும் என்றும் அதன் பின்னர் விநியோக நடவடிக்கைகள் வழமை போல் இடம்பெறும் என்றும் தெரிவித்தார்.

நாளாந்த தேவையான 2ஆயிரத்து 500 மெற்றிக்தொன் எரிபொருளை விநியோகிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் எரிபொருள் கையிருப்பில் உண்டு என்று தெரிவித்த அமைச்சர், வழமையாக அவ்வப்போது தமது தேவைக்கு அளவாக எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் முதலானவற்றை பெற்றுக்கொள்வோர் இந்த விசமிகளின் குழப்பநிலை காரணமாக எரிபொருளை மேலதிகமாக சேகரித்து வைத்தனர் என்றும் சுட்டிக்காட்டினார்.

மக்கள் எரிபொருள் தொடர்பில் பீதி கொள்ளத்தேவையில்லை . எம்மிடம் தற்பொழுது 10ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் உண்டு. கடந்த 18ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ள எரிபொருள் உரிய தரத்தை கொண்டிருக்கவில்லை. அதனால் நாம் அதனை நிராகரித்தோம். 31 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கு மாற்றான எரிபொருளை இலங்கைக்கு அனுப்பி வைப்பதாக அந்த நிறுவனம் தெரிவித்திருந்தது. இதனை சுத்திகரித்து எடுத்துக்கொள்வதற்கும் சிலர் ஆலோசனை தெரிவித்தனர்.

ஆனால் நடைமுறை விதிமுறைகளுக்கு அப்பால் நாம் இவ்வாறானவற்றை செய்ய விரும்பவில்லை. இதனை பயன்படுத்தியே சிலவிசமிகள் நாட்டு மக்கள் மத்தியில் எரிபொருள் தொடர்பில் குழப்பநிலையை தோற்றுவித்தனர்.

இதன் பின்னணியில் செயற்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்படும். அதற்கு முன்பாக தற்போது எரிபொருள் விநியோகத்தில் உள்ள குழப்பநிலையை நீக்கி விநியோகத்தை வழமை நிலைமைக்கு கொண்டுவருவதே தனது முக்கிய நோக்கமாகும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-4)

## யாழில் போலி...

இதன்போது கைப்பற்றியுள்ளனர்.

மேலும், 5 ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாள்கள் 400, ஆயிரம் ரூபாய் போலி நாணயத் தாள்கள் 148 உம் கைப்பற்றப்பட்டுள்ளன.

முதலில் சந்தேக நபரின் மனைவியை நேற்றுப் பிற்பகல் பொலிஸார் கைது செய்துள்ளதாகவும், பின்னர் குறித்த 24 வயதுடைய குறித்த சந்தேக நபரின் கணவர் பொலிஸில் சரணடைந்துள்ளதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட இருவரும் பல குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக யாழ். பொலிஸார் குறிப்பிட்டுள்ளதோடு, இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்து வருவதாக குறிப்பிட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் இன்று அல்லது நாளை யாழ். நீதவான் நீதிமன்றில் விசாரணைகளின் பின்னர் ஆஜர்ப்படுத்தபடலாம் என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-4-9)

## காற்றாடிக்குள்...

கிழக்கு அறிவொளி வீதியை சேர்ந்த இரத்தினம் தவமலர் (வயது 61) என்ற பெண்ணே மேற்படி உயிரிழந்தவராவர்.

குறித்த பெண் தனது ஒரு மகளுடன் வசித்து வந்துள்ளார். இவர் கூலி வேலை செய்து வருபவர். நேற்று முன்தினம் வழமைபோல் ஒரு வீட்டில் வேலைக்கு சென்றுள்ளார். அங்கு வெங்காயம் நனைந்திருந்த காரணத்தால் அதை உலர்த்தும் வேலையை ஆரம்பித்துள்ளனர்.

இரு சக்கர உழவு இயந்திரத்தில் காற்றாடியை பொருத்தி உலரவைத்துள்ளனர். குறித்த பெண் காற்றாடிக்கு அருகில் நின்று வெங்காயத்தை உலர்த்திய போது அவர் அணிந்திருந்த உடை காற்றாடியினுள் சிக்குண்டதால் உடனடியாகவே அவர் காற்றாடிக்குள் சிக்குண்டு உடலின் பின் பகுதி அனைத்தும் துண்டு துண்டாய் பிளந்து தூக்கி வீசப்பட்டார்.

உடனடியாக அவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்ட போது அங்கு அவர் உயிரிழந்துள்ளார்

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-9-30)

## நல்லிணக்கச்...

வரான நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, அவரை உடன் பதவியிலிருந்து நீக்கும்படியும் அரசிடம் கோரிக்கை விடுத்தார்.

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியின் பங்காளிக கட்சிகளில் ஒன்றான பிவித்துரு ஹெல உறுமய ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, 1999ஆம் ஆண்டிற்குப் பின் அவர் சுய நினைவோடுதான் பேசினார். அவர் குண்டுத் தாக்குதலை எதிர்கொண்டதன் விளைவாக அவரது மூளை பாதிக்கப்பட்டதுடன், வெடித்துச் சிதறிய குண்டுத் துண்டு இன்னும் அவரது மூளையில் காணப்படுகிறது. அதனை அகற்ற சத்திரசிகிச்சை மேற்கொண்டால் அவரது உயிருக்கே அது ஆபத்தாகிவிடும். அதனால் அவரது மூளை குண்டுத் துண்டுடன்தான் இயங்குகின்றது.

எனவே அவரது அறிவிப்பு தொடர்பில் பதிலளிக்கவோ அல்லது அவமானப்படுத்தவோ இயலாது. மாறாக ஆயுள் நோயாளி என்ற வகையில் அவர் மீது அனுதாபம்தான் வருகிறது.

எனினும் அரசாங்கத்திற்கு ஒரு கடமையிருக்கிறது. எங்களுடன் பேச்சுவார்த்தைக்கு வந்தால் அடித்து தாக்குவதாக சந்திரிகா குமாரதுங்க அம்மையார் மிகவும் ஆக்ரோஷமாக கூறியதை நான் கண்டேன். கடந்த காலத்தில் வடமேல் மாகாண சபை தேர்தலில் மிகவும் கலவரத்தை ஏற்படுத்திய நபர் இன்று நல்லிணக்க செயலணியின் தலைவராக இருப்பதால் நாட்டில் எவ்வாறான நல்லிணக்கம் ஏற்படும் என்பது சந்தேகமே.

உண்மையிலேயே நல்லிணக்கத்தை ஏற்படுத்த இந்த அரசாங்கத்திற்கு அவசியம் இருந்தால் சந்திரிகா அம்மையாரை நல்லிணக்கச் செயலணியின் தலைவர் பதவியிலிருந்து விலக்கிவிட்டு மிகவும் சமாதானமாக அணுகக்கூடிய ஒருவரை நியமிக்கும்படி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறுகின்றோம் என்றார். (ம-4)

## வழுக்கி விழுந்து...

போது வழுக்கி விழுந்துள்ளார். கடந்த 2 ஆம் திகதி இவரை வைத்தியசாலையில் சேர்த்து சிகிச்சை அளிக்கப்பட்டது. இருப்பினும் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழ்ந்துள்ளார்

அதேபோன்று வண்ணார்பண்ணை காக்கைதீவை சேர்ந்த தியாகராசா இராமநாதன் (வயது 63) என்பவர் நேற்று முன்தினம் கடும் மழை பெய்துகொண்டிருந்த போது வீட்டின் வெளியே சென்றுள்ளார். அப்போது நிலத்தில் சறுக்கி விழுந்துள்ளார். வைத்தியசாலைக்கு கொண்டு வந்த போது இவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-9-30)


### அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 08,10.2017 ஞாயிற்றுக்கிழமை அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் முருகேசு கார்த்திகேசு**



நடுக்குறிச்சி நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் மணியந்தோட்டம் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் முருகேசு கார்த்திகேசு அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (07.11.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

43, 1-ம் குறுக்குத்தெரு,
மணியந்தோட்டம், கொழும்புத்துறை.

(கி-314)

இங்ஙனம் :
குடும்பத்தினர்



### ஆங்கில வகுப்பு

தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 0767070069
(1236) M.Suren



### வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

அமெரிக்க லொத்தர் விசா (Green Card)முடிவடைய இன்னும் சில நாட்களே உள்ளன. உடனடியாக எம்மிடம் பதிவுகளை மேற்கொண்டு இவ் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500
(C-290)

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும் நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | வேலணை | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | மீசாலை | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா



### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு குலுக்கல் மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

(C-221)



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS - 0768226240

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



### அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்



18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

இன்னும் ஓரிரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன.

0768226243

பெரும்பாலும் அடுத்த வருடம் இந்த இலவச வீசா வாய்ப்புக்கள் இருக்காது.ஆகவே இப்போதே முந்துங்கள்.

அலுவலர்களின் நன்மை கருதி சனி மற்றும் ஞாயிறு உட்பட மாலை 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

கொட்டும் மழையிலும் குழந்தைகளுடனான சிரமத்தினையும் பாராது நானும் எனது மனைவியும் V2 TRAVELS இல் அமெரிக்கா லொத்தர் விசாவிற்கு பதிவு செய்தோம்.கைமேல் பலனாக இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் இருக்கிறோம். திறமையாக பதிவுசெய்த V2 TRAVELS க்கு நன்றிகள்.

2016 ல் ஜெக்கூடாக 51 பேர் விசா வாய்ப்பை பெற்றுள்ளார்கள்

குடும்பத்தினருக்கு இரண்டு விசா சந்தர்ப்பங்கள்



வே.காமலேந்திரன் -குடும்பம்
அமெரிக்கா விசா வெற்றியாளர்

இறுதி சந்தர்ப்பம் உடனே விரையுங்கள்

V2 TRAVELS

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | சாவகச்சேரி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|---|
| #49A, சப்பல் லேன் | A9 வீதி, | 10,பேருந்து நிலையம் | மூடக்காட்டு சந்தி | 324,யாழ் பிரதான வீதி | யாழ் வீதி,வல்வெட்டி |
| 0768226241 | 0768226240 | 0768226242 | 0776699692 | 0768226230 | 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.